# தமிழரசு

1—11—1976

மலர் : 7 இதழ் : 9


## இந்த இதழில்....


| | பக்க எண் |
|---|---|
| தமிழ்நாட்டில் தொழிலாளர் நல மேம்பாடு ... | 2 |
| தொழிலாள சகோதர சகோதரிகளின் நல்வாழ்வை மேம்படுத்துவோம்! ... | 5 |
| தமிழ்நாட்டில் நகர்ப்புற அபிவிருத்தித் திட்டங்கள் ... | 7 |
| சாகுபடிச் செலவைக் குறைத்திட அசட்டோபாக்டர் பயன்படுத்துவீர்! | 8 |
| பிற்பட்டோர் நலங்காக்க அரசு ஆற்றிடும் பணிகள் ... | 9 |
| குடும்பநலம் குறித்துக் காந்தியடிகள் | 15 |
| தமிழ்நாட்டில் குடும்பநலத் திட்டம் | 17 |
| தரமான பால் தருவதே தமிழ்நாடு பால்வள நிறுவனத்தின் இலட்சியம்! | 19 |
| கறவை மாடுகளைப் பராமரிப்பீர்! | 23 |
| படமும் செய்தியும் ... | 24 |
| பசுவின் பராமரிப்பில் கவனிக்க வேண்டியவை! ... | 28 |
| தரமான பாலுக்குத் தகுந்த விலை! | 31 |
| தேனுங்கள் கொடுக்கப்படும்! ... | 33 |
| தமிழ்நாட்டில் உள்ள வனவிலங்குச் சரணாலயங்கள் ... | 38 |
| வேடந்தாங்கலில் வெளிநாட்டுப் பறவைகள்! ... | 38 |
| நமது நாட்டின் தேசியப் பறவை | 39 |
| உடும்புப் பிடி ... | 40 |
| எழுத்தறிவின்மைக்கு எதிரான போர்! ... | 41 |
| குறைந்த செலவில் வீடுகள் ... | 44 |
| பகத் சிங் ... | 47 |
| காசு போட்டால் பால் கிடைக்கும். | 48 |



கட்டுரையாளர்களின் கருத்துகளுக்கு ஆசிரியர் பொறுப்பாளி அல்ல.


## பசுப் பாலில் உள்ள சத்துக்கள்

அரை லிட்டர் பசுப் பாலில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள சத்துப்பொருட்களும், வைட்டமின்களும் இருக்கின்றன.

| சத்துப் பொருட்கள் | அளவு | பயன். |
|---|---|---|
| கொழுப்புச் சத்து | 22.5 கிராம். | சக்திக்கு மூலாதாரம் |
| புரோட்டீன். | 17.0 கிராம். | உடல் வளர்ச்சிக்குத் தேவையான 'அமைனே' அமிலத்தை உண்டுபண்ணுகிறது. |
| லக்டோஸ் | 24.0 கிராம். | மூளை வளர்ச்சிக்கு உதவுகிறது. |
| தாது உப்புக்கள் | 4.0 கிராம். | வளர்ச்சிக்கும் பராமரிப்புக்கும் உதவுகிறது. |
| வைட்டமின் 'ஏ' | 0.06 கிராம். | இரவில் கண் தெரியாமை நோயைத் தடுக்கிறது. |
| கரோட்டீன் | 0.08 மில்லி கிராம். | வளர்ச்சியை ஊக்குவிக்கிறது. |
| வைட்டமின் 'பி-1' | 0.20 மில்லி கிராம். | நரம்பில் ஏற்படும் கோளாறுகளைத் தடுக்கிறது. |
| வைட்டமின் 'பி-2' | 0.90 மில்லி கிராம். | வளர்ச்சிக்குத் தேவையான ஒரு சத்துப் பொருள். |
| வைட்டமின் 'பி'. | 2.4 மில்லி கிராம். | இரத்தத்தில் உள்ள சிவப்பு அணுக்களின் வளர்ச்சிக்கும் முதிர்ச்சிக்கும் அவசியம். இது இல்லாவிட்டால் 'அனிமியா' ஏற்படும். |
| வைட்டமின் 'சி'. | 10.0 மில்லி கிராம். | இதன் குறைவு 'ஸ்கர்வி' என்ற நோயை ஏற்படுத்தும். |
| வைட்டமின் 'டி'. | மிகக் குறைந்த அளவு | இது இல்லாவிட்டால் எலும்பும், பற்களும் வலுவாக இருக்காது 'ரிக்கட்ஸ்' |
| வைட்டமின் 'ஈ'. | 0.15 மில்லி கிராம். | மலட்டுத் தன்மையைத் தடுக்கும். |

பாலைக் காய்ச்சுவதால் பாலிலுள்ள உணவுச் சத்துப் பொருட்கள் (வைட்டமின் 'சி'யைத் தவிர) அழிவதில்லை.



# தமிழ்நாட்டில் தொழிலாளர் நல மேம்பாடு

"குடியரசுத் தலைவரின் ஆட்சி பிரகடனப்படுத்தப்பட்ட பின் வேலை நிறுத்தங்களும் கதவடைப்புகளும் தமிழ்நாட்டில் குறைந்து வருவது தமிழ்நாட்டிற்கு ஒரு தனிச் சிறப்பாகும்.

''1975 பிப்ரவரி முதல் ஜூலை வரை 35,229 தொழிலாளர்களைப் பாதிக்கக்கூடியதாக இருந்த 103 வேலை நிறுத்தங்கள், கதவடைப்புகள், 1976-ஆம் ஆண்டு பிப்ரவரி முதல் ஜூலை வரை 21,323 தொழிலாளர்களை மட்டும் பாதிக்கக் கூடிய 84 வேலை நிறுத்தம் மற்றும் கதவடைப்புகளாகக் குறைக்கப்பட்டிருப்பது குறிப்பிடத் தக்கது. தொழில் நிறுவனங்கள் கதவடைப்பு செய்வதற்கோ ஆட்குறைப்பு செய்வதற்கோ அல்லது நிரந்தரமாக மூடுவதற்கோ அரசின் அனுமதி பெற வேண்டும் என்ற முறையில் விதிகள் அமைக்கப்பட்டுள்ளன. தொழில் உறவில் சுமுகமான நிலைமை உருவாக்க வழி வகுக்கும் வண்ணம் இம்மாநில அரசு பல்வேறு அமைப்புகளை ஏற்படுத்தி உள்ளது. மார்ச்சு மாதத்தில் அமைக்கப்பட்ட மாநில உயர் மட்டக் குழுவினால் சில அரிய முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன.

''தனியார் நிறுவனங்களில் ஏற்படும் தொழில் உறவுகளில் ஏற்படும் சிக்கல்களைத் தீர்ப்பதற்கு இது உதவும். இத்தீர்மானங்களைச் செயலாக்கும் வகையில் ஒரு நிலையான சிறிய குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அக்குழுவால் சிபாரிசு செய்யப்பட்டுள்ள விஷயங்களைப் பரிசிலிக்கவும் நிர்வாகத்தில் தொழிலாளர்கள் பங்கு பெறும் திட்டங்களையும் இக்குழு கவனிக்கும். இக்குழு சில முக்கிய முடிவுகளை எடுத்துள்ளது. தொழிலாளர் மற்றும் நிர்வாகத்தினரின் பிரதிநிதிகள் அடங்கிய இந்நிரந்தரக் குழு, தொழில் உறவுகள் சம்பந்தமான தெளிவான வழி வகைகளைச் சுட்டிக் காட்டும் தீர்மானங்களை அங்கீகரித்துள்ளது. இந்த முக்கியமான வளர்ச்சியை நீங்கள் பாராட்டுவீர்கள். இவ்வளர்ச்சி, தொழிலாளர் மற்றும் நிர்வாகத்தினர்களுக்கிடையே நல்லுறவையும் சுமுகமான சூழ்நிலையையும் நிரந்தரமாக உருவாக்கியுள்ளது. 'போனஸ்' பிரச்சினைகளை ஆராயும் பொருட்டு இரு தரப்புக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

''இம் மாநிலத்தில் குடியரசுத் தலைவரின் ஆட்சி பிரகடனப்படுத்தப்பட்ட பின்பு தொழி



# ஆளுநர் உரை

தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்திற்காகக் கட்டப்படவிருக்கும் பலமாடிக் கட்டடத்தின் மாதிரி.

லாளர்களும் முதலாளிகளும் சாதகமான வகையில் ஒத்துழைப்புத் தந்துள்ளார்கள் என்பது எல்லோராலும் ஒப்புக் கொள்ளக் கூடியது. வேலை நாட்கள் இழப்பு குறிப்பிடத் தக்க அளவில் குறைந்துள்ளது. கடந்த 1975 பிப்ரவரி முதல் ஜூலை வரை 6,34,344 வேலை நாட்கள் வீணாகிவிட்டன. ஆனால் 1976 பிப்ரவரி முதல் ஜூலை வரை வீணாகிய வேலை நாட்கள் 2,93,000 என்னும் அளவுக்குக் குறைந்துள்ளது. இப்போது தொழிலாளி முதலாளிகளுக்கிடையே ஒத்துழைப்பு மற்றும் சுமுகமான சூழ்நிலை உறுதி அடைந்து வருகிறது.

"விவசாயத் தொழிலாளர்களுக்குக் குறைந்தபட்சக் கூலி கிடைக்கும் வண்ணம் சட்ட விதிகளை மாற்றி அமைத்தது பிரமதரின் 20 அம்சப் பொருளாதாரத் திட்டங்களில் குறிப்பிடத்தக்க அம்சம். விவசாயத் தொழிலில் ஈடுபட்டுள்ள, தேர்ச்சி பெறாத வயது வந்த தொழிலாளர்களுக்கு தினம் ரூ. 5/-ம் தேர்ச்சி பெற்ற தொழிலாளர்களுக்கு தினம் ரூ. 5/-க்கு மேலும் என்ற வகையில் விவசாயக் கூலியை 2—3—1976 முதல், மாநில அரசு உயர்த்தியுள்ளது. விவசாயத் தொழிலாளர்களுக்குக் குறைந்த விகிதக் கூலி கொடுப்பதைக் கண்காணிக்கக் கிராமப் புறங்களில் அரசுப் பணியாளர்களை நியமித்துள்ளோம். இதர பின்தங்கிய துறைகளுக்கும் குறைந்த விகிதக் கூலி நிர்ணயம் செய்வது சம்பந்தமான திட்டங்கள் அரசின் பரிசீலனையில் உள்ளன.

"சீரான தொழில் உறவுகளுக்கும் வேகமான தொழில் முன்னேற்றத்திற்கும் தொழிலாளர் நிர்வாகத்தில் பங்கு கொள்வது என்பது கண்டிப்பாக்கப்பட வேண்டும். இந்த எண்ணத்தை பிரதிபலிக்கக் கூடிய 20 அம்சத் திட்டங்களில் ஒன்றான 15-வது அம்சம் இம் மாநிலத்தில் வெகு வேகமான முறையில் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

"தொழிற்சாலை நிர்வாகத்தில் தொழிலாளர்கள் பங்கு பெற வேண்டும் என்கிற திட்டத்தை இந்திய அரசு உருவாக்கியுள்ளது. இத்திட்டப்படி ஷாப் அண்டு கவுன்சில்களும், பிளாண்ட் கவுன்சில்களும் நிறுவப்பட வேண்டும். இத்திட்டம் தமிழ்நாட்டில் 500-க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பணி புரியும் உற்பத்தித் தொழிற்சாலைகள் மற்றும் சுரங்கத் தொழிற்சாலைகளில் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இது வரை, 500க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பணிபுரியும் 224 நிறுவனங்களில் 196ல் இத்திட்டம் முழுமையாகச் செயல்படுத்தப்பட்டுள்ளது. 21 நிறுவனங்களில் இத்திட்டம் முழுமையாக செயல்படுத்தப்பட்டு உள்ளது. 21 நிறுவனங்கள் இத்திட்டத்தை ஓரளவுக்கு அமல்படுத்தியுள்ளன. இம்மாநிலத்திலும், அண்டையிலுள்ள ஆந்திர மாநிலத்திலும் இத்திட்டம் அடைந்துள்ள முன்னேற்றம் குறித்து மத்திய தொழில் மந்திரி அவர்கள் பாராட்டுதல் தெரிவித்துள்ளார்.

உற்பத்தியும், உற்பத்தித் திறனும் குறிப்பிடத் தக்க வகையில் முன்னேற்றம் அடைந்துள்ளதாக 12—8—'76 அன்று மத்திய தொழில் மந்திரி பாராளுமன்றத்தில் திருப்தி தெரிவித்தார்.

''இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள குழந்தைகளிடம் வேலை வாங்கும் பிரச்சினை குறித்த அறிக்கை, அரசு ஆலோசனைக்கு வந்துள்ளது. மலைத் தோட்டத் தொழிலாளர் வீடு கட்டும் திட்டத்தின் கீழ் 93 சதவிகிதத் தொழிலாளர்கட்கும், அவர்கள் குடும்பங்களுக்கும், வீட்டு வசதி செய்யப்பட்டுள்ளது. மலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு வீட்டு வசதி வழங்கும் முறையில் மற்ற எந்த மாநிலமும் இவ்வளவு குறிப்பிடத் தக்க முன்னேற்றம் காணவில்லை. மலைத் தோட்டத் தொழிலாளர்களின் குடியிருப்புகளுக்கு மின் வசதி வழங்குவதில் திருப்திகரமான முன்னேற்றம் இல்லையாதலால், மலைத்தோட்டங்கள் உள்ள ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு முதனிலை அமைப்பு உருவாக்க அரசு உத்தரவிட்டுள்ளது.

''தற்காலத் தேவை, குடும்பநலத் திட்டம். தொழிலாளர் மத்தியில் ஊக்குவிக்கப்பட வேண்டிய இத் திட்டத்திற்கு நாம் மிக முக்கியத்துவம் தருகிறோம். இதில் வேலையளிப்பவர்களின் ஒத்துழைப்பையும் நாடுகிறோம். தொழிலாளர் மாநில ஈட்டுறுதித் திட்டத்தின் கீழ் சாதாரணமாக வழங்கப்படும் 56 நாள் நலிவு கால ஊதியத்தைத் தவிர, பெண்கள் அறுவைச் சிகிச்சை செய்து கொண்டால் 14 நாட்களுக்கும், ஆண்கள் அறுவைச் சிகிச்சை செய்து கொண்டால் 7 நாட்களுக்கும் நலிவு கால ஊதியம் அளிக்கத் தற்போது வகை செய்யப்பட்டுள்ளது. நலிவுற்ற மக்களுக்கு அதிக அளவில் வேலை வாய்ப்புக் கிடைப்பதற்காகப் பயிற்சி அளிக்கும் திட்டத்தின் கீழ் நாம் குறியளவைத் தாண்டிவிட்டோம்.

''தொழிலாளர்களின் பிரத்தியேக நலனுக்காக 26 படுக்கைகள் கொண்ட ஒரு வார்டை தாம்பரம் காச நோய் மருத்துவமனையில் ரூபாய் 3.64 இலட்சத்தில் கட்டுவதற்குத் தமிழக அரசு, சமீபத்தில் ஒப்புதல் அளித்துள்ளது. தொழிலாளர் அதிகமாக வாழும் இடங்களில் நான்கு நூலகங்கள் திறக்கத் தொழிலாளர் நல வாரியம் எடுத்த முடிவை நான் வரவேற்கிறேன். சென்னையில் 2 நூலகங்களும், மதுரையில் ஒன்றும், கோவையில் ஒன்றும் திறக்க முடிவெடுத்து, சென்னையிலும், மதுரையிலும் திறக்கப்பட்டுவிட்டன.

''குற்றாலம், மாமல்லபுரம், உதகமண்டலம், கொடைக்கானல் மற்றும் ஏர்க்காடு ஆகிய இடங்களில்தொழிலாளர்களுக்காகவிடுமுறைக் கால ஓய்வு விடுதிகள் கட்டத் தொழிலாளர் நல வாரியம் முடிவெடுத்துச் செயல்பட்டு வருகிறது. சென்னையில் நவீன வசதிகளோடு கூடிய ஒரு விளையாட்டு அரங்கம் கட்ட முடிவு எடுக்கப்பட்டுள்ளது. இவ்விளையாட்டரங்கில் பம்பா திரையரங்கம், உட்புறம் மற்றும் திறந்த வெளி விளையாட்டுக் கூடங்கள், நீச்சல் குளம் போன்ற வசதிகள் செய்யப்படும். தொழிலாளர் சமுதாயம் இவைகளை வரவேற்கும் என உறுதியாக நம்புகிறேன்.

''தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம் அதனுடைய அலுவலகம் தனியார் கட்டடத்தில் இருப்பதால் பெருந்தொகை வாடகையாக அளிக்க வேண்டியுள்ளதைத் தவிர்ப்பதற்காகவும், தனது நிதியில் பெரும்பகுதியை ஒரு விலை மதிக்கத் தக்க சொத்திற்காகப் பயன்படுத்த வேண்டும் என்ற நோக்கத்துடனும், சென்னையில் மத்தியப் பகுதியில் ஒரு பல மாடிக் கட்டடம் கட்ட முடிவெடுத்ததற்காக நான் மகிழ்ச்சியடைகின்றேன். இக்கட்டடம் கட்டுவதற்கான 6.33 மனை வரப்புள்ள நிலத்தை அரசு இலவசமாக வாரியத்திற்கு வழங்கியுள்ளது. ரூபாய் 35 இலட்சத்தில் இக்கட்டடம் கட்ட அனுப்பிய வரைபடத்திற்கும், மதிப்பீட்டிற்கும் அரசு ஒப்புதல் அளித்துள்ளது. கட்டடம் வெகு விரைவில் எழுப்பப்படும். வாரியம் ஒரு மாடியை மட்டும் தன் அலுவலகத்திற்குப் பயன்படுத்தும். மீதி, வாடகைக்கு விடப்படும். இக்கட்டடத்திலிருந்து கிடைக்கும் வருமானம் பல தொழிலாளர் நலத் திட்டங்களுக்குப் பயன்படுத்தப்படும். இவ்விடத்தில் ஒரு அழகான கம்பீரமான ஒரு கட்டடம் எழுப்பப்படுவதை நாம் ஆவலுடன் எதிர்பார்ப்போம். இப்போது நான் தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்தின் இப்புதிய பல மாடிக் கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டுவதில் பெரு மகிழ்ச்சி அடைகிறேன். வணக்கம். ஜெய் ஹிந்த்.

**தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்திற்கான பலமாடிக் கட்டடத்திற்கு 12—10—'76 அன்று அடிக்கல் நாட்டி மேதகு தமிழ்நாடு ஆளுநர் திரு. மோஹன்லால் சுகாதியா அவர்கள் நிகழ்த்திய உரை.**





# தொழிலாளர் சகோதர சகோதரிகளின் நல்வாழ்வை மேம்படுத்துவோம்

— ஆர். வி. சுப்பிரமணியன்

ஆளுநர் ஆலோசகர்,

"இந்நாள் தொழிலாளர் நல வாரியத்திற்குப் பெருமை தரக்கூடிய நாள். ஏனெனில் இந்நாளில் தொழிலாளர் நல வாரியத்திற்கான பல மாடிக் கட்டடத்திற்கான அடிக்கல்லை நமது மதிப்பிற்குரிய ஆளுநர் அவர்கள் நாட்டுவதைக் காண நாம் அனைவரும் குழுமியுள்ளோம். தொழிலாளர் நல வாரியத்திற்காக ஒரு பல மாடிக் கட்டடம் கட்ட வேண்டும் என்ற இத் திட்டம் நீண்ட காலமாக எதிர்பார்த்து வந்த திட்டம் என்று தொழில் துறைச் செயலாளர் குறிப்பிட்டார். எனவே, தொழிலாளர் நல வாரியத்திற்கென நிலையான ஒரு பல மாடிக் கட்டடத்திற்கு நமது மேதகு ஆளுநர் அவர்களால், சென்னை நகரின் முக்கியப் பகுதியில் அடிக்கல் நாட்டப்படுவதால் நாம் இன்று மகிழ்ச்சியாக உள்ளோம். தொழிலாளர் நல வாரியத்திற்கென ஒரு கட்டடம் அமைப்பதன் மூலம், தொழிலாளர்களின் தேவையை உணர்ந்துள்ளதால், நான் உண்மையிலேயே மகிழ்ச்சி அடைகின்றேன். தொழிலாளர் நல வாரியத்திற்கான அலுவலகம் மிகவும் இன்றியமையாததாகும். தொழிலாளர் நல வாரியம் எவ்வித இன்னல்களுக்கும் ஆளாகாமல் தங்கு தடையின்றித் திறமையுடன் இயங்க வேண்டும். தலைமைப் பொறியாளர் (கட்டடங்கள்) கூறியது போல், தொழிலாளர் நல வாரிய அலுவலகம் ஒரு பகுதியில் இயங்கி, மற்ற பகுதிகளை வாடகைக்கு விடுவதன் மூலம், தொழிலாளர் நல வாரியத்திற்கு ஓரளவு வருவாய் ஈட்ட முடியும்.

"கடந்த 8, 9 திங்கள்களாக, தொழிலாளர் உறவு குறிப்பிடத்தக்க வகையில் அதற்கு முந்திய காலங்களில் இருந்ததை விட, நன்றாகவே உள்ளது. வேலை நிறுத்தங்கள், கதவடைப்புகள், மூடுதல் மிகவும் குறைவாக இருந்து வருகின்றன. இதை நான் தொழிலாளர் உறவில் பெரிய சாதனை செய்து விட்டோம் என்பதற்காகக் கூறவில்லை. தொழிலாளர் உறவு திருப்திகரமாக இருப்பதற்கு இன்னும் நாம் செய்ய வேண்டிய காரியம் ஏராளமாக உள்ளது என்பதற்காகவே கூறுகின்றேன். இருப்பினும் நாம் உற்பத்தியில் நல்ல முன்னேற்றம் காண முடிந்துள்ளது. நிர்வாகமும், தொழிலாளர்களும் அவர்களுக்குள் மிக்க சந்தோஷமான முறையில் உறவை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்று விரும்புகின்றோம். அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் நிர்வாகமும், தொழிலாளர்களும் அவர்களுக்கிடையே உள்ள பிரச்சினைகளை அவர்களே கூடிப் பேசி ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து திருப்திகரமான முறையில் தீர்வு காண எல்லா விதமான நடவடிக்கைகளையும் மேற்கொண்டு, ஆதரவு அளித்து வருகிறது.

"இம்மாநிலத்தில் குடியரசுத் தலைவரின் ஆட்சி அமல்படுத்தப் பட்டபின் அரசு ஒரு மாநில உயர் மட்டக் குழு அமைத்துள்ளது. அதில் அரசாங்கத்தைத் தவிர தொழிலாளர், நிர்வாகத்தினரின் பிரதிநிதிகள் ஆகியோர் பங்கு பெற்றுள்ளனர். இக் குழு, தொழிலாளர் உறவு உட்பட பல்வேறு விஷயங்கள் குறித்து விவாதித்து, திருப்திகரமான பலனை அடைவதற்கு மிகவும் உபயோகமானதாக இருக்கின்றது. நிர்வாகத்தில் தொழிலாளர்கள் பங்கு கொள்ள எல்லா விதமான நடவடிக்கையும் எடுக்கப்பட்டு விட்டன.



''தொழில் உறவைச் சீர்குலைக்கும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக அரசாங்கம் ஒரு நிலையான குழுவை அமைத்துள்ளது. உற்பத்தியைப் பெருக்குவதில் தொழிலாளர்கள் பங்கு முக்கியமானது. ஏனெனில், தேசீய, பொருளாதார வளர்ச்சிக்கு, உற்பத்தி முக்கியமானது. உற்பத்தியில் முன்னேற்றம் காண நம்மால் இயன்றவரை செய்துள்ளோம், செய்கின்றோம். ஆதலின், அரசு, தொழிலாளர்களுக்கான திட்டங்கள் அனைத்தையும் கூர்ந்து பார்த்து நிறைவேற்றி வருகிறது. சமூகத்தில் தொழிலாளர்களுக்கும் முக்கியத்துவம் அளித்து, அவர்களுக்கு—ஒரு வளரும் நாட்டில் ஒரு சாதாரணக் குடிமகன் எதிர்பார்க்கின்ற — தேவையான வசதிகளைச் செய்து தருகின்றோம். இதைக் கருத்தில் கொண்டு, பல தொழிலாளர் நல நடவடிக்கைகள் நிறைவேற்றப் படுகின்றன. சில நல நடவடிக்கைகளை அடைய தொழிலாளர்களே பங்கு ஏற்றுள்ளது பெருமைப்படத் தக்கது. நம் தொழிலாளர் சுய மரியாதையை விரும்பும் இனத்தவர். மிக்க பொறுப்பு மிக்கவர்கள்.

''சிறுவர்களிடம் வேலை வாங்குவது சம்பந்தமாக, பல தொழிற்சாலைகளை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு முது நிலை அலுவலர் ஒருவர் நியமிக்கப்பட்டார். அவர் பல தொழிற்சாலைகளை ஆராய்ந்து தன் அறிக்கையை அரசுக்கு சமர்ப்பித்து விட்டார். அது அரசின் பரிசீலனையில் உள்ளது.

''தொழில் பழகுநர் திட்டத்தின் கீழ், தமிழ் நாட்டிற்கு அளிக்கப்பட்டிருந்த, இலக்கினைத் தமிழ்நாடு மிஞ்சிவிட்டது. முதன் முறையாக, மலைச்சாதி வகுப்பைச் சார்ந்த 129 ஆண்களும், பெண்களும் தொழிற் பயிற்சி நிறுவனங்களில் சேர்த்துக் கொள்ளப்பட ஆவன செய்யப் பட்டுள்ளது. காச நோயால் பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்காக தாம்பரம் காச நோய் மருத்துவ மனையில் 24 படுக்கைகள் கொண்ட பகுதி கட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. தற்சமயம் இயங்கி வருகின்ற 10 தொழிலாளர்கள் நல நிலையத்தில் பாலர் பயிற்சி வகுப்புகள் நடந்து வருகின்றன. குழந்தைகளுக்குப் பாலும், மதிய உணவும் அளிக்கப் படுகின்றன. தொழிலாளர்களின் துணைவிகள் தையல் வகுப்பில் சேர்த்துக்கொள்ளப்படுகிறார்கள். பயிற்சியாளர் ஒவ்வொருவருக்கும் உதவித் தொகையாக மாதம் ரூ. 30/ அளிக்கப்படுகிறது.

''தொழிலாளர்களுக்காக அமைக்கப்படும் விடுமுறை இல்லங்களைப் பற்றிக் குறிப்பிட விரும்புகின்றேன். மாமல்லபுரத்தில் அத்தகைய இல்லம் ஒன்றை அமைக்க விரைவில் அடிக்கல் நாட்டப்படும். குற்றாலம், கோடைக்கானல், ஊட்டி, மற்றும் ஏற்காடு ஆகிய சுற்றுலா மையங்களில் விடுமுறை இல்லங்கள் விரைவில் அமைக்கப்பட இருக்கின்றன. இவ்வில்லங்கள் தொழிலாளர்களுக்குப் பெருமளவில் உதவிடும் என்று கருதுகின்றேன். தொழிலாளர் நல வாரியம் திறமையாக வேலை செய்து, நமது தொழிலாள சகோதர, சகோதரிகளின் நல்வாழ்வை மேம்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, மேதகு ஆளுநர் அவர்களை நமக்கு அறிவுரைகள் வழங்கும்படியும், அடிக்கல் நாட்டும் படியும் வேண்டுகிறேன்.''

**—தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்திற்கான பல மாடிக் கட்டடத்திற்கு 12—10—'76ல் அடிக்கல் நாட்டிய விழாவிற்குத் தலைமை தாங்கிய ஆளுநர் ஆலோசகர் திரு. ஆர். வி. சுப்பிரமணியன் அவர்கள் ஆற்றிய உரையின் தொகுப்பு.**

## மருத்துவ இலக்கியத்தில் ஒரு புதிய அத்தியாயம்!



இந்தியாவில் உள்ள மருந்துச்செடிகள் பற்றிய நூல் ஒன்றை இந்திய மருத்துவ ஆராய்ச்சி சபை வெளியிட்டுள்ளது. மொத்தம் 350 மூலிகைச் செடிகள் பற்றிய விவரம் இப்புத்தகத்தில் கொடுக்கப்பட்டிருக்கிறது. இப்புத்தகத்தின் முதல் தொகுதியை மத்திய சுகாதார, குடும்பநலத் திட்ட அமைச்சர் டாக்டர் கரண் சிங் அவர்கள் வெளியிட்டார்.

இப்புத்தகம், இருபதாண்டுகளுக்கு முன்னால் சர். ஆர். என். சோப்ரா, டாக்டர் கே. எம். நட்கர்னி ஆகியோரும், கடந்த சில ஆண்டுகளில் பல்வேறு கருத்தரங்குகளிலும், கூட்டங்களிலும் தங்களின் ஆராய்ச்சி முடிவுகளை கட்டுரைகளாகவும், ஆய்வுகளாகவும் வெளியிட்டுள்ள இதர விஞ்ஞானிகளும் மேற்கொண்ட முன்னோடி முயற்சிகளின் பயனாகும்.

மருத்துவ இலக்கிய வரலாற்றில் திருப்பு மையமான இப்புத்தகம், உயர் கல்விக்காக தெரிந்தெடுக்கப்பட்ட மருந்துச் செடிகளில் ஆராய்ச்சி செய்பவர்களுக்குப் பெரும் பயனளிப்பதாக இருப்பதோடு கூட, 'தாவர மறுமலர்ச்சி' என்று சரியாக அழைக்கப்படுவதற்கான நீண்டகாலத் தேவையையும் நிறைவு செய்கிறது.



# தமிழ்நாட்டில் நகர்ப்புற அபிவிருத்தித் திட்டங்கள்

தமிழ்நாட்டில் குடியரசுத் தலைவர் ஆட்சி பிரகடனம் செய்யப்பட்டதிலிருந்து நகர்ப்புற அபிவிருத்தித் திட்டங்களின் நிறைவேற்றம் துரிதப்படுத்தப்பட்டுள்ளது.

குடிசை மாற்றுத் திட்டங்களுக்காக நடப்பு ஆண்டு பட்ஜெட்டில் 3 கோடியே 60 இலட்ச ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. சென்னை நகரின் குறுக்காக ஓடும் பக்கிங்ஹாம் கால்வாயின் இருகரைகளிலுமுள்ள குடிசைகளை அகற்றுவது பற்றியும் பரிசீலிக்கப்பட்டு வருகின்றது. நடப்பு ஆண்டில் 3,600 குடியிருப்பு வீடுகள் கட்டுவதற்கான திட்டம் ஒன்றும் மாநில அரசாங்கத்தின் தீவிர பரிசீலனையில் உள்ளது.

நடப்பு நிதியாண்டில் நகர்ப்புற குடிநீர் விநியோகத் திட்டங்களுக்காக சுமார் 9 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவிடுவதற்கு தமிழ்நாடு உத்தேசித்துள்ளது. சென்ற ஆண்டில் இத்திட்டங்களுக்கு 6 கோடியே 50 இலட்சம் ரூபாய் மட்டுமே நிதி ஒதுக்கப்பட்டிருந்தது. இந்த ஆண்டில் மேற்கொள்ளப்பட்டுள்ள திட்டங்கள் முடிக்கப்பட்டதும் இம்மாநிலத்தில், நகராண்மைக் கழகங்கள் உட்பட சுமார் 65 சிறிய நகரங்களுக்கு, பாதுகாக்கப்பட்ட குடிநீர் விநியோக வசதி கிடைக்கும். இந்த வேகத்தில், அடுத்த இரண்டு, மூன்று ஆண்டுகளில் இம்மாநிலத்தில் உள்ள நகராண்மைக் கழகங்கள் அனைத்துக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் விநியோக வசதி கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

சென்னை நகரில் ஏராளமான கழிவுநீர்க் கால்வாய் அமைப்புத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மற்றும் ஏழு சிறிய நகரங்களும் இத்தகைய திட்டங்களைக் கொண்டிருக்கின்றன. தண்ணீரைச் சுத்தப்படுத்தி, சிக்கனத்தைக் கொண்டு வருவதற்கும் முயற்சிகள் செய்யப்பட்டு வருகின்றன. கழிவு நீரை விஞ்ஞான முறையில் அகற்றுவதை உறுதி செய்வதற்கான உத்தேசங்களும் பரிசீலிக்கப்படுகின்றன. குடிநீர் விநியோகம் மற்றும் கழிவுநீர்க் கால்வாய்த் திட்டங்களை வருவாய் தரும் வகையில் நிறைவேற்றுவது பற்றியும் மாநில அரசாங்கம் பரிசீலித்து வருகிறது.

வீட்டு வசதியைப் பொறுத்தவரையில், மாநில வீட்டுவசதி வாரியம் மேற்கொண்டுள்ள கட்டுமானப்பணி வேலைகளில் சுமார் 75 சதவிகித அளவு, பொருளாதார ரீதியில் பலவீனப் பிரிவினர்களுக்காகவும், குறைவான வருமானப் பிரிவினர்களுக்காகவும் என்பது குறிப்பிடத்தக்கதாகும். வீட்டுவசதி வாரியத்தின் பணிகளும் விரிவாக்கப்பட்டு வருகின்றன.

கிராமப்புற குடிநீர் விநியோக வசதியைப் பொறுத்தவரையில், நடப்பு ஆண்டில் சுமார் 7,000 கிராமங்களுக்குக் குடிநீர் வசதி செய்வதற்கு மாநில அரசாங்கம் திட்டமிட்டிருக்கிறது. கடந்த நான்கு ஆண்டுகளில் 5,000 முதல் 6,000 கிராமங்களுக்கு மட்டுமே குடிநீர் வசதி ஏற்படுத்தப்பட்டது. இந்நோக்கத்துக்காக 10 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

வீட்டுமனைகள் வழங்கும் திட்டமும் துரிதப்படுத்தப்பட்டுள்ளது. குடியரசுத் தலைவர் ஆட்சி பிரகடனப்படுத்தப்பட்டதிலிருந்து மாதம் ஒன்றுக்கு 12,000 வீட்டுமனைகள் வழங்கப்படுகின்றன. அதற்கு முன்னால் மாதம் ஒன்றுக்கு 3,000 வீட்டுமனைகளே வழங்கப்பட்டன.

# சாகுபடிச் செலவைக் குறைத்திட அசட்டோபாக்டர் பயன்படுத்துவீர்!

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில், நெற் பயிரில் நடத்தப்பட்ட சோதனைகளிலிருந்து அசட்டோபாக்டர் உபயோகிப்பதன் மூலம் சுமார் 20 சதம் தழைச் சத்து உரத்தைச் சிக்கனப்படுத்த முடியும் என்று அறியப்பட்டது. இந்த அசட்டோபாக்டர் பாக்கெட்டுகள் கோயமுத்தூரில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் கிடைக்கின்றன. ஒரு பாக்கெட்டின் விலை இரண்டு ரூபாய் ஆகும். நெற்பயிரில் இதை எப்படி உபயோகிப்பது என்பது பற்றி இங்குக் காண்போம் :



நெற்பயிருக்கு அசட்டோபாக்டர் :

1. **விதைகளோடு கலத்தல் :** ஒரு பாக்கெட் அசட்டோபாக்டரை தேவையான அளவு குளிர்ந்த நீரில் கலந்து கொள்ளவேண்டும். இதில், ஒரு ஏக்கர் நிலத்திற்குத் தேவையான விதையை விதைப்பதற்கு முன்பு ஒரு இரவு முழுவதும் ஊற வைக்க வேண்டும். விதைகளை எடுத்து விதைத்த பின்பு, மீதியிருக்கும் அசட்டோபாக்டர்—நீர் கலவையை நாற்றங்காலிலேயே ஊற்றி விடலாம்.

2. **நாற்றுகளோடு கலத்தல் :** இரண்டு பாக்கெட் அசட்டோபாக்டரை சுமார் 15 லிட்டர் நீரில் கலந்து கொள்ளவேண்டும். இக்கலவையில், ஒரு ஏக்கர் நிலத்திற்குத் தேவையான நாற்றுக்களின் வேர்ப் பாகம் மட்டும் அமிழ்ந்திருக்குமாறு 10 முதல் 15 நிமிடங்கள் வைத்திருந்த பிறகு நாற்று நட வேண்டும்.

3. **நிலத்தில் இடுதல் :** ஐந்து பாக்கெட் அசட்டோபாக்டரை நன்கு மக்கிய தொழு உரம் 10 கிலோவுடன் நன்கு கலந்து கொள்ள வேண்டும். இதை மேலும் 10 கிலோ மண்ணுடன் கலந்து நாற்று நடப்போகும் வயலில் ஒரு ஏக்கர் நிலத்தில் தூவி விடவேண்டும்.

பருத்தியில் அசட்டோபாக்டர் :

பருத்தியில் அசட்டோபாக்டர் பயன்படுத்தும்போது, 75 சதம் தழைச் சத்து இட்டால் போதுமானது என்று தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் மேற்கொள்ளப்பட்ட சோதனைகளில் இருந்து அறியப்பட்டுள்ளது. பருத்தியில் இதை எப்படி உபயோகிப்பது என்பதைப் பற்றி இங்கு கொடுக்கப்பட்டுள்ளது.

1. **விதைகளோடு கலத்தல் :** 125 கிராம் அளவுள்ள வெல்லத்தை அரை லிட்டர் அளவு நீரில் நன்கு கரைத்த பின்பு அதை 30 நிமிடங்கள் கொதிக்க வைக்க வேண்டும். இதை நன்கு ஆற வைத்த பிறகு, ஒரு பாக்கெட் அசட்டோபாக்டரை நன்கு கலக்க



வேண்டும். இக்கலவையில் ஒரு ஏக்கர் நிலத்திற்குத் தேவையான பருத்தி விதைகளைப் போட்டு, ஒவ்வொரு விதையின் மேலும் இக்கலவை நன்கு படியும் வண்ணம் நன்கு கலக்க வேண்டும். பிறகு இவ்விதைகளை ஒரு பேப்பரின் மேல் பரவலாகக் கொட்டி நிழலில் உலர்த்த வேண்டும். (எக்காரணத்தைக் கொண்டும் வெயிலில் உலர்த்தக் கூடாது). இவ்வாறு கலக்கப்பட்ட விதைகளை 24 மணி நேரத்திற்குள் விதைத்துவிட வேண்டும்.

2. **நிலத்தில் இடுதல் :** ஐந்து பாக்கெட் அசட்டோபாக்டரை 10 கிலோ நன்கு மக்கிய தொழு உரத்துடன் கலந்து கொள்ளவேண்டும் இதை மேலும் 10 கிலோ மண்ணுடன் கலந்து, பருத்தி விதைகளை விதைப்பதற்கு முன்னதாக ஒரு ஏக்கர் நிலத்தில் தூவி விடவேண்டும்.

நன்றி : தகவல் தொடர்பு நிலையம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம், கோவை—3.

# பிற்பட்டோர் நலங்காக்க அரசு ஆற்றிடும் அரும்பணிகள்

ஜி. திருமால், ஐ.ஏ.எஸ்.,
செயலாளர்,
சமூக நலத்துறை, தமிழ்நாடு அரசு.

பன்னெடுங்காலமாகச் சமுதாயத்தில் ஒரு கணிசமான பிரிவினர் வாழ்க்கையில் இதர பிரிவினருடன் இணைந்து முன்னேற முடியாதவர்களாக இருந்து விட்டனர். இந்தத் தேக்கம், சமுதாய அமைப்பினாலும், அவர்கள் பரம்பரையாகச் செய்து வந்த தொழில்களினாலும் ஏற்பட்டதென்று கூறலாம். அதன் பயனாகப் பின்தங்கிய மக்கள், விவசாயம் முதலான இன்றியமையாத தொழில்களில் ஈடுபட்டு சலியா உழைப்பினை மேற்கொண்டிருந்தும்கூட, அவர்கள் கல்வியிலும் பொருளாதாரத்திலும் முன்னேறவில்லை.

இந்நூற்றாண்டின் முற்பகுதியில் பின்தங்கிய மக்களுக்கும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் வேலை வாய்ப்புக்கள் ஓரளவுக்கு ஏற்படுத்தித் தரப்பட்டன. இது மக்களிடையே பெரிய விழிப்புணர்ச்சியையும், தன்னம்பிக்கையையும் தோற்றுவித்தது. இச்சலுகைகளின் பயனாக இவர்களிடையே கல்வி, அதிலும் உயர் கல்வி கற்க வேண்டும் என்ற ஆர்வம் தோன்றி வளரலாயிற்று. இது இம்மக்களிடையே ஏற்பட்ட ஒரு வரவேற்கத் தக்க மாறுதல் ஆகும்.

இம்மாறுதல் தொடர்ந்து வளர்ந்து, பல துறைகளிலும் முன்னேறவேண்டும் என்ற ஆர்வத்தை இவர்களது மனங்களில் வளர்த்தது. பின்னர், சுதந்திர இந்தியாவில் ஏற்பட்ட அரசியல் மாறுதல்களும், விழிப்புணர்ச்சியும் இம்மக்களை அரசியலிலும் பெருவாரியாக ஈடுபட வைத்தது. இதனால் இவர்கள் அரசியலில் ஊடுருவி தங்கள் உரிமைகளைக் கோரிப் பெறவும், அதைப் பாதுகாக்கவும் முடிந்தது. பிற்பட்ட இனத்தில் பலர் அரசியல் தலைவர்களாகவும், சிலர் அரசில் பொறுப்புள்ள பதவி வகிப்பவர்களாகவும், இருப்பதை இப்போது பார்க்கிறோம். கல்லூரிகளிலும், பள்ளிகளிலும் வேலைகளிலும் இதர தொழில் வணிகத் துறைகளிலும் இப்போது பிற்பட்ட மக்கள் அங்கம் வகிப்பது இவர்களது படிப்படியான முன்னேற்றத்தை எடுத்துக் காட்டுகிறது. ஆயினும் இம்மக்களின் மொத்தத் தொகையை நோக்கும்போது இவர்களின் வளர்ச்சி, குறிப்பாக பொருளாதாரத்திலும் கல்வியிலும் சிறப்புடையாதாக இன்னும் அமையவில்லை.

நமது மாநிலத்தில் மொத்த மக்கள் தொகையில் ஏறத்தாழ 53 சதவீதம் மக்கள் பிற்பட்டவர்கள். இவர்களில் பெரும்பாலோர் கிராமப் புறங்களில் விவசாயம், கூலி வேலை மற்றும் சிறு கைத்தொழில்களில் ஈடுபட்டிருப்பவர்கள். இவர்களை எண்ணிப்பார்க்கையில் தற்போது இம்மக்கள் பெற்றுள்ள வளர்ச்சி மிகக் குறைவானது என்பதும், இன்னும் இவர்கள் முன்னேற்றத்திற்குச் செய்ய வேண்டுவன மிக அதிகம் என்பதும் புலனாகும்.

## பிற்பட்டோருக்கான சலுகைகள் வளர்ந்தன !

இந்நூற்றாண்டுத் தொடக்கத்தில் பிற்பட்ட மக்களுக்கு வருவாயின் அடிப்படையில், அரைச்சம்பளச் சலுகை மட்டுமே அளிக்கப்பட்டு வந்ததே தவிர படிப்புதவித் தொகை ஏதும் வழங்கப்படவில்லை. இந்தியா சுதந்திரம் அடைந்த பின்னர், முதன் முதலாக 1948-49-ஆம் ஆண்டு சென்னை ராஜதானியில் படிப்பு உதவித் தொகை வழங்கும் திட்டம் ரூ. 1.00 இலட்சம் செலவில் அமல் நடத்தப்பட்டது. இதனால் அன்றிருந்த சென்னை ராஜதானியில் 609 மாணவர்கள் பயன் பெற்றனர். 1949-50-ஆம் ஆண்டில் இவ்வுதவி ரூ. 5.00 இலட்சங்களாக உயர்த்தப்பட்டு 2,908 மாணவர்வர்கள் பயன்பெற வகை செய்யப்பட்டது. இத்திட்டம் சிறிது, சிறிதாக முக்கியத்துவம் அளிக்கப்பட்டு 1954-55-ல் 4,196 மாணவர்கள் பயன் பெற ரூ. 8.80 இலட்சம் செலவிடப்பட்டது. 1960-61-ல் பயன் பெற்றோர் எண்ணிக்கை 19,856 ஆகவும், செலவு ரூ. 40.89 இலட்சங்கள் ஆகவும் உயர்ந்தன. 1970-71-இல் 1,34,249 மாணவர்களின் நலனுக்காக ரூ. 201.20 இலட்சங்கள் செலவிடப்பட்டது. 1975-76-ல் ரூ. 313.00 இலட்சங்கள் செலவில் 1,67,101 மாணவர்களுக்கு உதவித்தொகை வழங்கப்பட்டது.

படிப்புதவித்தொகை தவிர 1950-51-ஆம் ஆண்டு முதற்கொண்டே தனியார் விடுதிகளில் தங்கிப் பயிலும் பிற்பட்ட மாணவர்களுக்கு உணவு மானியம் ஆண்டு —ஒன்றுக்கு ரூ. 150 வீதம் வழங்கப்பட்டு வருகிறது.



1957-ஆம் ஆண்டு மிகப் பிற்பட்ட 57 சாதிகள் கொண்ட பட்டியல் தயாரிக்கப்பட்டது. இவர்கள் தீண்டத் தக்கவர்களாகக் கருதப்படினும் இவர்களது நிலை அரிசனங்களைப் போன்றதே.

எனவே பிற்பட்ட மக்களது முன்னேற்றத்தை விரைவுபடுத்த தனித்துறை ஒன்று நிறுவப்பட்டது. இத்துறை பிற்பட்ட மக்களின் கல்வி மேம்பாட்டை முக்கிய குறிக்கோளாகக்கொண்டு ஏராளமான மக்களுக்கு உபகாரச் சம்பளம் மற்றும் இதர கல்விச் சலுகைகளை வழங்கி வருகிறது. ஆண்டு தோறும் இதற்காகவே ஏறத்தாழ ரூ. 400 இலட்சங்கள் செலவிடப்படுகிறது. வீட்டு வசதி, தொழில் மேம்பாடு, பொருளாதார அபிவிருத்தி போன்ற துறைகளிலும் பிற்பட்ட மக்களுக்கெனத் தனித் திட்டங்கள் தேவைப்படினும், நமது மாநில அரசு எந்தத் துறைகளில் வளர்ச்சித் திட்டங்களை வகுத்தாலும் அவை சமுதாயத்தின் பிற்பகுதியில் இருக்கும் ஏழை எளிய மக்களின் முன்னேற்றத்திற்கு வழி வகுக்கும் முறையில்தான் வகுக்கப்படுகின்றன. ஆகவே இதர துறைகளின் வளர்ச்சித் திட்டங்களும் பிற்பட்ட மக்களுக்குச் சாதகமானவையாகவே இருப்பதாகக் கொள்ளலாம்.

## பிற்பட்டோர் நலம் காக்க 1976-77—ல் அரசு மேற்கொண்டுள்ள திட்டங்கள்

### படிப்பு உதவித்தொகை வழங்கல்

முந்திய ஆண்டு தேர்வில் 40 சதவீத மதிப்பெண்கள் பெற்று தேறி, பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ. 2,500-க்குள் உள்ள 9-ஆம் வகுப்பும் அதற்கு மேலும் படிக்கும் பிற்பட்ட வகுப்பு மாணவ, மாணவியர்க்குப் படிப்பு உதவித்தொகை எல்லா வகைப் படிப்பிற்கும் வழங்கப்படுகிறது. 9 முதல் 11-ஆம் வகுப்பு வரையில் உள்ள இவ்வகுப்பு மாணவ, மாணவியருக்கு உண்டி, உறையுள் அற்ற படிப்பு உதவித்தொகை வழங்கப்படுகிறது. அவை சிறப்புக்கட்டணம், புத்தகங்கள் வாங்குவதற்கும் ஆகும். சென்ற 1975-76-ல் 1,67,101 மாணவ, மாணவியர் ரூ. 313 இலட்சம் செலவில் பயன் பெற்றனர். 1976-77;இல் 1,79,000 மாணவ, மாணவியர் பயன் பெற ரூபாய் 336.32 இலட்சம் ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது. பள்ளிப் படிப்பிற்கான இவ்வுதவிகளைப் பெற, சென்னை நகரில், சென்னை பிற்பட்டோர் நல அலுவலராலும், அதற்கு மேற்பட்ட பட்டப் படிப்புகளுக்கும் ஏனையவற்றிற்கும் பிற்பட்டோர் நலத்துறை இயக்குநராலும் வழங்கப்படுகின்றன. மாவட்டங்களில் மாவட்ட பிற்பட்டோர் நல அலுவலராலும், மதுரை கள்ளர் சீரமைப்பு, தனித்துணை ஆட்சியாளராலும் வழங்கப்படுகின்றன.

### படிப்பதற்குக் கடனுதவி

மருத்துவம், பொறியியல், கால்நடை மருத்துவம் மற்றும் தொழில் நுட்பம்போன்ற தொழிற்கல்வி கற்கின்ற—ஆண்டு வருமானம் ரூ. 2501-6000-க்குள் உள்ள-பிற்பட்ட குற்றப்பரம்பரைச் சட்டத்திலிருந்து நீக்கப்பட்ட வகுப்பு மாணவர்கள் கல்லூரி விடுதிகளில் தங்கிப் படித்தால், ஆண்டு ஒன்றுக்கு ரூ. 500 கடனாக வழங்கப்படுகிறது. இதற்கென 1976-




77-ஆம் ஆண்டிற்கு ரூ. 2,00,000 ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இவ்வுதவி, பிற்பட்டோர் நலத்துறை இயக்குநரால் வழங்கப்படுகிறது.

### சம்பளச் சலுகை

அரைச் சம்பளச் சலுகை தமிழகக் கல்வித் துறை விதிகளின்படி வழங்கப்படுகிறது. 1948 49-ஆம் ஆண்டு முன்னமேயே இச்சலுகை இருந்து வருகிறது.

மிகப் பிற்பட்ட வகுப்பினருக்கு முழுச் சம்பளச் சலுகை வழங்கப்படுகிறது. இச் சலுகையைப் பெறப் பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ. 1500-க்குள் இருக்க வேண்டும். 1976-77-ல் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்கு ஏற்படும் இழப்பை ஈடு செய்ய ரூ. 3 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இதர பல்கலைக் கழகங்களுக்கு இத்துறையால் ஈட்டுத் தொகை ஏதும் வழங்கப்படுவதில்லை.

படிப்பு உதவித்தொகை என்பது அரைக் கட்டணத்தையும் உள்ளடக்கியதாகும். ஆண்டு வருமானம் ரூ. 1501 முதல் 2500 வரை உள்ள பிற்பட்ட மாணவ, மாணவியருக்கு அரைச்சம்பளத்துடன் படிப்பு உதவித் தொகை வழங்கப்படுகிறது. சிறப்புக் கட்டணங்கள் கட்டவும், புத்தகங்கள் வாங்குவதற்கும் குறிப்பிட்ட தொகைகளே வழங்கப்படுகின்றன. அங்கீகரிக்கப்பட்ட விடுதிகளில் தங்கிப் படிக்கும் மாணவ, மாணவியருக்கு கீழ்கண்ட வீதத்தில் உண்டி, உறையுள்தொகை வழங்கப்படுகிறது.

| | மாதம் ஒன்றுக்கு | | | |
|---|---|---|---|---|
| படிப்பு இனங்கள் | சென்னை நகரில் | | ஏனைய இடங்களில் | |
| | பி.வ | கு.ப.வ | பி.வ | கு.ப.வ |
| | ரூ | ரூ | ரூ | ரூ |
| கலை, விஞ்ஞானம், சட்டம் | 60 | 70 | 50 | 55 |
| மருத்துவம், பொறியியல், விவசாயம், கால்நடை மருத்துவம், ஏனைய தொழில் கல்விகள் | 60 | 75 | 55 | 70 |
| தொழில், டிப்ளமோ | 50 | 60 | 45 | 50 |

**குறிப்பு :** பி.வ—பின்தங்கிய வகுப்பினர்
கு.ப.வ—குற்றப்பரம்பரைச் சட்டத்திலிருந்து நீக்கப்பட்ட வகுப்பினர்.

மிகப் பிற்பட்ட இனத்தைச் சார்ந்த மருத்துவர், வண்ணார், பர்வதராஜகுலம், பட்டணவர், செம்படவர் ஆகிய வகுப்பு மாணவ மாணவியருக்கு உண்டி, உறையுள் தொகை குற்றப்பரம்பரை வகுப்பினருக்கு அளிக்கப்படும் வீதத்தில் அளிக்கப்படும்.

### உணவு மானியம்

அங்கீகரிக்கப்பட்ட தனியார் நடத்தும் இல்லங்களில் தங்கிப்படிக்கும் மாணவ, மாணவியருக்கு ஆண்டிற்கு ரூ. 250 வீதம் உணவு மானியம் வழங்கப்படுகிறது. 1975-76-ல், 2,512 மானியங்கள் வழங்கப்பட்டன. 76.77-லும் 2,512 மானியங்கள் அளிக்கப்படுகின்றன. இதற்கு ரூ. 6.28 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### அரசு மாணவரில்லங்கள்

புதிதாக மாணவரில்லங்கள் ஒவ்வொரு ஆண்டும் திறக்கப்படுகின்றன. இவ்வில்லங்களில் மாணவர்களை சேர்க்கும் வீதம் கீழ்க் கண்டவாறு கடைப்பிடிக்கப்படுகிறது.

| | பின்தங்கிய வகுப்பு மாணவர் இல்லங்கள் | குற்றப்பரம்பரை சட்டத்திலிருந்து நீக்கப்பட்ட மாணவர் இல்லங்கள் |
|---|---|---|
| பிற்பட்டோர் | 65 சதம் | 10 சதம் |
| தாழ்த்தப்பட்டோர் | 25 சதம் | 25 சதம் |
| குற்றப்பரம்பரையை சார்ந்தவர்கள் | ... | 60 சதம் |
| ஏனைய வகுப்பினர் | 10 சதம் | 5 சதம் |

தேவைக்குத் தகுந்தாற்போல் இல்லங்கள் திறக்கப்படுகின்றன. தற்போது 197 இல்லங்களில் 12,320 பேர் தங்கிப் பயன் பெறுகின்றனர். இவ்வாண்டில் மேலும் 800 பேர் பயனடைய, புதிதாக 16 இல்லங்கள் திறக்கப்பட உள்ளன. இவைகள் அனைத்தையும் பராமரிக்க ரூ. 64,32 இலட்சம் 1976-77-ஆம் ஆண்டுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி 213 உணவு விடுதிகளில் 159 உணவு இல்லங்கள் பள்ளி மாணவ, மாணவிகளுக்காக நடத்தப்படுகின்றன. இப்பள்ளி மாணவ மாணவிகளுக்கு இலவசமாக ஆண்டிற்கு இரு முறை சீருடைகள் வழங்கப்படுகின்றன. 1976-77-ல் இத்திட்டத்தின்கீழ் 8,993 மாணவ மாணவிகள் பயனடைவர். அதற்கென ரூ. 2.59 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

### தொழில்

இலவசமாகத் தொழில் கருவிகள் சலவையாளர்களுக்கும் மருத்துவர்களுக்கும் ஒவ்வொரு ஆண்டும் வழங்கப்படுகின்றன. சலவைத் தொழில் கருவிகள் வாங்க ரூ. 240ம் மருத்துவர் கருவிகள் வாங்க ரூ. 75-ம் செலவிடப்படுகிறது. 1976-77-ல் சுமார் 1,300 பேர் பயனடைவதற்கு ரூ. 2.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பிரம்பு, தும்புப்பயிற்சி நிலையங்கள் இரண்டு, கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள பாகோடியிலும், குழித்துறையிலும் நடைபெறுகின்றன. இவற்றில் பயிற்சி பெறுவோரின் எண்ணிக்கை 40. பயிற்சியாளர் ஒவ்வொருவரும் ரூ. 30 வீதம் ஒவ்வொரு மாதமும் உதவிப் பணம் பெறுகின்றனர். இவ்விரு நிலையங்களைப் பராமரிக்க 1976-77-ல் ரூ. 40,000 ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### சலவைத் துறைகள்

சலவைத்துறை கட்ட முன்வரும் நகராட்சிகளுக்கும் நகர பஞ்சாயத்துகளுக்கும் பாதி கடன், பாதி மானியமாக உதவி வழங்கப்படுகிறது. இதன்படி 7 நகராட்சிகளுக்கும், 32 நகர பஞ்சாயத்துகளுக்கும் உதவி வழங்கப்பட்டுள்ளது. 1976-77-ல் மானியமாக ரூ. 50,000-ம், கடனாக ரூ. 60,000-ம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### அரசுப் பணிகளிலும் கல்லூரிகளிலும் இடம் ஒதுக்கீடு.

மொத்தம் உள்ள இடங்களில் 31 சத இடங்கள் கல்வி நிலையங்களிலும், அரசுப்பணிகளிலும் பிற்பட்டோருக்காக ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இது அரசியல் சட்டம் 15 (4), 16 (4)-ன்படி செய்யப்படுகிறது. மிகப் பிற்பட்ட வகுப்பினரும் பிற்பட்டோராக இவ்வொதுக்கீடுகளுக்குக் கருதப்படுவர். குற்றப் பரம்பரைச் சட்டத்திலிருந்து நீக்கப்பட்ட வகுப்பைச் சார்ந்த சில வகுப்பினருக்கும் இவ்வொதுக்கீடு பொருந்தும்.

### சிறப்புப் பயிற்சி நிலையம்

இ.ஆ.ப., இ.கா.ப. போன்ற பணிகளுக்கு தேர்ந்தெடுக்க, மத்திய அரசுப் பணி தேர்வாணைக்குழு மூலம் நடத்தும் தேர்வுகளில் தேர்ச்சி பெற 50 பிற்பட்ட மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்கும் நிலையம் ஒன்று சென்னையில் துவக்கப்பட்டுள்ளது. இதுவரை 2 பேர் இ.ஆ.ப.க்கும், 2 பேர் இ.கா.ப-க்கும் 5 பேர் மற்றைய மத்திய அரசுப் பணிகளுக்கும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். ஆண்டு வருமானம் ரூ. 2,500-க்குள் உள்ள பயிற்சியாளருக்கு இலவச உண்டி, உறையுள் அளிக்கப்படுகிறது. மத்திய அரசு நடத்தும் ஆணை பெற்ற படை அலுவலர் ( Commissioned Rank ) பதவிகளுக்கான தேர்வுகளுக்கும் இந் நிலையத்தில் பிற்பட்ட, தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. 1976-77-ல் இப்பயிற்சி நிலையத்தை நடத்துவதற்கு ரூ. 2.32 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.






## மத்திய அரசின் படிப்பு உதவிகள்

மத்திய அரசின் கல்வித்துறையினரால் குற்றப்பரம்பரைச் சட்டத்திலிருந்து நீக்கப் பட்டிருப்போருக்கும் ஏனைய பொருளாதார பிற்பட்டோருக்கும் வழங்கப்பட்டு வந்த படிப்பு உதவிகள் 1959-60 முதல் மாநில அரசால் வழங்கப்பட்டு வந்தது. இதற்கென வருடா வருடம் ரூ. 14.84 இலட்சம் ஒதுக் கீடு செய்யப்பட்டுள்ளது. இது முதலில் ஆண்டு வருமானம் ரூ. 6,000-க்குள் உள்ள பிற்பட்டோருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, பின் 1964-65 முதல் ஆண்டு வருமானம் 2,400-க்குள் உள்ள பொருளாதாரத்தில் பிற் பட்டோருக்கென மாற்றப்பட்டது. 1969-70 முதல், மத்திய அரசு அளித்து வந்த மானி யத்தை நிறுத்திவிட்டபடியால் 1971-72 முதல் மாநில படிப்பு உதவி விதிகளின்படி ஏற்கனவே 1970-71 வரை இத்திட்டத்தின் கீழ் உதவி பெற்றுப்படிப்பு முடிக்காமல் உள்ள வர்களுக்கு மட்டும் உதவி வழங்கப்பட்டு வரு கிறது. 1976-77-க்கென ரூ. 25,000 ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## குற்றப்பரம்பரைச் சட்டத்திலிருந்து நீக்கப்பட்டோர் நலன்

நாடு விடுதலை பெறுமுன், தாழ்த்தப் பட்ட, மலை வாசிகள், பிற்பட்ட வகுப்புகளைச் சார்ந்த சில மக்களை அக்காலத்திய குற்றப் படம்பரைச் சட்டத்தின் கீழ், கொடுமைப் படுத்தி வந்தது அன்றைய அந்நிய அரசு. இதற்கான காரணம் அம்மக்கள் அன்றைய ஆட்சியர் விரும்பாத சில குற்றங்களைச் செய் ததே. நாடு விடுதலை அடைந்த பின் அவர்கள் அக்குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்டனர். இவர்களில் குறிப்பிடத் தக்கவர்கள் மதுரை மாவட்ட பிறமலைக்கள்ளர், இராமநாதபுரம், திருநெல்வேலி மாவட்ட மறவர் ஆகியோ ராவர். மதுரை மாவட்டத்தில் பிறமலைக் கள்ளர்களை நல்வழிப்படுத்த, கள்ளர் சீரமைப்பு அமைக்கப்பட்டது. அம்மக்கள் பெருவாரி யாக உள்ள மதுரை, நெல்லை, முகவை, கோவை, தர்மபுரிசேலம், வடார்க்காடு, தென் னார்க்காடு மாவட்டங்களில் 275 பள்ளிகள் திறந்து நடத்தப்பட்டு வருகின்றன.

குற்றப் பரம்பரைப் பட்டியலில் இருந்து நீக்கப்பட்ட மக்களின் நலன்கருதிப் பின்கண்ட பணிகள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

## இலவசப் புத்தகங்களும், கரும்பலகைகளும் வழங்குதல்

குற்றப்பரம்பரைச் சட்டத்திலிருந்து நீக்கப்பட்டோருக்கென உள்ள பள்ளிகளில் படிக்கும் எல்லா மாணவர்களுக்கும் இலவச மாக புத்தகங்களும், கரும்பலகைகளும் வழங் கப்படுகின்றன. இதற்கென 1976-77-ஆம் ஆண்டிற்கு 30,310 மாணவ, மாணவியர் பயன் பெற ரூ. 1.46 இலட்சம் ஒதுக்கீடு செய் யப்பட்டுள்ளது.

## உணவு மானியம்

தனியார் நடத்தும் அங்கீகரிக்கப்பட்ட மாணவரில்லங்களில் தங்கிச் கல்வி கற்கும் மாணவ மாணவியருக்கு உணவு மானியம் வருடம் ஒன்றுக்கு ரூ. 250 வழங்கப்படுகிறது. 1976-77-ல், 104 மானியங்கள் வழங்க ரூ. 26,000 ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## படிப்பு உதவித்தொகைகள்

முதல் வகுப்பு முதல், கல்லூரிப் படிப்பு வரை ஆண்டு வருமானம் ரூ. 25,00/-க்குள் உள்ள குற்றப் பரம்பரைப் பட்டியலில் இருந்து நீக்கப் பட்ட வகுப்பு மாணவ மாணவியருக்கு படிப்பு உதவிகள் வழங்கப்படுகின்றன. 1 முதல் 5 வகுப்பு வரை உண்டி, உறையுள் அற்ற உதவி யும், 6-ஆம் வகுப்புக்கு மேல் உண்டி உறையுள் படிப்பு உதவி அல்லது அவை அற்ற உதவியும் அளிக்கப்படுகிறது. 1975-76-ல் ரூ. 31 இலட்சம் செலவில் 65,844 மாணவ மாணவி யர் இதன் மூலம் பயன் பெற்றனர். 1976-77-ல் ரூ. 35.69 இலட்சத்தில் 76,000 மாணவ மாணவியர் பயன் பெறுவர்.

## மதிய உணவு

மதிய உணவு, குற்றப் பரம்பரைச் சட் டத்திலிருந்து நீக்கப்பட்டோருக்கான பள்ளி களில் எல்லாம் வழங்கப்படுகிறது. நெல்லை, இராமநாதபுரம் மாவட்டங்களில் உள்ள ஒரு சில தனியார் பள்ளிகளிலும் வழங்கப்படுகிறது. ஒவ்வொரு மாணவருக்கும் வழங்கும் மதிய உணவின் மதிப்பு 15 பைசாவாகும். 1976-77 இல் இதற்கென ரூ. 10.90 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்துடன் 'கேர்' நிறு வனம் அளிக்கும் உதவிகளையும் ஆண்டுக்கு 100 நாட்களுக்கு உபயோகப்படுத்தப்படு கிறது.

## சீருடைகள்

இம்மக்களுக்கென உள்ள அரசுப் பள்ளி களிலும், மாணவரில்லங்களிலும் இலவசமாக ஆண்டுக்கு இருமுறை சீருடைகள் வழங்கப் படுகின்றன. 1976-77-ல் 30,000 மாணவ மாணவியர் பயன்பெற ரூ. 7.74 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## மாணவர் இல்லங்கள்

இவ்வகுப்பைச் சார்ந்த மாணவ மாணவி யரின் கல்வி முன்னேற்றத்திற்கு மாணவரில் லங்கள் மிகத் தேவையெனக் கருதப்பட்டு மிகவும் பின்தங்கிய பகுதிகளில் 53 மாணவ ரில்லங்கள் திறக்கப்பட்டு 5,069 பேர் பயன

டைந்து வருகின்றனர். இவைகளை 1976-77-இல் பராமரிக்க ரூ. 19.70 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### தாழ்த்தப்பட்டோர்—மாணவரில்லங்களில் சேர்க்கும் விதம்

தாழ்த்தப்பட்ட மக்களுக்கென நடத்தப்படும் மாணவரில்லங்களில் இவ்வகுப்பு மாணவர்கள், பிற்பட்டோருக்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட வீதத்தில் சேர்க்கப்படுகின்றனர்.

### பொருளாதார முன்னேற்றம்

**விவசாயம்:** நல்ல முறையில் விவசாயம் செய்வதற்காகப் புதுக்கிணறுகள் தோண்டவோ அல்லது பழைய கிணறுகளை ஆழப்படுத்தவோ, கிணறு ஒன்றுக்கு ரூ. 2,500 வழங்கப்படுகிறது. 1976-77-ல் 40 பேர் பயனடைய ரூ. 1 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**கைத்தொழில்:**— விவசாயத்திற்கான உதவி தவிர, இம்மக்களைக் கைத்தொழிலிலும் ஊக்குவிக்க, கூட்டுறவுச் சங்கங்களும், தொழிற் பயிற்சிக் கூடங்களும் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திலிருந்தே திறக்கப்பட்டு நடைபெறுகின்றன. அவைகளில் இன்றும் தொடர்ந்து பயிற்சி அளிக்கும் நிலையங்களாக உள்ளவை:

1. மதுரை மாவட்டம், செக்கானூரணியில் உள்ள பொதுப் பொறியியல் பட்டறை.
2. இராமநாதபுர மாவட்டம், முதுகுளத்தூரில் உள்ள பொதுப் பொறியியல் பட்டறை.
3. திருநெல்வேலி மாவட்டம், வீரகேரளம்புதூரில் உள்ள பொதுப் பொறியியல் பட்டறை.
4. திருநெல்வேலி, பெருங்குளத்தில் உள்ள தையல் ரெடிமேட் உடை தயாரிக்கும் நிலையம்.
5. தென்னார்க்காடு மாவட்டம் அஜிஸ் நகரில் உள்ள கைத்தறி நிலையம்.
6. தென்னார்க்காடு மாவட்டம் அஜிஸ் நகரில் உள்ள தச்சுப்பட்டறை.
7. தர்மபுரி மாவட்டம் சாமியாபுரத்தில் உள்ள மூங்கில் பயிற்சி நிலையம்.
8. மதுரை மாவட்டம் உசிலம்பட்டியில் உள்ள தையல் பூ வேலை பயிற்சி நிலையம்.

மேற்கண்ட பயிற்சி நிலையங்களை நடத்த 1976-77-ல் ரூ. 2.92 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### வீடுகள் கட்டுதல்

வீடு ஒன்று ரூ. 1,200 வீதம் (ரூ. 900 மானியம், ரூ. 300 கடன், குற்றப் பரம்பரைப் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டோருக்காக வீடுகள் கட்டப்படுகின்றன. இத்தொகை மானியமாக வழங்கப்படுகிறது. இது தற்போது ரூ. 2,700 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. 40 வீடுகள் கட்ட 1976-77-ல் ரூ. 1 இலட்சம் மானியமும் ரூ. 0.50 இலட்சம் கடனாகவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



### குடியிருப்புகள்

இம்மக்களைச் சார்ந்த சில பிரிவுகளுக்கு கீழே கண்ட இடங்களில் குடியிருப்புகள் உள்ளன.

(1) சென்னை நகரில் உள்ள பிரிஸ்லி நகர்.

(2) தென்னார்க்காடு மாவட்டத்தில் உள்ள அஜிஸ்நகர்.

(3) செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள பம்மல் செட்டில்மெண்டு.

**பிரிஸ்லி நகர்:** சென்னை, பெரம்பூரில் 'பி. அண்ட் சி' மில்லுக்கு அருகில் அமைக்கப்பட்டுள்ளது. இதில் 1,500 பேர் உள்ளனர். இவர்களுக்கு 109 வீடுகள் இலவசமாக வழங்கப்பட்டுள்ளன. இங்கு சென்னை மாநகராட்சி, பள்ளி ஒன்றை நடத்துகிறது. இங்கு நூலகம் ஒன்றும் உள்ளது. அதற்கு வருடாவருடம் ரூ. 200 இத்துறையால் வழங்கப்படுகிறது.

**அஜிஸ்நகர் செட்டில்மெண்டு:**— 1911-ல் தென்னார்க்காடு மாவட்ட ஆட்சியாளராக இருந்த திரு. அஜீஸ்சதீன் சாயபு அவர்கள் நெய்வேலிக்கருகாமையில் உள்ள ஊமங்கலத்தில், குற்றங்கள் புரிந்ததாக வேப்பூரைச் சார்ந்த ஆதி திராவிட மக்களைக் கொணர்ந்து குடியமர்த்தினர். இது வட்டாட்சியர் அளவில் உள்ள மேலாளர் ஒருவரால் பராமரிக்கப்படுகிறது.

இங்கு 400 குடும்பங்கள் உள்ளன. மக்கட் தொகை. 2351 அரசினரால் கட்டப்பட்ட 344 வீடுகளில் வசிக்கின்றனர். அரசு மருத்துவமனை ஒன்றும் உள்ளது.

இங்கு இத்துறையால் ஒரு உயர் நிலைப்பள்ளியும், ஒரு துவக்கப்பள்ளியும் நடத்தப் பெறுகின்றன. இங்குள்ள மக்களின் முக்கியத் தொழில் விவசாயம். இவை தவிர 152 பேர் நெய்வேலி நிலக்கரிச் சுரங்கத்தில் வேலை பார்க்கின்றனர். ஒரு கைத்தறிப் பட்டறையும் ஒரு தச்சுப்பட்டறையும் இங்கு உள்ளன.

இவைகள் யாவற்றையும் பராமரிக்க 1976-77-ல் ரூ 2,50,800 ஒதுக்கீடு செய்யப்பட்டுள்து.

**பம்மல் செட்டில்மெண்டு:**— 1917-ல் தென்னார்க்காடு மாவட்டத்தைச் சார்ந்த குற்றப்பரம்பரையினர் சிலர், பம்மலில் கொண்டு வந்து குடியமர்த்தப்பட்டனர். அவர்கள் தற்பொழுது 140 குடும்பங்களாக உள்ளனர். 140 குடும்பங்களில் 40 குடும்பத்தினர் விவசாயத்திலும் ஏனையயோர் சுற்றுப் புறத்திலுள்ள தொழிற்சாலைகளிலும் வேலை பார்க்கின்றனர்.

## நரிக்குறவர்களின் நலம்

நாடோடி மக்களாக வாழ்ந்த நரிக்குறவர்களை ஓரிடத்தில் தங்க வைத்து, வாழ்வளிப்பதற்காக அவர்களுக்கு வீட்டுமனைகளும், வீடுகளும், விவசாயத்திற்கான நிலங்களும் அளிக்கப்படுகின்றன. சென்ற 1975-76-ல் இவர்கள் தங்கள் தொழிலான மணிமாலை செய்தல், ஊசி செய்தல் முதலியவற்றிற்கு ரூ. 54,000 வட்டியில்லாக் கடனாக வழங்கப்பட்டது. 1976-77-ல் இதற்கென ரூ. 72,000 ஒதுக்கப்பட்டுள்ளது. இம்மக்கள் மேம்பாடடைய ஏனைய பொருளாதார, கைத்தொழில் வசதிகளும் அளிக்கப்படும்.

இத்துறையால் நடத்தப்படும் திட்டங்கள் தவிர, இந்திய மக்களின் நல்வாழ்வுச் சாசனமான பிரதமரின் 20 அம்சத் திட்டத்தின் மூலம் பிற்பட்ட வகுப்பினர் பெரும் பயன் அடைய வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

பிரதமரின் 20 அம்சத் திட்டம், பொது மக்களுக்கென்றாலும் மக்கள் தொகையில் 53 சதம் உள்ள பிற்பட்ட மக்களுக்கே பெரிதும் முன்னேற்றமடையச் செய்யும், உணவு, உடைகள், அன்றாடம் பயன்படும் பொருள் ஆகியவற்றின் விலைகளைக் குறைத்ததால், ஏழை, பிற்பட்ட மக்களின் வாழ்வு வளம் பெறும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. உச்ச வரம்பால் மீதமாகும் நிலங்கள், ஏழை, எளிய, பிற்பட்ட நிலமற்ற விவசாயிகளுக்கு பகிர்ந்தளிக்க வழி பிறந்துள்ளது. வீடற்றோருக்கு வீட்டு வசதிகள் பெருகியுள்ளது. கடன்பட்ட நெஞ்சங்கள், கடன் நிவாரணச் சட்டத்தால் வாழ்வில் மறுமலர்ச்சி பெற்றுள்ளன. குறைந்த பட்ச விவசாயக் கூலி நிர்ணயிக்கப்பட்டதால் ஏழை, பிற்பட்ட, விவசாய, பாட்டாளி மக்கள் வாழ்வில் ஏற்றம் பெற்றுள்ளனர். நெசவைத் தொழிலாகக் கொண்டுள்ள குறிப்பிட்ட சில பிற்பட்ட மக்கள், அத்தொழிலுக்கு அளிக்கப்படும் ஊக்கத்தால் மேம்பாடடைந்து வருகின்றனர். கட்டுப்படுத்தப்பட்ட விலையில் அத்தியாவசிய உணவுப் பண்டங்கள், புத்தகங்கள், நோட்டுகள் வழங்கப்படுவதால் பிற்பட்ட மாணவர் சமூகம் மிகவும் பயன் பெற்றுள்ளது.

இம்முறைகளால், பிற்பட்ட வகுப்பு மக்கள் அரசு அளிக்கும் சலுகைகளை முழு அளவில் பெற்று, தங்களின் வாழ்க்கை முறைகளில் முன்னேற்றம் அடைந்து, கல்வி, பொருளாதார, சமுதாய நிலையில் உயர்வும் பெற்று, வளமான வாழ்க்கை நடத்த வழி வகுக்கப்பட்டுள்ளது.



## கதர்த் தொழிலை ஆதரியுங்கள்!

"மகாத்மா காந்தி, தனது பிறந்தநாளை சர்க்கா ஜெயந்தியாகக் கொண்டாடுமாறு கூறினார். கதர்த் தொழிலானது இலட்சக் கணக்கான மக்களுக்கு வேலையளிக்கிறது. எனவே நாம் காதியைப் பற்றி நினைக்கும் போது, வேலையற்றுள்ள ஏராளமான மக்களைப் பற்றி எண்ணிப் பார்க்க வேண்டியது அவசியமாகும். கதர் அணியும் பழக்கம் இல்லாதவர்கள் கூட படுக்கை விரிப்பு, ஜன்னல் திரை முதலியவற்றை வாங்குவதன் மூலம் கதர்த் தொழிலை ஆதரிக்க முன்வரவேண்டும்."

"காந்தியின் போதனைகளில் சத்தியமும், அகிம்சையும் இரு அடிப்படை இலட்சியங்களாகும். இவற்றைப் போதித்த காந்தியடிகள் பொருளாசை, பதுக்கல் ஆகியவற்றைப் பற்றியும் எச்சரித்தார். பதுக்கல், திருட்டைப் போன்றது என்றும் குறிப்பிட்டுள்ளார்."

"மகாத்மா, நிகழ்ச்சிகளின் போக்குகளிலிருந்து ஒதுங்கி நிற்கவில்லை. சரியோ, தவறோ, காந்தீயவாதி என்பவர் உலகைத் துறந்த சன்னியாசி என்ற எண்ணம் உள்ளது. இது தவறு. காந்தியடிகளின் பாதையை நாம் உண்மையாகப் பின்பற்றுகிறவர்கள் என்னும் முறையில், நாம் நாட்டு நடப்புகள் விசயத்தில் செயலற்ற போக்கை விட்டு, ஆக்கபூர்வமான முறையில் செயல்பட வேண்டும். குறிப்பாக, நாட்டின் சமூக, பொருளாதாரத் துறைகளில் வளர்ச்சி வேகத்தை விரைவுபடுத்த நமது பங்கினை அளித்திட வேண்டும்."

"காந்தீயவாதிகள் இன்னமும் தார்மீக பலத்தைப் பெற்றவர்களாகத் திகழ்கின்றனர். அவர்கள் 20 அம்சப் பொருளாதாரத் திட்டம், 12 அம்ச மதுவிலக்குத் திட்டம், குடும்பநலத் திட்டம், வரதட்சணை ஒழிப்பு இயக்கம் போன்றவைகளில் பங்கு கொள்ள வேண்டும் எனக் கேட்டுக் கொள்கின்றேன்."

இவ்வாறு, இந்தியத் துணை ஜனாதிபதி திரு. ஜட்டி அவர்கள் சென்னை, கிண்டியிலுள்ள காந்தி மண்டபத்தில் காந்தியடிகள் பிறந்தநாள் விழாவினை 2.10.1976 நாளன்று துவக்கி வைத்து உரையாற்றியபோது குறிப்பிட்டார்.

# குடும்ப நலம் குறித்துக் காந்தியடிகள்....



பெரிய குடும்பம் இருப்பது சுப சூசகம். அதனால் அது விரும்பத் தக்கது என்ற மூட நம்பிக்கை இன்னும் இருந்து வருகிறது. சில சந்தர்ப்பங்களில் பிரஜோற்பத்தி செய்வது எப்படி ஒரு கடமை யாகிறதோ, அதே மாதிரி வேறு சில சந்தர்ப்பங்களில் இதைக் கட்டுப்படுத்துவதும் ஒரு கடமை யாகிறது.

* * * *

ஆரோக்கியத்திற்கான வழிகள் பல; அவை யாவும் முக்கியமானவையே. ஆனால், மற்றெல்லாவற்றையும்விட அவசியமானது பிரம்மச்சரியம். சுத்தமான காற்று, சுத்தமான தண்ணீர், நல்ல உணவு ஆகியவை நிச்சயம் ஆரோக்கியத்திற்கு உதவி செய்கின்றன. ஆனால், சம்பாதிக்கும் ஆரோக்யத்தையெல்லாம் செலவிட்டுக் கொண்டேயிருந்தால், நாம் எப்படி ஆரோக்கியம் உள்ளவர்களாக இருக்க முடியும்?

நாம் திரட்டும் பணத்தையெல்லாம் செலவழித்து விட்டால், ஓட்டாண்டியாகாமல் இருக்க முடியுமா? உண்மையான பிரம்மச்சரியத்தை அனுஷ்டித்தாலொழிய ஆண்களும், பெண்களும் வீரியமுள்ளவர்களாகவோ, வலிமை உள்ளவர்களாகவோ இருக்க முடியாது என்பதில் சந்தேகம் இருக்க முடியாது.

பிரம்மச்சரியம் என்பதுதான் என்ன? ஆண்களும், பெண்களும், பரஸ்பரம் சரீர இச்சை உணர்வு அற்று இருப்பது என்பதே அதன் அர்த்தம். அதாவது, இருவரும் ஒருவரையொருவர் காம எண்ணத்துடன் தொடக் கூடாது ; கனவில் கூட அந்த எண்ணம் அவர்களுக்கு வரக் கூடாது. அவர்கள் ஒருவரை ஒருவர் பார்ப்பதிலும், காம நோக்கம் எதுவும் இருக்கலாகாது. கடவுள் நமக்கு அளித்துள்ள சக்தி மறைந்து கிடக்கிறது. கடுமையான சுயக் கட்டுப்பாட்டின் மூலம் அதை நாம் பத்திரப்படுத்தி, உடலுக்கு மட்டுமின்றி, மனதிற்கும் ஆத்மாவிற்கும் ஊக்கமும் வலிமையும் அளிக்கும் சக்தியாக அதை மாற்ற வேண்டும்.

* * * *

தங்களுடைய சரீர இச்சையைப் பூர்த்தி செய்து கொள்வதற்காகச் சேர்க்கையில் ஈடுபடுபவர்களே மிகப் பெரும்பான்மையாக இருக்கிறார்கள். இதன் பயனாக, வேண்டாத நிலையிலேயே அவர்களுக்குக் குழந்தைகள் பிறந்துவிடுகின்றன. சேர்க்கையினிடம் உள்ள வெறியில் அவர்கள் தம்முடைய செய்கைகளின் பலன்களைப் பற்றி நினைப்பதில்லை. இந்த விஷயத்தில் பெண்களை விட ஆண்கள் மீது தான் அதிகம் குற்றம் சுமத்த வேண்டும். காம வெறியினால் கண் மறைக்கப்பட்ட ஆண், தன் மனைவி பலவீனமானவள் என்பதையும், அவள் கர்ப்பம் தரித்து, பிள்ளையைப் பெற்று வளர்க்கும் சக்தியில்லாதவள் என்பதையும் கூட மறந்துவிடுகிறான்.

* * * *

தாய்மை என்ற பெரும் பாரத்தை நமது பெண்களின் மீது சுமத்த நாம் தயங்கவில்லை. நமது குழந்தைகள் பலவீனமாகவும், ஆண்மையற்றும், மந்த புத்தி உடையவர்களாகவும் இருப்பதைப்பற்றிக்கூட நாம் கவலைப்படுவதில்லை. ஒவ்வொரு தடவையும் குழந்தை பிறக்கும் போது கடவுளுக்கு நன்றி செலுத்திவிட்டு, நமது செய்கைகளின் தீமைகளை மறைக்கப் பார்க்கிறோம். சோனிகளாகவும், காமாதுரர்களாகவும் முடவர்களாகவும், பயந்தவர்களாகவும் உள்ள குழந்தைகளைப் பெறுவது கடவுளின் கோபத்திற்கு அறிகுறியாகும் என்று நாம் கருத வேண்டாமா? சிறு பையன்களும், பெண்களும் குழந்தைகளைப் பெறுவது சந்தோஷப்படக்கூடிய விஷயமா? அது ஒரு சாபமல்லவா? ஓர் இளம் செடியில் காய் காய்த்துப் பழுக்க ஆரம்பிப்பது செடிக்குக் கெடுதல் செய்யும் என்பதற்காக அதை நாம் எப்படியும் தாமதப்படுத்த வேண்டுமென்று விரும்பவில்லையா? ஆனால் ஒரு சிறு பையனுக்கும், சிறு பெண்ணுக்கும் குழந்தை பிறந்தால், கடவுளுக்கு நன்றி செலுத்தித் துதி பாடுகிறோம்! இதை விடக் கொடூரமானது ஏதாவது இருக்க முடியுமா? இந்தியாவிலோ, இதர இடங்களிலோ, இம்மாதிரி ஆண்மையற்ற குழந்தைகள் கணக்கில் அடங்காமல் பெருகுவதால் உலகத்தைக் காப்பாற்றி விடப் போவதாக நினைக்கிறோமா? இந்த விஷயத்தில் நாம் மட்டமான மிருகங்களை விட மோசமாக இருக்கிறோம். ஏனெனில், ஈன்றெடுப்பதற்காக மட்டுமே தான் மிருகங்கள் ஒன்றோடு ஒன்று சேர்கின்றன. கர்ப்பம் தரித்ததிலிருந்து, குழந்தை பால் குடியை மறக்கும் வரையில் ஆணும் பெண்ணும், தனித்திருக்க வேண்டுமென்பதை ஒரு புனிதமான கடமையாகக் கருத வேண்டும். ஆனால், அந்தப் புனிதமான கடமையைப் பொருட்படுத்தாமலே, நாம் நாசகரமான இன்ப வாழ்க்கையை நடத்திக் கொண்டேயிருக்கிறோம். அநேகமாகத் தீராத வியாதியாக இருக்கும் இது நமது மனத்தைச் சோர்வடையச் செய்துவிடுவதோடு, கொஞ்ச காலம் பரிதாபகரமாக வாழ்க்கை நடத்திய பிறகு அகால மரணம் அடையும்படியும் செய்துவிடுகிறது. திருமணத்தின் உண்மையான நோக்கத்தை மணமானவர்கள் உணர வேண்டும்.

* * * *

உண்மையான பிரம்மச்சாரி சரீர இச்சையுடன் போராட வேண்டியிராது; பிரஜோற்பத்தி ஆசையும் அவனுக்கு இராது. அம்மாதிரி உபத்திரவங்களே அவனுக்குக் கிடையாது. உலகம் முழுவதுமே அவனுக்கு ஒரு பெரிய குடும்பந்தான். அவனுடைய ஆசையெல்லாம் மனித வர்க்கத்தின் துன்பத்தைத் தீர்ப்பதாகவே இருக்கும். பிரஜோற்பத்தி என்ற இச்சையே அவனுக்கு வேப்பங் காயாக இருக்கும். மனித வர்க்கத்தின் துன்பம் எவ்வளவு பிரம்மாண்டமானது என்பதை உணர்ந்து விட்டவன், என்றும் இச்சையினால் தூண்டப்படமாட்டான். தன்னுள் இருக்கும் சக்தி ஊற்று இயற்கையாகவே அவனுக்குத் தெரிந்திருக்கும். அதை அசுத்தப்படுத்தாமல் காப்பதற்கு அவன் என்றும் முயல்வான். அவனுடைய எளிமை நிறைந்த பலம் உலகத்தின் மதிப்பைப் பெறும். செங்கோல் பிடித்த மன்னனை விட அவனுக்கு அதிகச் செல்வாக்கு இருக்கும்.

**ஆதாரம்: மகாத்மா காந்தி நூல்கள்: தொகுப்பு (4).**

# அஞ்சலக வங்கியின்

# மாபெரும் பரிசுத் திட்டம்

ஆண்டுக்கு இருமுறை

குலுக்கல்கள் **ஜனவரியிலும் ஜூலையிலும்** நடைபெறும்

**ரூ. 20½ இலட்சத்திற்கு**
**11,116 பரிசுகள்**

*ஒவ்வொரு குலுக்கலுக்கும் ரூ. 20½ இலட்சத்திற்குக் கீழ்க்கண்ட*
***11,116** பரிசுகள் உண்டு.*

| | | | |
|---|---|---|---|
| முதல் பரிசு (ஒரு லட்சம்) ஒன்று | ... | ரூ. | 1,00,000 |
| 5 இரண்டாம் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | ரூ. | 50,000 |
| 10 மூன்றாம் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | ரூ. | 20,000 |
| 100 நான்காம் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | ரூ. | 5,000 |
| 1,000 ஐந்தாம் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | ரூ. | 500 |
| 10,000 ஆறாம் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | ரூ. | 50 |

*ஏப்ரல் அல்லது அக்டோபர் முதல் தேதியிலிருந்து ஆறு மாதத்திற்கு உங்களது அஞ்சலக சேமிப்புக் கணக்கில் ரூ. 200/-க்குக் குறையாமல் இருந்தால உங்கள் எண் பரிசு குலுக்கலில் சேர்த்துக் கொள்ளப்படும். ஆண்டு முழுவதும் உங்கள் கணக்கில் ரூ. 200/–க்குக் குறையாமல் வைத்திருந்தால் இரண்டு குலுக்கல்களிலும் கலந்து கொண்டு பரிசு பெற வாய்ப்புண்டு.*

*உங்கள் சேமிப்புத் தொகைக்கு 5% வட்டி, பரிசு பெற்றவர்க்கும், பெறாதவர்க்கும் அளிக்கப்படும்.*

*விபரங்களுக்கு அருகிலுள்ள தபால் நிலையத்தோடு உடன் தொடர்பு கொள்ளுங்கள்.*

**இயக்குநர்.**

தமிழ்நாடு அரசு சிறுசேமிப்புத்துறை,

சென்னை-600 002.



# தமிழ்நாட்டில் குடும்ப நலத் திட்டம்

—ஆர். வி. சுப்பிரமணியன்,
ஐ. ஏ. எஸ்.,
ஆளுநர் ஆலோசகர்,
தமிழ்நாடு அரசு.

குடும்ப நலத் திட்டம், தேசிய கண்ணோட்டத்தில் ஒரு முக்கியத் துவத்தைப் பெற்றுள்ளது. இந்திய அரசும், இத்திட்டத்திற்கு முதன்மை இடம் அளித்துள்ளது. தேசியத் திட்டத்துடன் இணைந்திருக்கும் குடும்ப நலத் திட்டத்தின் அடிப்படை பொருத்தத்தினை தமிழ்நாடுதான், முதலில் கண்டு கொண்டது. அத்துடன் மக்கள் தொகையினைக் கட்டுப்படுத்தும் வகையில் குடும்பநல அறுவைச் சிகிச்சை ஆரம்பிக்கப்பட்டது.

முதல் ஐந்தாண்டுத் திட்டக் காலத்திலிருந்தே இத்திட்டம் தமிழ்நாட்டில் நடைமுறையிலிருந்து வருகிறது. பின்னர் இத்திட்டம் நாடு பூராவிலும் வட்டார அளவில் விரிவாக்கப்பட்டது. அடைந்த வெற்றிகளும், பாராட்டுதலுக்குரியதாகும்.

இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில், ஆராய்ச்சியுடன் கூடிய செயல் திட்டம் உருவாக்கப்பட்டு, மக்களின் உபயோகத்திற்காக கருத்தடை சாதனங்கள் அதிகார பூர்வமாகச் சிபாரிசு செய்யப்பட்டன. குடும்பநல ஆலோசனைக் குழுவுடன் கூடிய ஒரு மைய நிலையம், மத்திய அளவில் நிறுவப்பட்டது. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில், பயிற்சி வகுப்பு நடத்துதல், ஊழியர்களைப்பயிற்றுவித்தல், கருத்துக்களை உருவாக்கும் மக்கள் தலைவர்களை ஈடுபடுத்துதல், கல்வி விளக்கப் பிரசுரங்களைத் தயார் செய்து வழங்குதல் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அரசினர் மருத்துவமனைகளில், 15 நகர்ப்புற குடும்பநல நிலையங்களும், 83 கிராம குடும்பநல நிலையங்களும் ஏற்படுத்தப்பட்டன.

மூன்றாம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில், பிறப்பு விகிதத்தை 1,000-க்கு 25 என, அடுத்து வரும் பத்தாண்டுக் காலத்தில் குறைப்பதற்கு, ஒரு நீண்ட கால குறிக்கோள் வரையறுக்கப்பட்டது.

### தேசிய விருதுகள்

நான்காம் ஐந்தாண்டுத் திட்ட காலத்தில், குடும்ப நலத் திட்டத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. அதிக நெருக்கமான பகுதிகளில் குடும்ப நலத் திட்டத்தைத் தீவிரப்படுத்தும் வகையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, முக்கிய கவனம் செலுத்தப்பட்டது. 1961—62, 1962—63, 1965—66, 1966—67, 1074—75-ல் குடும்ப நலத் திட்டத்தைச் சிறப்பான முறையில் நிறைவேற்றியதற்கான தேசிய விருதுகள் தமிழ்நாட்டிற்கு அளிக்கப்பட்டன.

சிறு குடும்ப நெறி உணர்வினை ஏற்றுக்கொள்ளும் வகையில் மக்களுடைய எண்ணம் மற்றும் பழக்க வழக்கங்களில் ஒரு மனமாற்றத்தை ஏற்படுத்துவதே, குடும்பநல மக்கள் கல்வித் திட்டத்தின் குறிக்கோளாகும். சிறு குடும்ப நெறி உணர்வினை தீவிரமாக பிரச்சாரப் படுத்துவதின் முக்கியத்துவத்தை உணர்ந்துள்ளது இத்திட்டம். அத்துடன், படக் காட்சி, வானொலி மற்றும் பத்திரிகை மூலம் செய்யப்படும் விளக்கம் நம் மக்களில் 25 சதவிகிதத்தினருக்கே சேர முடியும். எனவே இருக்கக் கூடிய வசதிகள் அனைத்தையும் பயன்படுத்தி, மக்களின் எழுத்தறிவின்மை என்னும் தடையினை உடைத்தெறியும் வகையில் கிடைக்கும் தகவல் விளக்க துறைகள் மூலம், இத்திட்டம் செயல்பட்டு வருகின்றது.

### ஒருங்கிணைந்த செயல் முறை

மக்களிடையே நிலவி வரும் பாரம்பரிய கலைகள், வழிவழியாக வந்துள்ள நாடகம், கலை நிகழ்ச்சிகள், சுவர் விளம்பரம், தட்டி விளம்பரம் போன்றவைகள் மற்றும், நிலையானவானொலி, படக்காட்சி போன்றவைகள் ஆகிய அனைத்தின் மூலமும் ஒருங்கிணைந்த கல்வி விளக்கப் பணியினை குடும்பநல பிரச்சாரத் திட்டம் செயல்படுத்தி வருகின்றது. மக்களை விழிப்புறச் செய்யும் மக்கள் கல்வி விளக்கப் பணியும், தனி நபரை ஊக்குவிக்கும்கருத்து விளக்கப்பணியும்ஒன்றுக்கொன்று இணைந்து செயல்பட்டு வருகின்றது.

தேசிய குடும்பநலத் திட்ட இரு வார விழா நாடு பூராவிலும் கொண்டாடப்பட்டு வருகின்றது. 1976 ஆகஸ்ட் 28-ஆம் தேதியிலிருந்து ஊக்குவிப்புப் பணியும்

தொடர்ந்து செப்டம்பர் 16-லிருந்து 30 வரை இரு வார விழாவும் நடைபெற்றது. அவ்வியக்கத்தின் ஒரு பகுதியாக, பிரபல சினிமா நடிக, நடிகையர், பின்னணிப் பாடகர்கள், இசையமைப்பாளர்கள், பேச்சாளர்கள், கவிஞர்கள், ஆகியோரை ஈடுபடுத்தி குடும்பநல கவியரங்கம், பட்டி மன்றம் மற்றும் இசை கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பெற்று வருகின்றன. அது போன்றே, நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் கூட்டங்கள், குழு விவாதங்கள், படக்காட்சிகள், கலை நிகழ்ச்சிகள், நாடகங்கள் முதலியன நடத்தப் பெற்று, மக்களிடையே ஒரு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தி, அவர்கள் ஏதாவது ஒரு குடும்பநல முறையினை ஏற்கும்படி ஊக்குவிக்கப்படுகின்றனர்.

## தமிழ்நாட்டின் இலக்கு

1975—76-ல் தமிழ்நாட்டிற்கு நிர்ணயிக்கப்பட்ட இலக்கான 2,11,300 அறுவைச் சிகிச்சைகளையும் மீறி, 2,92,060 அறுவை சிகிச்சைகள் செய்து முடிக்கப் பட்டன. நடப்பு ஆண்டின் இலக்காக, 5,00,000 அறுவைச் சிகிச்சைகள் நிர்ணயிக்கப்பட்டு உள்ளது. அறுவைச் சிகிச்சை ஏற்றுக் கொண்டவர்களின் மத வாரியான விகிதாசாரமும், மொத்த மக்கள் தொகையில் அவர் தம் விகிதாச்சாரமும் சற்றேறக்குறைய ஒன்றாகவே உள்ளது. குடும்பநலத் திட்டத்திற்கு மத அடிப்படையில் எவ்வித எதிர்ப்பும் இல்லை!

## மக்கள் திட்டமாக மாறி வருகிறது !

குடும்பநலத் திட்டத்தைத் தன்னால் இயன்ற அளவு செயல்படுத்தும் அதே நேரத்தில், தன்னியக்க நிறுவனங்களின் பங்கினையும் தமிழ் நாடு அரசு கவனிக்கத் தவறவில்லை. குடும்பநலத் திட்டத்தை ஏற்று நடத்த, அவர்களுக்குத் தேவையான உதவியும் அளிக்கப்படுகின்றது. இது ஒரு மக்கள் திட்டமாக-இயக்கமாக—மாறியதன் காரணமாக, 'ரோட்டரி', 'ரவுண்ட் டேபிள்' போன்ற தன்னியக்க நிறுவனங்கள் அரசின் ஒத்துழைப்புடன் முனைப்பு இயக்கம் நடத்தின. அரிமா சங்கம், இந்த ஆண்டினை குடும்ப நல ஆண்டாகத் தேர்ந்தெடுத்து உள்ளது. அவைகளுக்கும் தேவையான உதவி அளிக்கப்படுகின்றது. அது போலவே, சென்னை குடும்ப நல அமைப்பு, 7 குடும்பநலத் திரைப்படங்களைத் தயாரித்துள்ளது. முதற் கட்டமாக, அவைகள் அனைத்தும், சென்னை நகர திரையரங்குகளில் வெளியிட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

## வெற்றி பெறுவோம் !

தேசிய மக்கள் தொகை கொள்கை அறிவிக்கப்பட்டபின், மக்களிடையே ஒரு விழிப்புணர்ச்சியும், தீவிரத் தன்மையும் ஏற்பட்டுள்ளது. அது மட்டுமன்றி, நீண்ட நாளையத் தேவையினையும் பூர்த்தி செய்துள்ளது. திருமண வயதினை உயர்த்துதல், அறுவைச் சிகிச்சையினை ஏற்போர்க்கு ஈட்டுத் தொகையினை உயர்த்துதல், அனைத்து அரசு துறைகளையும் இத்தேசிய திட்டத்தில் ஈடுபடுத்துதல் போன்றவைகள் காரணமாய், இத்திட்டம் வெற்றியடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## ஒத்துழைப்பு நல்கிடுவீர் !

கட்டுக்கோப்பான அமைப்பு நிறுவனங்கள், ஆசிரியர்கள், மாதர் சங்கம் மற்றும் தன்னியக்க நிறுவனங்கள் ஆகியவற்றினை இத்திட்டத்தில் ஈடுபடுத்துவதன் காரணமாய், இலக்கினை அடைந்திடல் முடியும். இப்பிரச்சினையை ஒரு சவாலாகக் கொண்டு, ஒவ்வொருவரும் பொறுப்புணர்ச்சியுடன், இத்தேசியத் திட்டம் மக்கள் திட்டமாகச் செயல்பட, அவரவர் பங்குப் பணியினை செய்திடல் வேண்டும். எனவே, தொழிலதிபர்கள், மக்கட் பற்றுடையோர், சமூக நல ஊழியர்கள், தன்னியக்க நிறுவனங்கள், மற்றும் இத்திட்டத்தின்பால் ஆர்வம் கொண்டோர், அரசின் முயற்சிகளுக்கு உறுதுணையாக இருந்து தேசிய முக்கியத்துவம் வாய்ந்த இப்பிரச்சினையைச் சமாளிப்பதில் ஒத்துழைப்பு நல்கி உதவிட வேண்டும் என அனைவரையும் வேண்டுகிறேன்.



# தரமான பால் தருவதே தமிழ்நாடு பால்வள நிறுவனத்தின் இலட்சியம்!

அதிகாலை!

பால் டெப்போவை நோக்கி அவசர அவசரமாகச் செல்கிறோம்.

நாம் தூங்கி எழுவதற்குமுன், அங்கே குளிர்ந்த பால் தயாராக இருக்கின்றது!

கால்கடுக்கக் காத்திராமல், சண்டை சச்சரவு ஏதுமில்லாமல் சுலபமாகப் பால் வாங்க முடிகிறது இப்போது!

எத்தனைப் பேருக்கு வேண்டுமானாலும் பால் தாராளமாக வழங்கப்படுகிறது. 'பால் இல்லை!' என்ற பேச்சுக்கே இடமில்லாமல் நகரமக்களின் பால் தேவையை நிறைவேற்றி வைக்கப்படுகிறது.

சுவையான, தரமான, சிறிதும் கலப்படமில்லாத பால் கிடைக்கிறது என்ற மனநிறைவும் நமக்கு இருக்கிறது.

அன்றாட வாழ்க்கைக்கு இன்றியமையாத ஒன்றாக விளங்குவது பால். அந்தப் பாலை எங்கேயாவது வாங்கிக் கொள்கிறோம் என்றாலும், நல்ல தரமான பால் வாங்க முடிகிறதா என்பதுதான் பிரச்சினை. அந்தப் பிரச்சினையைத் தீர்த்து வைக்கிறது ஒரு காமதேனு! அதுதான் 'தமிழ்நாடு பால்வள நிறுவனம்'.

இந்நிறுவனம் என்ன செய்கிறது? அதன் பணிகள் எப்படியெல்லாம் விரிந்து பரந்து செயலாற்றுகின்றன என்பதைப் பற்றித் தெரிந்துகொள்ள நமக்கெல்லாம் ஆர்வம் எழுவது இயல்புதானே?

**தமிழ்நாடு பால்வள நிறுவனம்**

தமிழ்நாடு பால்வள நிறுவனம் செங்கற்பட்டு, தென் ஆர்க்காடு, வட ஆர்க்காடு, தர்மபுரி, சேலம், கோயம்புத்தூர், நீலகிரி, மதுரை, ஆகிய மாவட்டங்களிலிருந்து பால் கொள்முதல் செய்கிறது. பிறகு பாலைக் குளிரூட்டி, மதுரை, மாதவரம் ஆகிய பால் பண்ணைகளில் பதப்படுத்தி, நிலைப்படுத்தி சென்னை, மதுரை, ஈரோடு ஆகிய நகரங்களில் விநியோகம் செய்கிறது.

நிருவாக வசதிக்காகத் தமிழ்நாடு பால்வள நிறுவனம் கீழ்க்கண்ட ஐந்து மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவை:

| மண்டலம் | அடங்கியுள்ள மாவட்டங்கள் |
|---|---|
| சென்னை | செங்கற்பட்டு, தென் ஆர்க்காடு |
| வேலூர் | வட ஆர்க்காடு, தர்மபுரி |
| ஈரோடு | கோயம்புத்தூர், சேலம் |
| உதகை | நீலகிரி |
| மதுரை | மதுரை |

தமிழ்நாடு பால்வள நிறுவனம் பால் பண்ணைகள் நிறுவுவதற்குத் தொழில் நுட்ப ஆலோசனையும், தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளிலிருந்து கடன் வசதி பெறவும் வழி வகை செய்து தருகிறது.

பால் பண்ணை ஆரம்பிக்க ஆர்வமுள்ளவர்கள், சம்பந்தப்பட்ட மண்டல மேலாளரையோ, பொது மேலாளரையோ சந்தித்தால், மேற்படி அலுவலர்கள் தகுந்த ஆலோசனைகளை வழங்குவார்கள்.

**தமிழ்நாடு பல்வள நிறுவனத்தின் நற்பணிகள்**

தமிழ்நாடு பால்வள நிறுவனத்தின் பால் சேகரிப்புக் குழுக்கள் ( Procurement teams ) தற்

கூட்டுறவுச் சங்கத்தில் பால் வழங்க கியூவில் நிற்கும் மக்கள்.



போது தமிழ்நாட்டில் கள்ளக் குறிச்சி, ஆரூர், குடியாத்தம், நாமக்கல், கோயம்புத்தூர், பழனி, போடிநாயக்கனூர், சங்கரன் கோயில் ஆகிய பகுதிகளிலும், தேசிய பால்வள வாரியம் ஈரோடு பகுதியிலும் இயங்கி வருகின்றன.

இக்குழுக்கள் கறவை மாடுகள் அதிகமுள்ள இடங்களிலும், அதிக அளவில் பால் உற்பத்தியாகும் இடங்களிலும் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இச்சங்கங்களில் பால் உற்பத்தியாளர்கள் கொண்டு வரும் பாலில் இருந்து ஒவ்வொரு நாளும் காலையிலும், மாலையிலும் தனித்தனியாக மாதிரிகள் எடுக்கப்படுகின்றன. பிறகு, பாலின் கொழுப்புச்சத்து சங்கத்திலேயே பரிசோதனை செய்யப்பட்டு அதன் அடிப்படையில் தனித்தனியே, பால் உற்பத்தியாளர்கள் கொண்டு வரும் பாலுக்கு, விலை நிர்ணயிக்கப்படுகிறது.



புட்டிகளில் பால் நிரப்பும் இயந்திரம்.

அதிகக் கொழுப்புச் சத்துள்ள பாலுக்கு அதிகப்பணம் கொடுக்கப்படுகிறது. மேற்படி சங்கங்கள் பால் உற்பத்தியாளர்களாலேயே நிருவாகம் செய்யப்படுகிறது. பால் உற்பத்தியாளர்களுக்கு ஆண்டு முழுவதும் நியாயமான விலை கிடைப்பதுடன், ஆண்டு இறுதியில் ஒவ்வொருவரும் சங்கத்திற்கும்-அச்சங்கம் கொடுத்த பாலின் அளவிற்கேற்ப ஊக்கத் தொகையும் வழங்கப்படுகிறது.

இந்த நிறுவனம் சென்னையில் நாளொன்றுக்கு 1 இலட்சத்து 50 ஆயிரம் லிட்டரும், மதுரையில் 34 ஆயிரம் லிட்டரும் விற்பனை செய்கின்றது.

ஈரோட்டிலுள்ள பால்பண்ணை 30 ஆயிரம் லிட்டரிலிருந்து 1 இலட்சம் லிட்டருக்குத் தனது உற்பத்தியை அதிகரித்துள்ளது.

வேலூரிலுள்ள குளிர்பதனப் படுத்தும் பிரிவு தனது ஆற்றலை 7 ஆயிரம் லிட்டரிலிருந்து, 30 ஆயிரம் லிட்டருக்கு உயர்த்தியுள்ளது.

மாதவரம் பால்பண்ணை, தனது உற்பத்தியை 50 ஆயிரம் லிட்டரிலிருந்து, 1 இலட்சத்து 25 ஆயிரம் லிட்டருக்கு உயர்த்தியுள்ளது.

அம்பத்தூரில் புதிதாகத் துவக்கப்பட்ட பால்பண்ணை 2 இலட்சம் லிட்டர் பாலை உற்பத்தி செய்கிறது.

**பால் வழித் தடங்கள்**

இந் நிறுவனம் மேற்படி சங்கத்தில் உற்பத்தியாகும் பாலை காலையிலும், மாலையிலும் பால் வழித் தடங்கள் (Milk Routes) மூலம் ஆண்டு முழுவதும் எந்த அளவானாலும்-சேகரித்து குளிரூட்டும் நிலையங்களுக்கு எடுத்துச் செல்கிறது. அங்கு பாலின் தரம் ஆய்வு செய்யப்படுகிறது.

இந் நிறுவனம் பாலுக்கு நல்ல விலை தருவதோடு, உற்பத்தியாளர்களின் எருமை அல்லது பசு ஆகியவைகளின் பால் உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்குத் தேவையான பல்வேறு திட்டங்களையும் செயல்படுத்தி வருகின்றது.

**கால்நடை மருத்துவ வழித் தடங்கள்**

கால்நடை மருத்துவ வசதியை பால் உற்பத்தியாளர் சங்கங்களுக்கே எடுத்துச் செல்லும் நோக்கத்துடன், அறுவைச் சிகிச்சைக் கருவிகள், செயற்கை முறை இன வளர்ச்சி செய்ய விந்து, குடற்புழு மருந்துகளுடன் காரில் அனுப்பும், கால்நடை மருத்துவ வழித் தடங்களை இந் நிறுவனம் நடத்தி வருகின்றது. கால்நடை மருத்துவர் குறிப்பிட்ட நாளில், குறிப்பிட்ட நேரத்தில், குறிப்பிட்ட சங்கங்களுக்குச் சென்று மருத்துவ வசதியும், கால்நடை வளர்ப்புப் பணிகளும் செய்து வருகிறார்; அப்போது பால் உற்பத்தியாளர்கள் நோய்வாய்ப்பட்ட தத்தம் கால்நடைகளுக்கு இலவச மருத்துவம் பெறுகின்றனர். மலட்டுத் தன்மை கொண்ட கால்நடைகளையும் மருத்துவர் கவனித்து ஆவன செய்கிறார். பால் உற்பத்திப் பெருக்கம், கன்று வளர்ப்பு பற்றிய ஆலோசனைகளையும் அவர் வழங்குகிறார்.

**செயற்கை முறை இன வளர்ச்சி நிலையங்கள்**

கால்நடைகளின் இன வளர்ச்சியையும் பால் உற்பத்தியையும், குறிக்கோளாகக் கொண்டு செயற்கை முறை கருத்தரிப்பு நிலையங்களை தமிழ்நாடு பால்வள நிறுவனம் நடத்தி வருகின்றது. இவை கால்நடை மருத்துவ அலுவலர்களின் பொறுப்பில் அயன்புரம், ஆம்பூர், கிருஷ்ணகிரி, சேலம், கோயம்புத்தூர், கொடைக்கானல், திண்டுக்கல், பழனி, ஊட்டி ஆகிய இடங்களில் இயங்கி வருகின்றன.

இந்நிலையங்களிலிருந்து அதிகப் பால் தரவல்ல உற்பத்தித் திறன் படைத்த கன்றுகளை உருவாக்கிட 'ரெட்டேன்' (Red Dane), ஜெர்சி (Jersey), ஃபிரீஷியன் (Fresian), முர்ரா (Murrah) ஆகிய பொலி காளைகளின் விந்து ஒவ்வொரு நாளும் பால் வண்டிகளில் பால் வழங்கும் சங்கங்களுக்குக் குளிர் பதனக் குடுவைகளில் அனுப்பப்பட்டு வருகிறது. பயிற்சி பெற்ற கிராம நல ஊழியர், சங்கச் செயலர் ஆகியோர் சினைப் பருவத்தில் இருக்கும் கால்நடைகளுக்கு இவ்விந்தினை செயற்கை முறைக் கருவூட்டல் செய்வார்.

இன்றைய கன்று நாளைய பசு அல்லது எருமை என்ற அடிப்படையில் ரெட்டேன், ஜெர்சி, 'பிரீஷியன், முர்ரா ஆகிய உயரின

காளைகளுக்குப் பிறந்த உயர்ரக கிடேரிக் கன்றுகளைப் பால் உற்பத்தியாளர்கள் நன்கு பேணி வளர்க்க மானியமாக மாதம் ரூ. 10 பெறுமானமுள்ள கன்றுத் தீவனம் பன்னிரண்டு மாதங்களுக்கு வழங்கப்படுகிறது.

செயற்கை முறையில் இந்நிறுவனத்தின் உயர் இன பொலி காளைகளுக்குப் பிறந்த, அதிகப் பால் தரவல்ல கிடேரிக் கன்றுகளை உற்பத்தியாளர்கள் சீரிய முறையில் வளர்த்து வெகுவிரைவில் இக்கன்றுகள் மூலம் பால் உற்பத்தியைப் பெருக்குவதே இத் திட்டத்தின் நோக்கமாகும்.

இந்நிறுவனம் பால் உற்பத்தியாளர்களின் கால் நடைகளுக்காகவே விஞ்ஞான முறைப்படி செவ்வனே சமன் செய்யப்பட்ட எல்லாச் சத்துக்களையும் கொண்ட கால்நடைத் தீவனத்தைத் தயாரித்து, நியாய விலையில் இலாப நோக்கமின்றி உற்பத்தியாளர்களுக்குச் சங்கங்கள் மூலம் விநியோகிக்கிறது.

## பச்சைப்புல் வளர்ச்சி

அதிக அளவில் பால் தரவல்ல உயரின பசுக்களின் பால் உற்பத்திக்கும் இன வளர்ச்சிக்கும் பசும்புல் மிக அவசியமன்றோ? பால் உற்பத்தியாளர்கள் தங்கள் நிலங்களிலேயே புல் பயிரிட்டு, கறவை மாடுகளுக்குப் புல்லை தீவனமாகக் கொடுத்தால், தீவனச் செலவைப் பெருமளவு குறைக்கலாம். புல்லை அதிக அளவில் கொடுத்தால் கலப்புத் தீவன ( Concentrates ) அளவைக் குறைத்துக் கொள்ளலாம். ஏறத்தாழ 15 அடி உயரம் வளரும் என். பி. 21 ( Napier Bajra-21 ) இராட்சச புல் நாற்றுக்களைப் பால் உற்பத்தியாளர்களுக்கு இந்நிறுவனம் விநியோகம் செய்து வருகிறது.

இப்புல்லை ஏறத்தாழ கரும்புப் பயிர் செய்வது போல் பயிர் செய்ய வேண்டும். இப் புல்லின் ஒரு நாற்று 5 கிலோ பசுந்தீவனத்தைத் தரவல்லது. இப்புல் ஒரு ஆண்டில் ஏக்கருக்கு 200 டன் பசுந்தீவனம் தருகின்றது. இப்புல்லை ஒரு ஏக்கரில் பயிரிட்டால், 12 முதல் 15 கறவை மாடுகளுக்குத் தேவையான பசுந்தீவனம் கிடைக்கும். ஒரு ஏக்கரில் புல் வளர்த்தால் தமிழ்நாடு பால்வள நிறுவனம் ரூ. 200 மானியமாக வழங்கி வருகிறது. அதோடு ஒரு ஏக்கரில் புல் வளர்த்து மற்ற விவசாயிகளுக்குப் புல் பயிரிடுவதற்காக 1,00,000 நாற்றுகளை விற்றால் ஏக்கருக்கு



பிளாஸ்டிக் பைகளில்
பால் நிரப்பும் இயந்திரம்.

ரூ. 500 மானியமாக வழங்கி வருகிறது. நாற்றை விற்பதில் வரும் வருமானம் புல் பயிரிட்ட உற்பத்தியாளருக்கே சொந்தமாகிறது.

## அவசரச் சிகிச்சை

திடீரென நோய்வாய்ப்படும் பால் உற்பத்தியாளர்களின் கால் நடைகளுக்கு அவசரச் சிகிச்சை அளிக்கும் பொருட்டு, இந்நிறுவனம் அவசரச் சிகிச்சை கால் நடை மருத்துவப் பிரிவுகளை நடத்தி வருகிறது.

கால்நடை நோய்வாய்ப்பட்டிருப்பது குறித்து அவசரச் சிகிச்சைப் பிரிவு ( Emergency Unit ) இயங்கும் தலைமையகத்துக்குத் தொலைபேசி மூலமாகத் தகவல் தெரிவித்தால் அல்லது பால் சேகரிக்கும் 'வேன்' மூலம் தகவல் தெரிவித்தால் கால்நடை மருத்துவர் தேவையான மருந்துகளுடன் விரைவில் வந்து சிகிச்சை அளிப்பார். இதற்காக ஒரு சிறு தொகையே கட்டணமாக வசூலிக்கப்படுகிறது.

## கால்நடைக் காப்புத் திட்டம்

கால்நடை பராமரிப்பில் தேசிய காப்பீட்டு நிறுவனம், தமிழ்நாடு பால்வள நிறுவனத்துடன் ஒருங்கிணைந்து செயல்படுகிறது.

காப்பீட்டு வசதி (இன்சூரன்ஸ்) சாதாரண மக்களுக்குக் கிடைப்பதற்காகவும், எல்லாக் கிராம மக்களுக்கும் கிடைப்பதற்காகவும் தான் காப்பீட்டு நிறுவனங்கள் அரசுடைமையாக்கப்பட்டன. காப்பீட்டு நிறுவனங்கள் மேற்கூறிய குறிக்கோளை அடைவதற்காகப் பல்வேறு காப்பீட்டுத் திட்டங்களை வகுத்துள்ளது. அத்தகைய காப்பீட்டுத் திட்டங்களிலே ஆவின காப்பீட்டுத் திட்டமும் ஒன்றாகும்.

எதிர்பாராத இழப்பு அல்லது சேதம் ஏற்படும்போது பாதுகாப்பளிப்பதே தாய் நிறுவனமான பொதுக்காப்பீட்டு நிறுவனத்தின் நோக்கமாகும். அதாவது, கால் நடை எதிர்பாராமல் இறக்கும் போது, அல்லது சேதம் ஏற்படும் பொழுது பாதுகாப்பளிப்பதே இத் திட்டத்தின் நோக்கமாகும்.

மாடு எதிர்பாராது இறக்கும் போது, ஈட்டுறுதி நிறுவனம் இழப்பை ஏற்றுக்கொண்டு பொருளுதவி புரிவதால், விவசாயி இறந்த மாட்டிற்குப் பதில் வேறு மாடு வாங்க முடிகிறது. ஆகவே, காப்பீட்டுத் திட்டம் என்பது எல்லாப் பால் வளர்ச்சித் திட்டங்களிலும் ஒரு முக்கிய அம்சமாக விளங்குகிறது.

கடந்த ஆண்டு பொதுக் காப்பீட்டு நிறுவனம் 65,000 கால் நடைகளைக் காப்பீடு செய்துள்ளது. இவ்வாண்டு மேலும் மேலும் விவசாயப் பெருங்குடி மக்கள் தங்கள் கால்நடைகளைக் காப்பீடு செய்துகொள்ள முன் வருவதால் நடப்பு ஆண்டில் 1 இலட்சம் கால்நடைகளுக்கு மேல் காப்பீடு செய்யப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

நோயாலோ, பாம்புக்கடியாலோ அல்லது தீ மற்றும் பிற விபத்தினாலோ கால்நடைகள் இறக்க நேரிட்டாலும், கடுமையான காயங்கள் ஏற்பட்டு மருத்துவ ஆலோசனையின் பேரில் கட்டாயமாக உயிர் நீக்கம் செய்யப்படும் பொழுதோ ஆவினக் காப்பீட்டுத் திட்டம் அவைகளுக்கு ஈடு செய்கிறது. இனப் பெருக்கத்தில் தடங்கல், கன்று ஈனும் போது ஏற்படும் இழப்பு, பால் உற்பத்திக்கு வழியில்லாத நிரந்தர இயலாமைகளால் ஏற்படும் இழப்புக்களையும் காப்பீடு ஈடு செய்கிறது.

## பால் குளிரூட்டும் நிலையங்கள்

இந்நிறுவனம் தமிழகத்தின் பால் வளத்தைப் பெருக்க பற்பல திட்டங்களை உருவாக்கிச் செயல்படுத்தி வருகிறது. தருமபுரி, வட ஆர்க்காடு, மதுரை, சேலம், கோவை, செங்கை, தென் ஆர்க்காடு, நீலகிரி, இராமநாதபுரம், நெல்லை மாவட்டங்களில் திட்டங்கள் தீவிரமாகச் செயல்படுத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

பல, பால் குளிரூட்டும் நிலையங்கள் ( Milk Chilling Centres )

நிறுவப்பட்டுள்ளன. கிராமப் புறங்களில் உற்பத்தியாகும் பாலை உள்ளூர்வாசிகளுக்கு வேண்டிய அளவு போக எஞ்சியதை காலையிலும், மாலையிலும் குறிப்பிட்ட நேரங்களில் பால் வண்டிகளின் மூலம் சேகரிக்கப்படுகிறது. பிறகு குளிரூட்டும் நிலையத்திற்குக் கொண்டு வரப்படுகிறது. குளிரூட்டப்பட்ட பால் சென்னை, மதுரை நகர வினியோகத்திற்காக அனுப்பி வைக்கப்படுகிறது.




நடமாடும் பால் விற்பனை ஊர்தி.

**தரமான பாலுக்கு அதிக விலை**

இந்நிறுவனத்தின் பால் சேகரிப்புக்குழுக்கள் தருமபுரி, வட ஆர்க்காடு, சேலம், கோவை, செங்கற்பட்டு, தென்னார்க்காடு, நீலகிரி, மதுரை மாவட்டங்களில் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களை அமைத்து, பாலுக்கு நல்ல விலை தருகிறது.

எனவே, 'சங்கத்திற்குத் தரமான பாலை வழங்கி மேலும் அதிக விலையைப் பெறுவீர்!' எனப் பால் உற்பத்தியாளரை அழைக்கிறது. அதற்கான காரணங்களையும் அது கூறுகிறது:

1. காலை மாலை இருமுறை பாலின் தரம் சோதனை. 2. நேரில் பார்த்து சந்தேகம் இருப்பின் மறு முறை பரிசோதனை செய்து கொள்ள வாய்ப்பு. 3. வாரம் ஒரு முறை தவறாமல் பால் பணம் பட்டுவாடா. 4. இலவச கால் நடை மருத்துவ வசதி. 5. கால் நடைகளுக்குச் செயற்கை முறை கருவூட்டல் வசதி. 6. கலப்பின கிடாரிக் கன்றுகளுக்கு மாதம் ரூ. 10 மானியம். 7. அவசரக் காலத்தில் கால்நடைகளுக்கு உடனடியாக மருத்துவ உதவி. 8. குறைந்த விலையில் தரமான கலப்புத் தீவனம். 9. உயர்ரகப் புல் வகைகள் வளர்க்க மானியம். 10. கூட்டுறவு ஆண்டு முடிவில் இலாபத்தில் பங்கு.

**நல்ல கறவை மாடுகளைத் தேர்ந்தெடுத்தல்**

பால்பண்ணை வைப்பதில் கவனிக்க வேண்டிய விதிமுறைகளையும் தமிழ்நாடு பால்வள நிறுவனம் வெளியிட்டுள்ளது. அதில் கூறப்பட்டுள்ளதாவது:

(1) ஜெர்சி கலப்பினப் பசுக்கள் நமது நாட்டிலுள்ள தட்ப வெட்ப நிலைக்கு ஏற்றதாகவும், அதிக அளவு பால் தரத்தக்கதாகவும் உள்ளது. (2) அதிக அளவு பால் தரவல்ல வம்சா வழியை உடைய கலப்பினப் பசுக்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும். (3) முதல் அல்லது இரண்டாவது ஈற்று பசுக்களைத் தேர்ந்தெடுத்தால், மேற்படி பசுக்கள் வரும் ஆண்டுகளில் பல கன்றுகளை ஈன்று வாங்குவோருக்கு அதிக இலாபத்தைப் பெற்றுத் தரும். (4) கன்று ஈன்று 1 மாதத்திற்குள் கறவை மாடுகளை வாங்கினால், அதற்குப் பிறகு 9 மாதம் பாலைக் கொடுத்து மாடு வாங்கியவருக்கு நல்ல இலாபம் கிடைக்க ஏதுவாகும். (5) கறவை மாடு வாங்கும்போது, அதனுடைய கன்று கலப்பினக் கிடேரிக்கன்றாக இருந்தால் தமிழ்நாடு பால்வள நிறுவனத்திடமிருந்து மாதம் ஒன்றுக்கு ரூ. 10 வீதம் 12 மாதங்களுக்கு மானியம் பெறுவதுடன், கிடாரிக் கன்றுகள் 30 மாதங்களில் கன்று ஈன்று பால் பெற ஏதுவாகும்.

சென்ட்ரல் இரயில் நிலையம், தலைமைச் செயலகம், எழிலகம், குறளகம், வடக்குக் கடற்கரைச் சாலை, அண்ணாசாலை முதலான இடங்களில் பால்வள நிறுவனத்தின் பால் நிலையம் (Milk Bar) அமைக்கப்பட்டுள்ளது. இங்கு சுவையூட்டிய தயிர், சூடான பால், பதப்படுத்திய குளிர்ந்த இனிய பால், மற்றும் வெண்ணெய், பால்கோவா முதலியன விற்கப்படுகின்றன. இங்கெல்லாம் மக்கள் திரளாக வருவதைப் பார்க்கிறோம். தரமான பொருளுக்குக் கூட்டம் கூடுவது இயல்புதானே?

இவ்வாறு மக்களின் அன்றாடத் தேவையான தரமான பால் எங்கும் எல்லார்க்கும் குறித்த நேரத்தில் கிடைக்கின்ற வகையில், நமக்கெல்லாம் பால்மற்றும் பால் பொருள்களை வழங்கும் தோழனாக விளங்குகிறது, தமிழ்நாடு பால்வள நிறுவனம் என்றால் அது மிகையல்ல!

—பி. வி. கிரி

## அஞ்சல் வழிப் படிப்புக்கு வானொலி மூலம் பயிற்சி

மதுரைப் பல்கலைக் கழகத்தின் அஞ்சல் வழிப் படிப்புகளுக்கு உதவும் வகையில், சென்னை வானொலி மூலம் நடத்தப்படும் பயிற்சி வகுப்புகளுக்கு நல்ல வரவேற்பு இருந்து வருகிறது. இந்த பயிற்சி வகுப்பு நிகழ்ச்சிகள் மூலம், 'பி. ஏ.', 'பி. காம்'., பட்டப் படிப்புக்கான வகுப்புகளில் உள்ள 14,000-க்கும் அதிகமான மாணவர்கள் பயனடைந்து வருகின்றனர்.

# கறவை மாடுகளைப் பராமரிப்பீர்!



கறவை மாடுகளுக்குத் தகுந்த அளவு தரமான தீவனமிடுதல் வேண்டும். கறவை மாடுகளுக்கு அது தரும் பாலுக்கு ஏற்பக் கலப்புத் தீவனம் (Concentrate feed), பசுந் தீவனம், வைக் கோல் முதலியவைகளை அளித்தல் வேண்டும்.

உதாரணமாக, ஒரு நாளைக்கு 4 லிட்டர் பால் கொடுக்கும் மாட்டுக்கு, 2.5 கிலோ கலப்புத் தீவனம் கொடுத்தல் வேண்டும். 4 லிட்டருக்கு மேல், கொடுக்கும் ஒவ்வொரு 2.5 லிட்டர் பாலுக் கும் 1 கிலோ கலப்புத் தீவனம் அளித்தல் வேண்டும். நாள் தோறும் 25 முதல் 30 கிலோ வரை பசும் புல் அளித்தல் வேண்டும். வைக்கோல் 5 முதல் 10 கிலோ வரை அளித்தல் வேண்டும்.

பசுந் தீவனமாக N.B. 21 புல், ( Napier Bajra grass ), கம்பு புல் (Hybrid Napier), நேப்பியர் புல் ( Napier grass ), கினியா புல் ( Guniea grass ), எருமைப் புல் ( Buffalo grass ), மக்காச் சோளப் பயிர் ( Fooder Maize), தட்டைப் பயிர் ( Cow pea ), காக்காச் சோளப் பயிர் (Fooder Sorghum), சணப்பை (Sunhemp) குதிரை மசால் (Lucerne) ஆகிய வைகளைக் கொடுக்கலாம்.

மேற்கண்ட பசுந்தீவனங்களில் இரண்டை கலப்புப் பயிராகச் செய்யலாம். உதாரணமாக (1) மக்காச் சோளப் பயிர், தட்டைப் பயிர் (2) 21 புல், தட்டை பயிர், (3) சணப்பை, நேப்பியர் ஆகியவைகளை கலப்புப் பயிராகச் செய்யலாம்.

கறவை மாடுகளுக்குத் தேவை யான சுத்தமான தண்ணீர் வேண்டியபோது கிடைக்கும்படி செய்ய வேண்டும்.

## இனப் பெருக்கம்

பால் பண்ணை இலாபகரமாக நடைபெற, இனவிருத்தியை (Breeding aspect) மிக முக்கிய மாக கவனிக்க வேண்டும். மாடு கன்று போட்ட தினத்திலிருந்து 60 முதல் 90 நாட்களுக்குள் மாடு சினைப் பருவத்திற்கு வரும்போது அல்லது சினைக்குக் கத்தும்போது (Heat period) இயற்கையாகப் பொலிக் காளையுடன் சேர்த்தோ அல்லது செயற்கை முறை கரு வூட்டல் மூலமோ சினைப்படுத்த வேண்டும்.

கறவை மாடு 21 நாட்களுக்கு ஒரு முறைதான் சினைப் பருவத் திற்கு வருவதால், ஒரு முறை உரிய காலத்தில் சினைப்படுத்தத் தவறினால், கன்று பிறப்பது ஏறத் தாழ 1 மாதம் காலதாமதமாவ தால் மாட்டிற்கு ஒரு பிரதிபல னும் இல்லாமல் வீணாக ஒரு மாதக் காலம் தீவனச் செலவு செய்ய நேரிடும்.

நன்றாகப் பராமரிக்கப்படும் பால் பண்ணைகளில் ஒவ்வொரு கறவை மாடும் 300 நாட்கள் பால் தந்து, 60 நாட்கள் பால் தராமல் இருந்தும், பிறகு 300 நாட்கள் பால் தரும். இந்தத் தொடர் நிகழ்ச்சி தொடர்ந்து நடந்து கொண்டே இருக்கும். நான்கு முறை சினைப்படுத்த முயற்சித்தும் சினைபடாத மாடு களை விரைவில் பண்ணையிலிருந்து நீக்கிவிடுதல் வேண்டும். அப்படி நீக்கத் தவறினால் அதிக அளவில் பால் தரும் மாடுகளிலிருந்து கிடைக்கும் லாபத்தை இம் மலட்டு மாடுகள் சாப்பிட்டு பண்ணையின் இலாபத்தைப் பெரி தும் பாதிக்கும். ஆகவே, கறவை மாடுகளை விரைவில் சினைப்படுத்த எல்லா முயற்சிகளையும் மேற் கொள்ளவேண்டும். சினைப்படாத மாடுகளைப் பண்ணையிலிருந்து நீக்கி விடுதல் வேண்டும்.

## மாட்டுக் கொட்டகை வசதி

இக் கறவை மாடுகள் அதிக அளவில் பால் தருவதால் இவை களைச் சுற்றுப் புற சீதோஷ்ண நிலையின் இன்னல்களிலிருந்து காக்க, தக்க மாட்டுத் தொழுவ வசதி (மாட்டுக் கொட்டகை) அமைத்தல் வேண்டும்.

பால் பண்ணை ஆரம்பிக்க ஆர்வ முள்ளவர்கள் தமிழ்நாடு பால் வள நிறுவனத்தின் சம்பந்தப் பட்ட மண்டல மேலாளரையோ, மதுரை பொது மேலாளர் (அ) மதுரை மேலாளர் (பால் உற் பத்தி) அல்லது மதுரை துணைத் திட்ட அலுவலரையோ சந்தித் தால் பால் பண்ணை ஆரம்பிக்கத் தேவையான ஆலோசனைகளையும், உதவிகளையும் வழங்குவார்கள்.

பால் பண்ணை ஆரம்பித்துக் குறைந்தது நாள் ஒன்றுக்கு 100 லிட்டர் பாலை, தமிழ்நாடு பால் வள நிறுவனத்திற்கு வழங்க விருப்பமுள்ளவர்கள், இந்நிறுவ னத்தால் அளிக்கப்படும் சலுகை களைப் பெறலாம்.

பால் பண்ணை ஆரம்பிக்கும் இடம், தமிழ்நாடு பால்வள நிறு வனத்தின் பால் வழித் தடங்கள், மருத்துவ வழித் தடங்களிலிருந்து ஓரிரு மைல்களுக்குள் இருந்தால் மேற்கண்ட சேவைகளை அளிக்க மிக ஏதுவாக இருக்கும்.





சேரன் போக்குவரத்துக் கழகத்தின் மூலதனப் பங்குத்தொகைக்கு டிவிடெண்ட் தொகையாகக் கிடைத்த ரூபாய் 3,00,063-க்குரிய காசோலையைச் சேரன் போக்குவரத்துக் கழகத் தலைவர் திரு. ஆர். பசுபதி அவர்கள் 13.10.'76 அன்று, தமிழக ஆளுநர் அவர்களிடம் கொடுத்தார்.

கர்நாடக மாநில முதலமைச்சர் திரு. தேவராஜ் அர்ஸ் அவர்கள் 11.10.'76 அன்று, மைசூரில் நடைபெறும் 'தசரா' பொருட்காட்சியில் தமிழ்நாடு அரசின் அரங்கத்திற்கு வருகை தந்து பார்வையிட்டார்.

# படமும் செய்தியும்





சிறுகுடும்ப நெறியைக் கடைப்பிடிப்பதற்காக, சென்னைத் துறைமுகக் காப்புக் கழகமும், துறைமுகத் தொழிலாளர் வாரியமும் நடத்திய குடும்பநலத் திட்ட இயக்கத்தின் நிறைவு விழா 18.10.'76 அன்று, தண்டையார்பேட்டையில் உள்ள துறைமுகத் தொழிலாளர் காலனியில் நடைபெற்றது. அவ்விழாவில், தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் திரு. வி. கார்த்திகேயன் அவர்கள் குடும்பநலத் திட்டத்தின் கீழ், அறுவைச் சிகிச்சை செய்து கொண்டவர்களுக்கும், குடும்பநலத் திட்டத்தை ஊக்குவிப்போருக்கும் பரிசு அளித்தார்.



தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் 15.10.'76 அன்று, கொடைக்கான லுக்கு வருகை தந்தார். அன்று அங்கு நடைபெற்ற புத்தகக் கண் காட்சியைப் பார்வையிட்டார்.

கொத்தடிமையிலிருந்து அண்மை யில் விடுதலைபெற்ற தொழிலாளி யுடன் 15.10.'76 அன்று, தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் கலந்துரை யாடினார்.





தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் 15.10.'76 அன்று, கொடைக்கான லில், கொத்தடிமையிலிருந்து விடு தலை பெற்ற தொழிலாளர்களுக்கு நிலப்பட்டா வழங்கினார்.

தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் 16.10.1976 அன்று, காந்தி கிராம நிறுவனத்தின் 29-வது ஆண்டு விழா வில் தலைமை தாங்குவதற்காக வருகை தந்தபோது, காந்தி கிராமத் தின் நெசவுப் பிரிவைப் பார்வை யிட்டார்.








சென்னை அடையாற்றில் கட்டப்பட்டுள்ள கேர் கனடா (CARE CANADA) நிறுவனத்தின் கிடங்கைத் தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் திறந்துவைத்தார்.



தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் 22.10.1976 அன்று, தீபாவளியை முன்னிட்டு, சென்னை நகரில் உள்ள பல்வேறு அனாதை இல்லங்களைச் சார்ந்த மாணவர்களுக்கு, சென்னை ராஜ்பவனத்தில் சிற்றுண்டியும், தேநீரும் வழங்கினார்.

தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் 25.10.1976 அன்று, கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி நாள் விழாவில் கலந்து கொண்டார். ஒரு கல்லூரி மாணவிக்கு, ஆளுநர் அவர்கள் 'மெடல்' வழங்குவதை இப்படத்தில் காணலாம்.





தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் 25.10.1976 அன்று, ஏழை எளியோர்க்கான சட்ட உதவி அளிக்கும் சங்க அமைப்புக்குக் கையொப்பமிட்டார். நீதிபதி திரு. வி. ஆர். கிருஷ்ண அய்யர் உடனுள்ளார்.



சென்னையில் உள்ள தியாகராயர் கல்லூரியின் பொன்விழாவும், தியாகராயர் பள்ளியின் வைர விழாவும், சென்னைப் பல்கலைக் கழக நூற்றுண்டு விழா மண்டபத்தில் 25.10.1976 அன்று நடைபெற்றது. அவ்விழாவில், மேற்கூறிய நிறுவனங்களில் 25 ஆண்டுக் காலம் பணியாற்றிய ஆசிரியர்களுக்குத் தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் பரிசுக் கோப்பை வழங்கினுர்.



# பசுவின் பராமரிப்பில் கவனிக்க வேண்டியவை!

1. பசுவோ, எருமையோ கன்று போட்ட பின் இரண்டு மாதங்களுக்கு மேல் மூன்று மாதங்களுக்குள்ளாக கருத்தரிப்பு ஊசி போடுவது அவசியம். கன்று போட்ட உடன், மூன்று முறை பருவத்திற்கு வந்த பசு கருவூட்டப் படாவிட்டால், தற்காலிக மலட்டுத் தன்மை அடைந்துவிட ஏதுவாகிறது.

2. கருவுற்ற பசு தொடர்ந்து பால் கொடுத்து வரும். 7 மாதம் சினைப்பருவம் பூர்த்தியாகும் வரை கறவையை நீடிக்கலாம். அதன்பின்னர் நிறுத்தினுல் பசுவிற்குச் சுமார் இரண்டு மாத கால ஓய்வு கிடைக்கும்.

3. கன்று பிறந்த சுமார் 6 மணி நேரத்திற்குள் பசு நஞ்சுக்கொடி போட்டுவிடும். கன்று போட்டு 24 மணி நேரமாகியும் நஞ்சுக் கொடி விழாவிடில் மருத்துவ உதவி நாட வேண்டும்.

4. கன்றிற்கு மூன்று மாதம் முடிந்ததும், தாய்ப்பாலை பூர்த்தியாக நிறுத்தி விடலாம். அதற்குப் பதிலாக காலை, மாலை கறவை நேரங்களில் ½ கிலோ ''கலவைத் தீவனம்'' கொடுக்க வேண்டும். இடைவேளையில், பச்சைத் தீவனம் 3 கிலோ கொடுக்க வேண்டும்.

5. கிடேரிகளுக்குக் கருத்தரிப்பு ஊசி போடுவதற்கு வயது முக்கியமல்ல. உடல் வளர்ச்சிதான் முக்கியம். அந்த வர்க்கப் பசுவின் எடையில் மூன்றில் இரண்டு பங்கு அளவு எடைக்கு வளர்ந்துவிட்டால், காளை சேர்ப்பதற்குத் தகுதியானதாகும்.

6. வெண்மை நிறம் கன்றின் சாணத்தில் தெரிவது, வயிற்று பூச்சிகளின் அறிகுறி, துர்நாற்றம், இளகிய தன்மை இவைகள் தோன்றினுல் உடனடியாக மருத்துவ உதவி பெற வேண்டும்.

7. கன்று பிறந்த நாளிலிருந்து மூன்று மாதம் முடியும் வரை பிரதி 15 தினங்களுக்கு ஒரு முறை குடல் கிருமி மருந்து கொடுத்து வருவது அவசியம். ஆரம்பத்தில் நன்கு கவனிக்கப்படாத கன்று பின்னுல் துரிதமாக வளராது.

8. சாணத்தின் மேல் மண்ணைத் தூவி அதன் பின்னர் கொட்டகையிலிருந்து எடுத்தால் நல்ல பலன் உண்டு. சாணத்தின் உரச்சத்து பாதுகாக்கப்படும். சாணத்துடன் வெளிப்படும் கிருமிகள் கொல்லப்படும்.

9. கன்றுகளுக்கு ஆறுமாதம் பூர்த்தியானதும் ''வெக்கை நோய்'' தடுப்பு ஊசி போடுவது அவசியம். இதற்கு ஒரு மாதத்திற்குப் பின் ''சப்பை நோய்'' ''தொண்டை அடைப்பான் நோய்'' இவற்றிற்கான தடுப்பு ஊசி போட வேண்டும்.

10. மிதமான வெதுவெதுப்பான தண்ணீரில் நனைத்து பிழிந்தெடுத்த துணியினுல் மடியை நன்கு துடைத்த பின் பால் கறக்க ஆரம்பித்தால் பால் சுரப்பு துரிதமாக ஏற்பட்டு அதிக அளவு பால் கிடைக்கும்.



11. மாதத்திற்கு இருமுறை மாட்டுத் தொழுவங்களின் சுவர்கள் (சுமார் 4 அடி வரை), தூண்கள், தரை முதலியவற்றிற்குச் சுண்ணும்பு பூசுவது சிறந்த முறை. மண் தரையாயிருந்தால், சுண்ணும்புத் தண்ணீரைத் தெளிக்க வேண்டும்.



### கறவைப் பசுவின் தீவன அளவுகள்

சுமார் 250 முதல் 400 கிலோ எடையுள்ள பசு நாள் ஒன்றுக்கு 5 லிட்டர் பால் கொடுத்தால் கீழ்க்கண்ட அளவில் தீவனம் கொடுக்க வேண்டும்.

| | கலவைத் தீவனம் | பசுந் தீவனம் (புல்) | உலர்ந்த தீவனம் (வைக் கோல்) |
|---|---|---|---|
| | கிலோ | கிலோ | கிலோ |
| பராமரிப்பு தீவனம் | ½ | 5 | 10 |
| உற்பத்தி தீவனம் | 2 | 5 | ... |
| (5 லிட்டர் பால் அளவிற்கு-- மொத்தம்) | 2½ | 10 | 10 |

5 லிட்டர் பாலுக்கு மேல் கொடுத்தால் அந்த அளவிற்கு ''உற்பத்தி தீவனத்தின்'' அளவை அதிகரிக்க வேண்டும். 10 லிட்டர் பால் அளவிற்கு, ''உற்பத்தி தீவன அளவு'' இரு மடங்கு ஆகும். ஆக மொத்த தீவன அளவு 4½ கிலோ கலவைத் திவனம் 15 கிலோ புல், 10 கிலோ வைக்கோல் முதலியன.

### கன்று நன்கு வளர கொடுக்கப்படவேண்டிய தீவன அளவுகள் :

| வயது | கலப்புத் தீவனம் | பச்சைத் தீவனம் |
|---|---|---|
| 2 மாதம் முடிந்த கன்று | 200 கிராம் | பசும்புல்லின் நுனிப் பாகங்களைக் கன்றின் முன்பு தொங்க விட வேண்டும். |
| 3 மாதம் | 400 கிராம் | .. |
| 4 மாதம் | 500 கிராம் | 4 கிலோ |
| 5 மாதம் | 750 கிராம் | 5 கிலோ |
| 6 மாதம் | 750 கிராம் | 6 கிலோ |
| 7 மாதம் | 1 கிலோ | 7 கிலோ |
| 8 மாதம் | 1 கிலோ | 8 கிலோ |
| 9 மாதம் | 1.25 கிலோ | 9 கிலோ |
| 10 மாதம் | 1.25 கிலோ | 10 கிலோ |
| 11 மாதம் | 1.25 கிலோ | 12 கிலோ |
| 1 வயதிற்கு மேல் கன்று போடும் வரை | 1.50 கிலோ | 12 கிலோ |

குறிப்பு: இந்த அளவுகள் ஒரு வேளைக்கானது. அதாவது காலையிலும் மாலையிலும் இந்த அளவுகள் கொடுக்கப்படல் வேண்டும்.

இவ்வாறு தகுந்த அளவில் தீவனம் கொடுக்கப் பெறும் கன்று செழித்து வளர்ந்து 18 மாத காலத்தில் முதிர்ச்சியடைந்து 27 மாத முடிவில் கன்று போட முடியும்.

## சூரிய வெப்பத்தைக்கொண்டு தண்ணீரைக்கொதிக்க வைக்கும் கருவி !

ரூர்க்கியிலுள்ள மத்திய கட்டட ஆராய்ச்சிக் கழகம் சூரிய வெப்பத்தைக் கொண்டு தண்ணீரைக் கொதிக்க வைப்பதற்காக, குறைந்த விலையில் ஒரு கருவியை உருவாக்கியுள்ளது.

வீடுகளில் உபயோகிப்பதற்கு ஏற்றதாகவும், ஒரே சமயத்தில் 90 லிட்டர் தண்ணீரைச் சூடாக்குவதற்குப் பயன்படுத்தக் கூடியதாகவும், குறைந்த விலையுள்ளதாகவும் இக் கருவி வடிவமைத்து உருவாக்கப்பட்டுள்ளது. சூரிய வெப்பத்தைக் கொண்டு இக் கருவி இயங்குகிறது. ஒரு குழாய் வழியாக குளிர்ந்த நீர் சென்றால், மற்றொரு குழாய் வழியாகச் சூடான நீர் வெளி வருகிறது. இக்கருவியைப் பயன்படுத்துவதன் மூலம் கணிசமான அளவுக்கு வெப்பத்தை மிச்சப்படுத்தலாம். இக்கருவி உற்பத்தி செய்ய சுமார் 425 ரூபாய் செலவாகிறது.

# இணைபிரியாதவை, இணையற்றவை!
# தீபாவளியும், கோ-ஆப்டெக்ஸ் துணிவகைகளும்!



தீபாவளிப் பண்டிகை விழாவுடன்
இணைந்ததே கோ-ஆப்டெக்ஸ்.
இந்தத் தீபாவளிக்கு உங்கள்
குடும்பத்தினர் அனைவருக்கும்
உகந்த ஏராளமான துணிவகைகள்
கோ-ஆப்டெக்ஸில்!
இப்பொழுதே சென்றிடுவீர்,
இனிதே வாங்கிடுவீர்!

---

கோ-ஆப்டெக்ஸில் எத்தனை
எத்தனையோ எழில் வண்ணத்
துணிகள்!

---

காஞ்சிபுரம், ஆரணி மற்றும்
கும்பகோணம் அசல் பட்டுச்
சேலைகள், உறையூர்,
கோயமுத்தூர், சேலம், மதுரை
கைத்தறி நூல் சேலைகள்,
சுங்கடி பிரிண்டுகள்
மற்றும் சின்னாளப்பட்டி சேலைகள்,
வேட்டிகள், துவாலைகள்,
லுங்கிகள், அலங்காரத்துணிகள்,
சட்டைத் துணிகள்,
உடுப்புகளுக்கான துணி
வகைகள்.

நீங்களும் — கோ-ஆப்டெக்ஸும் •
உங்கள் குடும்பமும் —
வண்ணத்துப் பூச்சியும் •
தரமேன்மையும் — நியாய
விலைகளும் (கோ-ஆப்டெக்ஸில்) •
பண்டைச் சிறப்பும் —
நவீன நளினமும் •
கோ-ஆப்டெக்ஸும் —
தீபாவளியும்
இணைபிரியாதவையன்றோ!

தீபாவளி
சிறப்புத் தள்ளுபடி
பருத்தி 10%
பட்டு 15%

**22-9-76 முதல்**
**23-10-76 வரை**



கோ-ஆப்டெக்ஸ்

தீபாவளி வரையில்
ஞாயிற்றுக் கிழமைகளிலும்
விடுமுறை நாட்களிலும்
விற்பனை உண்டு.

# தரமான பாலுக்குத் தகுந்த விலை



தென் கிழக்கு ஆசியாவிலேயே 'அமுல்' நிறுவனத்தின் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் சிறந்தவை என்று பாராட்டப்படுகின்றன.

குஜராத் மாநிலம் 'கைரா' மாவட்டத்திலுள்ள அமுல்(Amul) நிறுவனத்தின் கூட்டுறவுச் சங்கங்கள் போன்று தமிழ்நாட்டிலும் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களை அரசு பால்வள நிறுவனம் அமைத்து வருகிறது.

இதுவரை ஈரோடு, நாமக்கல், பழனி ஆகிய மூன்று இடங்களிலும் 'அமுல் மாதிரி' பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்து ஆயிரக்கணக்கான லிட்டர் பாலை கொள்முதல் செய்து வருகிறது தமிழ்நாடு பால் வள நிறுவனம்.

இப்பொழுது புதிதாக மதுராந்தகம் பகுதியிலும் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களை நிறுவிட முன்னோடித் திட்டங்களை வகுத்து செயல்படுத்தி வருகிறது.

'அமுல் மாதிரி' கூட்டுறவுச் சங்கங்களை நிறுவுவதினால் நன்மைகள் என்ன?

முதலில் தரமான பால் கிடைக்கும்.

ஆமாம், தரமான பாலுக்குத் தகுந்த விலை கொடுக்கப்படுகிறது.

இப்பொழுது மதுராந்தகம் பகுதியிலுள்ள மாம்பாக்கத்தில் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் அமைக்கப்பட்டுள்ளது. இங்கு வாங்கப்படும் பாலுக்கு லிட்டர் ஒன்றுக்கு ரூ. 1.28 முதல் ரூ. 2.10 வரை பாலின் தரத்துக்குத் தகுந்த வகையில் விலை கொடுக்கப்படுகிறது.

பாலிலுள்ள கொழுபபுச்சத்தின் அடிப்படையில் இந்த விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. தரமான பாலுக்கே நல்ல விலை கிடைப்பதால், தரமான கால்நடைகளை—உயர் இன மாடுகளை வளர்ப்பதில் பால் உற்பத்தியாளர்கள் ஆர்வம் காட்டுகின்றனர்.

இப்படி வாங்கும் பாலுக்குரிய பணத்தை வாரத்துக்கு ஒரு முறை குறிப்பிட்ட நாளில் தமிழ்நாடு பால்வள நிறுவனம் வழங்குகிறது.

பாலிலுள்ள கொழுப்புச் சத்தினைச் சோதனையிடும் கருவியும், பால் உற்பத்தியாளர் சங்கத்துக்குத் தேவையான பதிவேடுகளும் தமிழ்நாடு பால்வள நிறுவனத்தால் இலவசமாக அளிக்கப்படுகிறது. இவை ரூ. 2,000 மதிப்புடையவை.

பால் உற்பத்தியாளர் சங்கத்தின் சார்பில் அவ்வூரைச் சேர்ந்த ஒருவருக்குப் 'பால் பரிசோதகர்' வேலை வாய்ப்புக் கிடைக்கும். காலை, மாலை இரு நேரங்களிலும் ஒவ்வொருவர் வழங்கும் பாலுக்கும் தனித் தனியாக 'சாம்பிள்' எடுத்து அவைகளின் கொழுப்புச் சத்தைச் சோதனையிடுவது இவரது வேலையாகும்.

இன்னொருவருக்கு பால் உற்பத்தியாளர்கள் சங்கத்தின் கணக்குகளை எழுதும் வேலை. இவருக்கு மாடுகளுக்குச் சினை ஊசி போடுவதற்கான பயிற்சியும் அளிக்கப்படும். சினை ஊசிக்கான உயர்ரக விந்துவைப் பால் வள நிறுவனமே வழங்குகிறது.

இவ்வாறு கிராமத்திலுள்ள இரண்டு மூன்று படித்த இளைஞர்களுக்கு 'அமுல் மாதிரி' கூட்டுறவுச் சங்கங்கள் அமைப்பதால் வேலை வாய்ப்பு கிடைக்கிறது.

இவை மட்டுமல்ல.

பால் உற்பத்தியாளர் சங்கத்தில் உள்ளவர்கள் யாரும் மாடுகளைச்சங்கத்துக்கு அழைத்துவந்து பால் கறக்க வேண்டாம். கறந்த பாலைச் சங்கத்திற்கு எடுத்து வந்து கொடுத்தால் போதும். அங்கு 'சோதனை' செய்த பிறகு விலை நிர்ணயிக்கப்படும்.



வாரம் ஒரு முறை கால் நடைகளுக்கு மருத்துவப் பரிசோதனை கிடைக்கிறது.

இச்சங்கங்களிலுள்ள உறுப்பினர்களின் கால்நடைகள் கருத்தரிக்க உயர் ரக பொலி காளைகளிலிருந்து எடுக்கப்பட்ட வீரிய விந்து ஊசி மூலம் செலுத்தப் படுகிறது. அதன் மூலம் சினைப் பட்டு பிறக்கும் உயர் ரக கன்றுகளை வளர்க்க மாதந்தோறும் குறிப்பிட்ட தொகை மான்யமாக வழங்கப்படுகிறது.

தீவனப் பற்றுக்குறையைப் போக்க உற்பத்தியாளர்களுக்கு உயர் ரக புல் வகைகளின் விதைகள் குறைந்த விலையில் வழங்கப் பட்டு அவைகளை நல்ல முறையில் வளர்ப்பதற்கான ஆலோசனை வழங்கப்படுவதுடன், ஏக்கருக்கு ரூ. 200 முதல் ரூ. 500 வரை மானியமும் வழங்கப்படுகிறது.

தரமான கலப்புத் தீவனம் குறைந்த விலையில் சங்கத்தின் மூலமாக வழங்கப்படுகிறது.

ஆண்டு முடிவில் சங்கம் சம்பாதிக்கும் இலாபத்தில் சரிபாதி. உறுப்பினர்களுக்கு இலாபப் பங்காகக் கிடைக்கும்.

இவ்வாறு பல் வகையான நன்மைகளைப் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் மூலம் பெறலாம். இவ்வகையான சங்கங்களை மதுராந்தகம் பகுதியில் அமைத்திட தமிழ்நாடு பால்வள நிறுவனம் எடுத்துள்ள முயற்சிக்கு மக்கள் பேராதரவு அளித்து வருகின்றனர்.

இப்பணிக்காக நியமிக்கப்பட்டுள்ள கூட்டுறவு சார் பதிவாளர் திரு. ஆர். கிரிசேஷன் அவர்கள் கூட்டுறவுத் துறையிலும் பால் பண்ணைத் துறையிலும் நன்கு பயிற்சி பெற்றவர். இவருடைய பெரு முயற்சியாலும் இன்று மதுராந்தகத்தின் சுற்று வட்டாரத்திலுள்ள கிராம மக்கள் மிகுந்த ஆர்வம் காட்டுவதன் விளைவாலும் இன்னும் ஆறு மாதத்தில் மதுராந்தகம் பகுதியிலிருந்து 3,000 லிட்டர் பால் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

வளமான கால்நடை வளர்ப்புக்கு ஊக்கம் தரும் இத்திட்டம் வெண்மைப் புரட்சியிலே புதிய வேகத்தை ஊட்டுவதாகும்.

சுருக்கமாகக் கூறினால், தரமான பாலுக்குத் தகுந்த விலை தரும் திட்டமாகும் இது!

—மாமுலன்

## எருமைக் கன்றுகளுக்கு ஏற்ற தீவனம்!....

எருமைக் கன்றுகள் பிறந்தவுடன் அவற்றின் எடையில் 15-ல் ஒரு பாகம் பால் அளிக்க வேண்டும். பிறந்த கன்றுகளுக்கு $1\frac{1}{2}$ முதல் 2 லிட்டர் பாலை மூன்று அல்லது நான்கு வேளைகளுக்குப் பகிர்ந்தளிக்கலாம். கொழுப்புச்சத்து அதிகமாயிருந்து கன்றுகள் பாலைச் செரிக்க முடியா விட்டால் பாலை சரி பாகத்திற்கு சுத்தமான நீர் கலந்து கொடுக்க வேண்டும். பிறந்த கன்றுகளுக்கு சீம் பால் மிகவும் அவசியம். சீம் பாலில் புரதச் சத்துக்கள், தாதுப் பொருட்கள் அதிகமிருப்பது மட்டுமின்றி நோய்களை எதிர்க்கும் சக்தியையும் தருகின்றன. கன்றுகளுக்கு மூன்று மாதத்திற்கு மேல் முழுப்பாலை அளிக்க வேண்டியதில்லை.

வெண்ணெய் எடுத்த பாலுடன் கெட்டித் தீவனக் கலவை — மக்காச்சோளம், பிண்ணாக்கு, தவிடு ஆகியவை அரை கிலோ அளவிலிருந்து, ஒரு கிலோ வரையில் கஞ்சியாகச் செய்து 6 மாத வயது வரையில் கன்றுகளுக்குக் கொடுக்கலாம். நன்கு பராமரிக்கப்படும் கன்றுகள் நாள்தோறும் 400 முதல் 500 கிராம் எடை கூடுகிறது. ஆறுமாதத்திற்கு மேல் பெரிய எருமைகளுக்குக் கொடுக்கின்ற நல்ல கெட்டித் தீவனங்களையும் பசும்புற்கள், பயிர்வகைகளையும் அளிக்கலாம். கன்றுகளின் வயிற்றில் உருண்டைப் புழுக்களைத் தவிர்க்க 'பிப்ரஸிம் அடிபேட்' மருந்தினையோ அல்லது வேம்பின் இளந்தளிர் இலைகளை அரைத்தோ கொடுக்கலாம். வேப்ப எண்ணெய் 60 மில்லி லிட்டர் கொடுப்பது மிகவும் நல்லது. எருமைக் கிடாரிகளுக்கு பிண்ணாக்கு, மக்காச் சோளம், மரவள்ளிக்கிழங்கு மாவு, உளுத்தங்குருணை, கடலைக்குருணை போன்றவைகளைக் கலந்து சத்துள்ள கெட்டித் தீவனமாகக் கொடுத்து, பசுந்தீவனங்களையும் அளித்துப் பராமரித்தால் குறுகிய காலத்தில் பக்குவமடைந்து பலனடைந்து சிறிய வயதிலேயே கன்றை ஈன்று பால் அளிக்க ஆரம்பிக்கும்.

நன்கு பராமரிக்கப்பட்ட எருமைக் கிடாரிகள் 27 மாதத்திலேயே கன்றை ஈன்று பாலை அளிக்கத் தொடங்கும். பெரும்பாலும் பராமரிப்புக் குறைவினாலும் சத்தற்ற தீனியாலும், நாட்டு எருமைகள் $3\frac{1}{2}$ வயதில் பக்குவமடைந்து நான்கு முதல் நாலரை வயதில்தான் கன்றை ஈனுகின்றன.

வெளியீடு :

தகவல் தொடர்பு நிலையம்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்,
கோவை—3.

# கேளுங்கள் கொடுக்கப்படும்



**வினா: ஆண் அறுவைச் சிகிச்சை செய்து கொள்வதால் வலிவற்ற நிலை—ஆண்மையற்ற நிலை உருவாகிறதா?**

**விடை:** இல்லை. ஆண்மையற்ற நிலையோ-வலிவற்ற நிலையோ ஆண் அறுவைச் சிகிச்சை செய்து கொள்வதால் உண்டாவதில்லை. ஆண் அறுவைச் சிகிச்சையின் மூலம், ஆண் அணுக்கள் அடங்கிய விந்து செல்லும் பாதையான விந்து அணுக் குழாயின் சிறு பகுதி (ஒரு அங்குலத்தில் நான்கில் ஒரு பகுதி) துண்டித்து அகற்றப்படுகிறது. அண்டம் அல்லது விதை (testicle) எவ்விதப் பாதிப்புக்கும் உள்ளாவதில்லை. எனவே ஆண் அறுவைச் சிகிச்சை செய்து கொண்டால், ஆண்மை இழந்து விடுவோம் என்பது பொருத்தமுடையதல்ல; விஞ்ஞான ரீதியாக ஏற்றுக் கொள்ளக் கூடியதுமல்ல.

**வினா: ஆண் அறுவைச் சிகிச்சை செய்து கொண்ட பின்பு முதுகுவலி, அடிவயிற்றில் வலி ஏற்படுவதாக சிலர் கூறுகிறார்கள். இவற்றிற்கு ஆண் அறுவைச் சிகிச்சைதான் காரணமா?**

**விடை:** ஆயிரத்தில் ஒருவருக்கு இத்தகைய வலி ஏற்படக் கூடும். ஆனால் ஓரிரண்டு நாட்களில் வலி மறைந்துவிடும். தொடர்ந்து வலி நீடிக்குமேல் மருத்துவரை அணுகித் தக்க சிகிச்சை பெற்றுக் கொள்ள வசதி செய்யப்பட்டுள்ளது.

**வினா: ஆண் அறுவைச் சிகிச்சைக்குப் பின் சில தொழிலாளர்கள் பளுவான பொருள்களைத் தூக்கமுடியவில்லை என்கிறார்கள். இதற்கான காரணங்கள் யாவை?**

**விடை:** இது உண்மைக்குப் புறம்பானது; வெறும் மன மயக்கத்தால் ஏற்படுவது. எந்தவொரு அறுவை செய்து கொள்ளும் எவரும்—மன மயக்கத்துக்குட்பட்டு—தனக்கு ஓய்வு தேவை; பலமான சாமான்களைத் தூக்கக் கூடாது என நினைத்துக் கொள்வதுண்டு. சிறிது காலத்துக்கு உடலுழைப்பு தேவைப்படும் வேலைகளை மேற்கொள்ளவும் விரும்புவதில்லை. அறுவைச் சிகிச்சைக்கு முன்னும்-பின்னும் மருத்துவரிடமும், குடும்ப நல ஊழியரிடமும் மனம் விட்டுப் பேசி இவை போன்ற ஐயப்பாடுகளையும் அச்சங்களையும் அகற்றிக் கொள்ளலாம்.

**வினா: ஆண் அறுவைச் சிகிச்சைக்குப்பின் அதிக அளவில் இல்லற இன்பம் துய்க்க ஊக்க உணர்வு ஏற்படுகிறதென்பது உண்மையா?**

**விடை:** அறுவைச் சிகிச்சையின் காரணமாக இனிக் குழந்தை பிறக்காது என்று திட்ட வட்டமாகத் தெளிவு ஏற்பட்டுவிடுகிறது. ஆகையால், அதிக அளவில் இல்லற இன்பம் துய்க்க ஆவல் மேலிடுவது இயல்பேயாகும்.

**வினா: ஆண் அறுவைச் சிகிச்சை செய்து கொள்வதால் பொதுவாக உடல் பலக் குறைவு ஏற்படுவது உண்டா?**

**விடை:** ஆண் அறுவைச் சிகிச்சை செய்து கொள்வதால் பொதுவான உடல் பலக் குறைவு ஏற்படுகிறது என்பதற்கு மருத்துவ அல்லது மனோதத்துவ அடிப்படையில் சான்றுகள் எதுவும் இல்லை. சிலர் அறுவைச் சிகிச்சைக்கு முன்பே வலிவு குன்றியவர்களாக இருந்திருப்பார்கள். இன்னும் சிலர் அறுவைச் சிகிச்சையால் தங்களுக்கு வலிவு குன்றி விட்டதாகத் தாங்களே மனத்தில் தவறாகக் கருதிக் கொள்ளக்கூடும்.

**வினா: கரு உண்டாவதற்கு உதவும் ஆண்விந்து அணுக்கள் செல்லும் பாதையை, ஆண் அறுவைச் சிகிச்சை தடுத்து விடுகிறது. இது ஒருவரின் உடல் நலத்திற்குக் கேடாக அமையுமா?**

**விடை:** ஆண் விந்தணுக்கள் (Male Seeds), பெண் விந்தணுக்களுடன் (Ovum) கூடிச் சினைப்படுத்தும் தன்மை மட்டுமே வாய்ந்தவை. ஆகையால் தனிப்பட்டவருடைய உடல் நலத்திற்கும் அதற்கும் சம்பந்தமில்லை. எனவே ஆண் அறுவைச் சிகிச்சையால் உடல் நலக் குறைவு என்பது ஏற்படாது.

**வினா: ஆண் அறுவைச் சிகிச்சை செய்து கொண்டவர்களின் மனைவியர் சிலர் கருத்தரித்து விடுவதற்கான காரணங்கள் யாவை?**

**விடை:** இதற்கு இரண்டு விதமான காரணங்கள் உண்டு. ஆண் விந்து அணுக் குழாய் ஒன்று சிலருக்கு அதிகப்படியாக இருக்கக்கூடும். பத்தாயிரம் பேர்களில் ஒருவருக்குத்தான் அப்படியிருக்கும். எனவே அறுவைச் சிகிச்சை செய்யும் பொழுது, இத்தகைய விந்து அணுக்குழாய் ஒன்றை விட்டு விட்டிருந்தால் அவற்றில் உள்ள விந்து அணுக்களால் மனைவியர் கருத்தரிக்க வாய்ப்பு ஏற்படுகிறது. ஆகவே அறுவைச் சிகிச்சை செய்து கொண்டவர், மருத்துவரின் அறிவுரைக்கிணங்க அவ்வப்போது (ஆறு முதல் எட்டு வாரங்கள் வரை) தன் விந்துவை சோதித்துப் பார்த்துக் கொள்ள வேண்டும். அவரது விந்துவில், அணுக்கள் இல்லை என்பது உறுதியாகும் வரை கருத்தடைச் சாதனங்களைப் பயன்படுத்த வேண்டும். இரண்டாவதாக, புறம்பான உடலுறவு முறை காரணமாகவும் கருத்தரித்தல் உண்டு.

**வினா: பெண் அறுவைச் சிகிச்சை பெண்களைப் பருமனாக்கி விடுகிறதா? அப்படி என்றால் ஏன்?**

**விடை:** பெண் அறுவைச் சிகிச்சை செய்து கொள்வதால் பெண்கள் பருமனாகி விடுவதில்லை. அளவுக்கு அதிகமான உணவு உட்கொள்ளுதல், உடற் பயிற்சியின்மை, சுரப்பிகளின் நீர் சம

மற்ற நிலையிலிருப்பது ஆகியவையே உடல் பருப்பதற்கான காரணங்கள்! பெண் அறுவைச் சிகிச்சையில் பெண் அணுக் குழாய்கள் துண்டிக்கப்பட்டு முடிச்சிடப்படுகின்றனவே தவிர, வேறு எவ்வித தலையீடும் கிடையாது.



**வினா: பெண் அறுவைச் சிகிச்சை செய்து கொள்ளும் தாய்க்கு இயலாமை அல்லது ஆற்றல் கேடு ஏற்படுகிறதா?**

**விடை:** பெண் அறுவைச் சிகிச்சையால் தாய்மார்களுக்கு பலக் குறைவு ஏற்படுவதில்லை. பெண் அறுவைச் சிகிச்சை உடலுக்கு எவ்வித ஊறும் ஏற்படுத்துவது இல்லை. பெண் அறுவைச் சிகிச்சை செய்து கொண்ட முதல் ஆறு வாரங்களுக்கு, பளுவான சாமான்களைத் தூக்குவது, மாவு அரைத்தல், மாடிப்படி ஏறுதல் ஆகியவற்றைத் தாய்மார்கள் தவிர்க்க வேண்டும்.

பிள்ளைப் பேற்றையொட்டி எடுத்துக் கொள்ளும் முன்னேற்பாட்டு நடவடிக்கைகளைப் போலவே அறுவைச் சிகிச்சை செய்து கொண்ட முதல் ஆறு வாரங்களுக்கு நடந்து கொள்ளுதல் நலம்.

**வினா: கருத்தடை வளையம் (I U D) பொருத்திக் கொள்வதால் அதிகப்படியான இரத்தக் கசிவு ஏற்படுகிறது என்பது உண்மையா?**

**விடை:** கருத்தடை வளையம் பொருத்திக் கொண்ட பின் சில பெண்களுக்கு அதிகப்படியான இரத்தக் கசிவு ஏற்படுகிறது. வீட்டு விலக்கின் போது இந்த அளவுக்கு இரத்தக் கசிவு ஏற்படலாம், அல்லது இடைப்பட்ட காலத்தில் ஏற்படலாம்.

இரத்தக் கசிவு அதிகமாக இருந்தால் கருத்தடை வளையத்தை அகற்றிவிடுவது நல்லது. அந்தக் கட்டத்தில் மருத்துவரின் உதவியை நாட வேண்டும். வேறு கருத்தடை முறையைப் பின்பற்ற முனைய வேண்டும். சில உணவுகள், சில மருந்துகள், சில பருவ காலங்கள் ஆகியவை எப்படி அனைவருக்கும் உகந்ததாக இருப்பதில்லையோ அதே போலக் கருத்தடை வளையம் (I U D) பொருத்திக் கொள்வது, சில பெண்களுக்கு உகந்ததாக இருப்பதில்லை.

**வினா: பொருத்தப்பட்ட கருத்தடை வளையங்கள் சிலர் விஷயத்தில் வெளிவந்து விடுவதுண்டா? கருத்தடை வளையம் பொருத்திக் கொள்வதால் சில பெண்களின் கருப்பையில் துளை (Perforation) ஏற்பட்டு விடுவதுண்டா?**

**விடை:** சரியான அளவினதாகக் கருத்தடை வளையம் இல்லாவிடின், அதாவது கருப்பைக்கு ஏற்றாற்போல் அல்லாமல் சிறியதாக இருந்தால், கருத்தடை வளையம் சிலர் விஷயத்தில் வெளி வந்துவிடக் கூடும். கருத்தடை வளையம் கருப்பையில் துளையினை ஏற்படுத்துவது மிக அரிதாக நடப்பதொன்றாகும். கருத்தடை வளையம் சரியாகப் பொருத்தப் படாவிட்டால் இந்நிலை ஏற்படக் கூடும். சில தாய்மார்களுக்குக் கருத்தடை வளையம் பொருத்தப் பட்டு பல நாட்கள் கடந்த பின் பெண் உறுப்புகளின் சுவர்களில் பதிந்து போய் துளை ஏற்படுத்தக் கூடும்.

**வினா: கருத்தடை வளையம் பொருத்திக் கொள்வதால் முதுகு வலி, அடிவயிற்று வலி போன்றவை ஏற்படுகின்றனவா?**

**விடை:** கருத்தடை வளையம் பொருத்தப்படுவதால் கருப்பையினுள் புதியதொரு வெளிப் பொருள் செல்வது காரணமாக, கருப்பை அதனை வெளித் தள்ள முயலும்போது—சுருங்கி விரிகிறது. அப்போது இந்த வலிகள் ஏற்படக்கூடும்.

**வினா: கருத்தடை வளையத்தின் பயன் என்ன?**

**விடை:** கருத்தடை வளையம் அல்லது 'லூப்' (IUD), எளிய, பாதுகாப்பான கருத்தடைச் சாதனமாகும். ஒரு குழந்தைக்கும் மற்றொரு குழந்தைக்கும் தகுந்த இடைவெளி தருவதற்குக் கருத்தடை வளையம் மிகுந்த பயனுள்ள சாதனமாகப் பயன்படுகிறது. மேலுமொரு குழந்தை தேவை என்று விரும்பினால், கருத்தடை வளையத்தை அகற்றிவிட்டு, 'கரு'த்தரிக்கும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொள்ளலாம். கருப் பையினுள் ஒரு முறை கருத்தடை வளையத்தைப் பொருத்தி விட்டால், பல ஆண்டுகளுக்கு அதனைப் பத்திரமாக விட்டுவைக்கலாம்.

உலகம் முழுவதிலும் கருத்தடை வளையம் பயன் படுத்தப் படுகிறது; கீழை நாடுகளில் வெகுவாக வரவேற்கப் பெற்றுப் பயன் படுத்தப் பெறுகிறது. இந்தியாவில் மட்டும் ஏறக்குறைய 4 கோடித் தாய்மார்கள், திட்டமிட்ட குடும்பத்தை அமைத்துக் கொள்வதன் பொருட்டுக் கருத்தடை வளையம் பொருத்திக் கொண்டுள்ளனர்.

**வினா: கருத்தடை வளையம் (I U D) என்றால் என்ன?**

**விடை:** கருத்தடை வளையம் பிளாஸ்டிக்கால் செய்யப்பட்ட சிறியதொரு சாதனமாகும். இது பெண்ணின் கருப்பையினுள் பொருத்தப்படுகிறது.

**வினா: கருத்தடை வளையம் பொருத்தும் பொழுது வலி ஏற்படுமா?**

**விடை:** கருத்தடை வளையம் பொருத்துவதால் வலி ஏதும் ஏற்படுவதில்லை. அப்படி சிறு அளவில் தொந்தரவு இருக்குமானால் வலி போக்கும் சாதாரண மருந்தின் துணையால் இலகுவாக வலியை நீக்கிவிடலாம்.

**வினா: கருவே தரிக்காத பெண்கூட வளையத்தைப் பொருத்திக் கொள்ளலாமா?**

**விடை:** மாதர் எவரும் கருத்தடை வளையம் அணிந்து கொள்ளலாம். ஆனால் ஒரு குழந்தையாவது பெற்றெடுத்த பெண்களுக்கு மட்டுமே இச்சாதனத்தைப் பொருத்த மருத்துவர்கள் ஊக்கமளிப்பர். 'கரு'வே தரிக்காத பெண்களுக்குக் கருத்தடை வளையம் பொருத்துவதில் சிறிது சிரமம் இருக்கக் கூடும்.

**வினா: கருத்தடை வளையம் பொருத்திக் கொள்வதற்கு செலவு ஏதேனும் உண்டா?**

**விடை:** இல்லை; அனைத்துக் குடும்ப நலத் திட்ட நிலையங்களிலும், கருத்தடை வளையம் இலவசமாகப் பொருத்தப்படுகிறது. கருத்தடை வளையம் பொருத்திக் கொள்ளும் பெண்களுக்கு ஈட்டுத் தொகை கூட வழங்கப்படுகிறது.

**வினா : கருத்தடை வளையம் பொருத்திக் கொள்வதற்குப் பக்குவமான காலம் எது?**

**விடை :** எப்போது வேண்டுமானாலும் கருத்தடை வளையம் பொருத்திக்கொள்ளலாம். ஆனால் வீட்டுவிலக்கு ஆன உடனடியாகப் பொருத்திக் கொள்வது மிகவும் பொருத்தமும் சிறந்ததுமாகும். இந்த நேரத்தில் கருத்தடை வளையம் பொருத்துவது மிக எளிதாக இருக்கும். பிள்ளைப் பேற்றை யொட்டியும் கருத்தடை வளையம் பொருத்திக் கொள்ளலாம்.

**வினா : கருத்தடை வளையம் பொருத்துவதால் வீட்டு விலக்காவதில் ஏதாவது சிக்கல் ஏற்படுமா?**

**விடை :** கருத்தடை வளையம் பொருத்திய பின்னர் இரண்டு அல்லது மூன்று முறை வீட்டு விலக்காவது தள்ளிப் போகலாம். இரத்தக் கசிவும் அதிகம் போகலாம். இரண்டு மூன்று மாதங்களுக்குப் பின் மாதவிடாய் இயல்பாக நேரிடும்.

**வினா : கருத்தடை வளையம் பொருத்திக் கொண்ட பெண் எவ்வளவு காலத்திற்கு இல்லற இன்பம் துய்க்காமல் இருக்க வேண்டும்?**

**விடை :** கருத்தடை வளையம் பொருத்திக் கொண்ட பின் இல்லற இன்பம் துய்க்காமல் ஒதுங்கியிருக்க வேண்டிய அவசியமில்லை. இவ்வளையம் பொருத்திய பின் சிறு அளவில் இரத்தக் கசிவு இருந்தால், அக்காலத்தில் இல்லற இன்பம் துய்க்காமல் இருப்பது நல்லது.

**வினா : கருத்தடை வளையம் பொருத்திக் கொள்வதால் தாய்ப் பால் சுரப்பதில் தடை ஏற்படுமா?**

**விடை :** அப்படி ஏதும் ஏற்படுவதில்லை.

**வினா : கருத்தடை வளையத்தை அகற்றிய பின்னும் கருத்தரிக்கும் வாய்ப்பை அது பாதித்து விடுமா?**

**விடை :** கருத்தரிக்கும் வாய்ப்பை அது பாதிப்பதில்லை. கருத்தடை வளையம் பொருத்திக் கொள்வதால் பெண்ணின் கருவளம் பாதிப்புக்குள்ளாவதில்லை. குழந்தை வேண்டும் என்றவுடன், கருத்தடை வளையத்தை நீக்கி, கருத்தரிக்கும் வாய்ப்பைப் பெற்றுக் கொள்ளலாம்.

**வினா : கருத்தடை வளையம் பொருத்திக்கொண்ட பின்னும் பெண்ணுக்குக் கருத்தரிக்கும் வாய்ப்பு உண்டா?**

**விடை :** இப்படி ஏற்படுவது மிக மிக சொற்பமாகும். நூற்றில் இருவருக்கு இப்படி ஏற்பட்டாலும் ஏற்படலாம்!

**வினா : கருப்பையிலுள்ள கருத்தடை வளையம் இருக்கும்பொழுதே கரு உண்டாகி விட்டால், இந்தக் கருத்தடைச் சாதனம் கருவிற்கோ, வடிவம் பெற்று விட்ட குழந்தைக்கோ குந்தகம் ஏற்படுமா?**

**விடை :** அப்படிப்பட்ட குந்தகம் எதையும் இது ஏற்படுத்துவதில்லை. இது போன்ற சந்தர்ப்பங்களில் கருப்பைக்கோ, கருப்பையிலுள்ள பச்சிளங் குழந்தைக்கோ எக்கேடும் ஏற்படாமல் பத்து மாதங்களும் கழிகின்றன.



**வினா : கருப்பையினுள் கருத்தடை வளையம் எவ்வளவு காலத்திற்கு இருக்கலாம்?**

**விடை :** சொந்தக் காரணங்களுக்காகவோ, மருத்துவக் காரணங்களுக்காகவோ கருத்தடை வளையத்தை அகற்றி விடவேண்டும் என்ற நிலை வரும் வரை அல்லது முடிவு எடுக்கும் வரை பல ஆண்டுகளுக்கு அதை அப்படியே விட்டு வைக்கலாம். இவ்வகையில் அகற்றி விட்டு அவசியப்பட்டால் ஒரு மாத காலத்திற்குப் பின், பொருத்தி விட வேண்டும். அந்த இடைக் காலத்தில் பிற கருத்தடை முறைகளை மேற்கொள்ளுதல் வேண்டும்.

**வினா : கருத்தடை வளையம் பொருத்தப்பட்ட பின்பு தொல்லை, தொந்தரவுகள் ஏதேனும் ஏற்படுகின்றனவா?**

**விடை :** கருத்தடை வளையம் பொருத்தப்பட்ட பின்பு ஒரு வார காலத்திற்குச் சில பெண்களுக்குச் சிறு அளவில் இரத்தக் கசிவு இருக்கலாம். மாதவிடாய் ஏற்படுவது, முதல் இரண்டு அல்லது மூன்று மாதங்களுக்குத் தள்ளிப் போகலாம். அப்போது இரத்தக் கசிவும் அதிகமாகப் போகலாம். இதனால் கவலைப்பட வேண்டியதில்லை. மருத்துவரை அணுகி ஆய்வுரை பெறுங்கள். மாதவிடாய் ஏற்படுவது சாதாரணமாகி விடும். எவ்வித தீங்கும் நேரிடுவதில்லை.

இக் கருத்தடைச் சாதனம் பொருத்தப்பட்ட பின்பு சில பெண்களுக்கு முதுகு வலி அல்லது அடிவயிற்று வலி ஏற்படலாம். சாதாரண வலிபோக்கும் மருந்தின் மூலம் இவ்வலியைப் போக்கி விடலாம்.

**வினா : கருத்தடை வளையம் பொருத்திக் கொள்வதால் புற்று நோய் ஏற்படுகிறதா?**

**விடை :** இல்லை; நிச்சயமாகப் புற்று நோய் ஏற்படுவதில்லை. பல்வேறு விஞ்ஞான ஆராய்ச்சிகளின் முடிவு இந்த உறுதியை அளிக்கின்றது. இக்கருத்தடைச் சாதனம் பொருத்திக் கொள்வதால், வேறு எந்த நோயும் கூட ஏற்படுவதில்லை.

**வினா : கருத்தடை வளையம் பொருத்திக் கொண்டவர்கள் கவனத்தில் கொள்ள வேண்டியவை யாவை?**

**விடை :** கருத்தடை வளையம் பொருத்திக் கொண்ட பின்பு தொந்தரவு ஏதும் இருந்தால் உடனடியாகக் குடும்பநலத்திட்ட நிலையத்திற்குச் சென்று தெரிவியுங்கள்.

இதைப் பொருத்திக் கொண்ட பின் ஏற்படும் முதல் மாதவிடாயின் போது கருப்பையிலிருந்து அது விழுந்துவிடுவதற்குப் பெரும் வாய்ப்பு உண்டு. ஆகவே மிகக் கவனமாக இருக்க வேண்டும்.

கருத்தடை வளையம் விழுந்து விட்டாலோ அல்லது மாதவிடாய் தவறி விட்டாலோ மருத்துவரைக் கலந்தாலோசியுங்கள். வதந்திகளால் நம்பிக்கை இழக்காதீர்கள்.

கருத்தடை வளையம் பாதுகாப்பானது—பலன் தரத் தக்கது — நம்பகமானது. வதந்திகளை நம்பாதீர்கள்!

**வினா : மருத்துவ முறை கருச் சிதைவுச் சட்டமென்றால் என்ன?**

**விடை :** கருத்தரித்த இருபதாவது வாரத்துக்கு முன்னதாக, கருவைக் கருப்பையிலிருந்து அகற்றி விடுவதற்கு மருத்துவ முறை கருச் சிதைவு (Medical Termination of pregnancy) என்று

பெயர். இக் குறைந்த காலத்தில் அகற்றப்படும் 'கரு' உருவமற்றதாக—கருப்பைக்கு வெளியே வாழும் சக்தி யற்றதாக இருக்கும். இதைத்தான் கருச்சிதைவு என்கிறோம்.

**வினா : கருச் சிதைவுச் சட்டம் ஏன் நிறைவேற்றப்பட்டது ?**

**விடை :** உண்டான கரு தொடர்ந்து இருக்க அனுமதித்தால் தாயின் உயிருக்கு ஆபத்து என்ற நிலையில் தாயின் உயிர் காப்பாற்றப்பட வேண்டும் என்ற ஒரே காரணத்திற்காக மட்டும், 1972-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் வரை சட்டம் கருச் சிதைவினை அனுமதித்து வந்தது. இருந்தாலும், பயிற்சியற்ற பணம் பிடுங்கும் போலி மருத்துவர்களால் (quacks) ஆண்டுதோறும் சட்டத்திற்குப் புறம்பாக அல்லது கொலை என்று சொல்லத்தக்க 40 இலட்சம் கருச் சிதைவுகள் நமது நாட்டில் செய்யப்பட்டு வந்தன. இது வருந்தத்தக்க விளைவை ஏற்படுத்தியது—பயனைத் தந்தது. தாய்மார்களின் உடல் நலத்தைக் கெடுத்தது. பெரும்பாலும் தாய்மார்கள் சாவுக்காளானார்கள். இவற்றை யெல்லாம் தவிர்க்க வேண்டி, 1971-ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்களில் கருச்சிதைவுச் சட்டம் நிறைவேற்றப்பட்டு 1972-ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் நாள் முதல் அமலுக்கு வந்தது.

இது, நல்வாழ்வு குடும்பநலத் திட்ட நடவடிக்கைகளுக்கான ஒரு திட்டமாக உள்ளது. நமது மாநிலத்தில் தாய் ஒருவர் குழந்தை வேண்டாம் எனக் கருதினால், இதற்கான வசதிகள் அனைத்தும் பெற்ற மாநிலத்திலுள்ள மருத்துவ மனையைச் சார்ந்த, தகுதியும், பயிற்சியும் பெற்ற ஒருவரின் உதவியை நாட அவருக்கு உரிமை உண்டு.

**வினா : கருச்சிதைவு எப்போது செய்யலாம்?**

**விடை :** (1) ஏற்பட்ட கரு தொடர்ந்து இருக்குமானால் அந்தப் பெண்ணின் உடல் நலத்திற்கோ, உள்ள நலத்திற்கோ நிகழ்காலத்திலோ அல்லது வருங்காலத்திலோ ஊறினை விளைவிக்கும் என்ற நிலையிலும்,

(2) பிறக்கப் போகும் குழந்தைக்கு உடல் அளவிலோ, உள்ள அளவிலோ ஊனம் ஏற்படும் என்ற நிலையிலும்,

(3) கற்பழிப்பின் காரணமாகக் 'கரு' உண்டாகியிருந்தாலும்,

(4) கருத்தடைச் சாதனங்களைப் பயன் படுத்திய போதிலுங் கூட கரு உண்டாகி விட்டாலும், கருச்சிதைவு செய்யலாம். கருச்சிதைவுக்குள்ளாகும் பெண்ணின் வயது, அவருக்கு இருக்கும் குழந்தைகளின் எண்ணிக்கை, அவரது கடைசி குழந்தையின் வயது, அவர் என்ன வேலை செய்கிறார், எவ்வளவு வருமானம் என்ற விவரங்களை எல்லாம் கருத்திற் கொண்டு கருச்சிதைவு செய்யப்பட வேண்டும்.

கருச்சிதைவுச் சட்டம் எந்த உணர்வோடு செய்யப்பட்டதோ அந்த உணர்வோடு அணுக வேண்டும். சட்டம் சட்டம் என்று சொல்லி கருச்சிதைவுக்காகத் தகுதியும் பயிற்சியுமற்றவரிடம் (quack) செல்லும் அளவுக்கு விரட்டக் கூடாது பெண்களை!

**வினா : கருச்சிதைவினை யார் செய்யலாம்?**

**விடை :** கீழ்வரும் மருத்துவக் கல்வியில் தேர்ச்சி பெற்று அரசு அனுமதி பெற்ற மருத்துவர் (Registered Medical Practitioner) கருச்சிதைவு செய்யலாம்.

(1) மேல் பட்டப் படிப்பு (Post Graduate Degree) அல்லது 'டிப்ளமோ' பெற்றவரும், அறுவைச் சிகிச்சை செய்வதில் அனுபவம் பெற்றவரும், மகப்பேறு மருத்துவத்திலும் பெண் பிணி இயலிலும் ஆறு மாதங்களுக்குக் குறையாமல் பணியாற்றியவருமான ஒருவர்.

(2) மேல் பட்டப் படிப்பு 'டிப்ளமோ' அல்லது மகப்பேறு மருத்துவத்திலும், பெண் பிணி இயலிலும் 'பட்டம்' பெற்றவராக இருக்க வேண்டும்.



(3) மகப்பேறு மருத்துவத்திலும் பெண் பிணி இயலிலும் ஐந்து வருடங்களுக்குக் குறையாத அனுபவம் பெற்றவராக இருத்தல் வேண்டும்.

(4) மாநில அரசு அளிக்கும் கருச்சிதைவுக்கான சிறப்புப் பயிற்சியைப் பெற்றவராக இருத்தல் வேண்டும்.

மேற்சொன்ன தகுதிகள் படைத்த மருத்துவர்கள் கருச்சிதைவு செய்யலாம்.

**வினா : கருச்சிதைவு எங்கே செய்யப்படுகிறது?**

**விடை :** அரசு அனுமதிபெற்ற மருத்துவ நிலையங்களே கருச்சிதைவு செய்ய வேண்டும். மருத்துவக் கல்லூரிகளைச் சார்ந்த மருத்துவ மனைகள் அனைத்தும், மாவட்டத் தலைமை மருத்துவ மனைகள் அனைத்தும், முப்பதுக்கும் மேற்பட்ட வட்ட மருத்துவ மனைகள், சில தனியார் மருத்துவ நிலையங்கள் ஆகியவற்றைக் கருச்சிதைவு செய்ய அரசு அனுமதித்துள்ளது. இந் நிலையங்களின் எண்ணிக்கை விரைவில் அதிகரிக்கப்படும்.

**வினா : கருச்சிதைவு செய்து கொள்ள எப்படிப் பதிவு செய்து கொள்ள வேண்டும் ?**

**விடை :** கருச்சிதைவு செய்யும் மருத்துவரையும், நிலையத்தையும் அரசு அனுமதித்திருக்க வேண்டும். அதற்குரிய மனுவில், இதற்காக மருத்துவர்கள் நல்வாழ்வு குடும்ப நலத் துறை இயக்குநருக்கு எழுதி அனுப்ப வேண்டப்படுகிறது.

அரசு அனுமதிக்காத மருத்துவர் கருச்சிதைவு செய்வதும், அரசு அனுமதிக்காத மருத்துவ நிலையத்தில் கருச்சிதைவு செய்வதும் சட்டப்படி குற்றமாகும்.

**வினா : கருச்சிதைவு எப்போது எப்படிச் செய்யவேண்டும் ?**

**விடை :** வீட்டுவிலக்காகவில்லை என்பது தெரிந்த உடன், கருச்சிதைவு செய்து கொள்வது என்பது மிகப் பாதுகாப்பானது. அப்படிச் சிதைவு செய்துகொள்ள முனைபவர்களை அநேகமாக மயக்க மருந்தில்லாமல் புற நோயாளிகளாகவே வைத்துப் பார்த்து விடலாம். கரு உண்டாகி 12-வது வாரத்துக்கு முன்பாக, பெண் உறுப்பின் வழியாக மருத்துவ முறைப்படி இலகுவாக கருவை அகற்றிவிடலாம்.

கரு உண்டான 12-வது வாரத்துக்குப் பின், 20-வது வாரத்துக்குள் என்றால், கருச்சிதைவு அவசியம் என்பது குறித்து இரண்டு மருத்துவர்கள் சான்றிதழ் வழங்க வேண்டும். இக்காலத்தில் கருப்பையைச் சுத்தம் செய்ய அதனுள் மருந்து செலுத்த வேண்டியது அவசியமாகும். இப்போது கருச்சிதைவு செய்து கொள்வது என்பது, கரு உண்டாகி 12-வது வாரத்துக்கு முன் கருச்சிதைவு செய்து கொள்வதை விட ஆறு மடங்கு கடினமானதாகும். இருந்தாலும் ஒரு குழந்தை பிறப்பதை விடப் பாதுகாப்பானது.

கருச்சிதைவு செய்து கொள்ள ஆலோசனைக்காக உங்களிடம் ஒரு பெண் வந்தால் அவரை உரிய இடத்திற்கு உடன் அனுப்பி அவருக்கு உதவி செய்யுங்கள்.

அரசு அனுமதித்துள்ள மருத்துவ மனையில் இருக்கும் பயிற்சி பெற்ற மருத்துவர், பெண்ணின் சம்மதத்துடன் கருச்சிதைவு செய்யலாம். கணவனின் ஒப்புதல் தேவையில்லை. கருச்சிதைவு செய்தது பற்றிய எழுத்துச் சான்றுகள், பெண்ணின் நலம் கருதி மிக ரகசியமாக வைக்கப்பட்டிருக்கும்.



கருச்சிதைவுக்குள்ளாகும் பெண் வயதுக்கு வராதவராகவோ, பைத்தியம் பிடித்தவராகவோ அறிவுத் திறன் அற்றவராகவோ இருந்தால் பெற்றோர் அல்லது பாதுகாப்பாளரின் சம்மதம் தேவை.

திருமணமாகாத, கருவுற்றப் பெண்களைக் கடிந்து கொள்ளாதீர்கள். அனுதாபத்துக்குரியவர் —உதவிக்குரியவர் அப்பெண்கள்.

**வினா : கருச்சிதைவு (Medical Termination of Pregnancy) என்பது தாய்-சேய் நலத்திட்ட, குடும்ப நலத்திட்ட நடவடிக்கையாகுமா?**

**விடை :** விரும்பாத நேரத்தில் ஏற்படும் கரு, உயிர் உண்டாவதற்கு முன்பே கலைக்கப்படுகிறது. இது தாய் நலத்தைக் காக்கிறது. தாய்ப்பால் அருந்திக் கொண்டிருக்கும் அவரது கடைசிக் குழந்தைக்கும் தாயின் முழுக் கவனிப்பும், அன்பும் கிடைக்க வழி செய்கிறது.

வேண்டாத நேரத்தில் உண்டான விரும்பத்தகாத கருவைக் கலைக்க ஒரு பெண் விரும்பும்போது குடும்ப நலத் திட்டத்தின் அவசியத்தை முழுமையாக உணருகின்றார். அந்த நேரத்தைப் போல வேறு எந்த நேரத்திலும் குடும்ப நலத் திட்டத்தின் அவசியத்தை அவ்வளவு முழுமையாக அவர் உணர்வதில்லை. அந்தத் தாய் இரண்டு குழந்தைகளையுடையவராக இருந்தால் மிகுந்த விருப்பத்துடன் ஒப்புதல் அளித்து பெண் அறுவைச் சிகிச்சை செய்து கொள்வார். போதிய குழந்தைகள் அவருக்கு இல்லை என்றால், கருச்சிதைவு செய்து கொண்ட பிறகு தொடர்ந்து கருத்தடை வளையம் பொருத்திக் கொள்ளுமாறு அறிவுறுத்தலாம்.

கருச்சிதைவு செய்து கொள்பவர்கள் குடும்ப நல அறுவைச் சிகிச்சை செய்து கொள்ள வேண்டுமென்று தயவு செய்து வற்புறுத்தாதீர்கள். சட்டப்படி அது அவர்களது விருப்பத்தைப் பொறுத்தது.

## இந்தியாவிலிருந்து இரத்தினக் கற்கள், நகைகள் ஏற்றுமதி!





**1976** ஏப்ரல்—ஜூலை காலத்தில் இந்தியாவிலிருந்து மொத்தம் 7 கோடியே 85 இலட்ச ரூபாய் மதிப்புள்ள இரத்தினக் கற்களையும், நகைகளையும் அமெரிக்கா வாங்கியுள்ளது. இதே காலத்தில் பின் கண்ட நாடுகளும் இந்தியாவிலிருந்து இரத்தினக் கற்கள் போன்ற விலை மதிப்பு மிக்க கற்களையும், நகைகளையும் இறக்குமதி செய்துள்ளன.

| | (கோடி ரூபாய்) |
|---|---|
| ஹாங்காங் ... | 6.667 |
| பெல்ஜியம் ... | 6.032 |
| ஜப்பான் ... | 3.779 |
| ஃபிரான்ஸ் ... | 2.049 |
| ஸ்விட்சர்லாந்து | 1.916 |
| சிங்கப்பூர் ... | 1.380 |
| மேற்கு ஜெர்மனி | 1.276 |
| இங்கிலாந்து ... | 1.260 |
| | (இலட்சம் ரூபாய்) |
| நெதர்லாந்து | 68.7 |

நடப்பு நிதி ஆண்டில் முதல் நான்கு மாதங்களில் மொத்தம் 33 கோடியே 69 இலட்சத்து 60 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள இரத்தினக்கற்களையும், நகைகளையும் இந்தியா ஏற்றுமதி செய்துள்ளது.




## தமிழ்நாட்டில் உள்ள வனவிலங்குச் சரணாலயங்கள்

| வனவிலங்குச் சரணாலயங்கள் | | சுற்றுலா செல்வதற்கு ஏற்ற பருவம் |
|---|---|---|
| முதுமலை | .. | பிப்ரவரி முதல் மே வரை |
| வேடந்தாங்கல் | .. | நவம்பர் முதல் பிப்ரவரி வரை |
| கிண்டி பூங்கா | .. | ஆண்டு முழுவதும் |
| கோடிக் கரை | .. | நவம்பர் முதல் மார்ச்சு வரை |
| முண்டந்துறை | .. | ஜனவரி முதல் செப்டம்பர் வரை |
| ஆனைமலை | .. | பிப்ரவரி முதல் மே வரை |
| களக்காடு | .. | ——— |

# வேடந்தாங்கலில் வெளிநாட்டுப் பறவைகள்!



மத்தாளிக் கொக்கு, நாமக் கோழி, உப்புக் குருவி, மாட்டுக் கொக்கு, மடையான், வக்கா, நரையான், நத்தைக் கொத்தி நாரை, மண்வெட்டி வாயன், அரிவாள் மூக்கன், பாம்புத் தாரா இவையெல்லாம் எங்கே இருக்கின்றன?

வேடந்தாங்கல் நீர்ப் பறவைக் காப்புச் சாலையில் இந்தப் பறவை இனங்களைக் கண்டு பரவசமடையலாம்!

ஆரவார மிக்க சென்னை நகரைக் கடந்து சுமார் 53 மைல் தூரத்திற்குச் சென்றால் அமைதியான வேடந்தாங்கல் கிராமத்தை அடையலாம். அங்கே உள்ள ஒரு சிறிய ஏரியின் இடையே அடர்ந்து வளர்ந்துள்ளது. கட்ப்பமரத் தோப்பு. ஆண்டுதோறும் மழைக் காலத்தில் ஏரியில் நீர் தேங்கி தோப்பின் அடிமரங்களைச் சூழ்ந்து நிறைந்ததும், நீர்ப் பறவைகள் பெருங் கூட்டமாய் ஆயிரக் கணக்கில் கூடி நீர் மட்டத்தின் மேலுள்ள கொப்புகளில் கூடுகட்டி முட்டையிட்டு, குஞ்சு பொரித்து இனம் பெருக்குகின்றன.

வேடந்தாங்கலில் கூடும் பறவைகளில் வெளிநாட்டுப் பறவைகளும் உண்டா?

ரஷ்யா, முதலிய தூர தேசங்களிலிருந்து நீர்ப் பறவைகள் வேடந்தாங்கலுக்கு வந்து, அங்குள்ள கடப்பமரத் தோப்பில் இறங்கி கூடு கட்டுகின்றன என்றும், பல்லாயிரம் மைல்களையும் பல கடல்களையும் கடந்து இனம் பெருக்க அவை இங்குதான் வருகின்றன என்றும் சொல்கிறார்கள்.

சுமார் 20 ஆண்டுகளுக்கு முன் வேடந்தாங்கலில் கிளுவை வேட்டையாடுகையில், குண்டுபட்டு விழுந்த கிளுவையொன்றின் காலில் ஒரு காப்பு பூட்டப்பட்டிருந்தது. அந்தக் காப்பில் 'மாஸ்கோ' என்று ரஷ்யாவின் தலைநகரின் பெயர் பதிக்கப்பட்டிருந்தது!

வேடந்தாங்கலில் அவ்வப்போது காணப்படும் அயல்நாட்டுப் பறவைகளில் முக்கியமானவை கிளுவைகள், வாலாட்டிக் குருவி, சில உள்ளான் வகைகள் ஆகியவையாகும்.

ஆவணி மாதத்தில் நல்ல மழை இருந்தால், புரட்டாசிக்கு முன்பாகவே பறவைகள் வேடந்தாங்கலின் கடப்பந் தோப்பில் வந்து இறங்கத் தொடங்கும்.



# நமது நாட்டின் தேசியப் பறவை......

இந்தியாவுக்குத் தனிப் பெருமை தரும் பறவை மயில். அதனால் தான் அது நமது நாட்டின் தேசியப் பறவை என்ற பெருமையைப் பெற்றிருக்கிறது.

மயில், உலகத்தில் பல நாடுகளிலும் இருக்கின்றது. என்றாலும் மற்ற நாடுகளில் இருக்கும் மயிலை விட, நமது நாட்டில் உள்ள மயில்தான் கம்பீரமும், ராஜ நடையும், வண்ண மேனியும் கொண்டு விளங்குகிறது.

இந்தியாவில் பல மாநிலங்களிலும் மயில் காணப்படுகிறது. உத்தரப் பிரதேசத்தில் மதுரா மாவட்டத்தில் மயில்கள் அதிகம் காணப்படுகின்றன.

கவிஞர்கள் அழகுப் பெண்களை மயிலுக்கு ஒப்பிட்டுக் கூறுவதுண்டு. ஆனால் மயில் இனத்தில் பெண்மயிலுக்கு அவ்வளவு அழகு கிடையாது; ஆண் மயிலுக்குத் தான் அழகு அதிகம்.

ஆண் மயிலின் உடல் நீளம் 40 அங்குலம் இருக்கும். தோகை 4 அடி இருக்கும். கொண்டையில் குட்டையான சுருள் இறகுகள் உள்ளன. இறகுகள் உச்சியில் நீல ஒளியும், கீழே பச்சை நிறமும் காட்டுகின்றன. கொண்டையின் நுனி, விசிறிபோல அமைந்துள்ளது. கழுத்து, ஒளிமிகுந்த நீல நிறத்துடன் திகழ்கிறது. தோகையில் உள்ள நீண்ட இறகுகள் ஆண்மயிலுக்குப் பெருமை தருகின்றன. கருநீல வண்ணம் கொண்ட ஒவ்வொரு இறகிலும், கண் போன்ற வடிவம் காணப்படுகிறது. மயில், தோகை விரித்து ஆடும்போது ஆயிரம் கண்கள் மலர்ந்ததுபோலத் தோன்றும்.

ஆண் மயிலைப் போன்ற அழகு பெண்மயிலுக்குக் கிடையாது. இது தவிட்டு நிறம் படைத்தது. கொண்டை உண்டு; இதன் வால் குட்டை; பெண் மயில்களின் முன்னர் ஆண் மயில்கள் வண்ணத் தோகை விரித்து நடனம் ஆடுகின்றன. மழைக் காலம் வந்துவிட்டால் மயிலுக்குக் கொண்டாட்டம்தான்; அந்தச் சமயத்தில் அது, நடனம் ஆடிக் கொண்டே இருக்கிறது.

மயிலுக்கு நாணம் அதிகம்; அதைப் பழக்குவது சுலபம்; வளர்ப்பவர் அழைத்தால் அவரின் அருகே அது ஓடும்.

தானியங்கள், முளைத்தண்டுகள் பூச்சிகள், பல்லிகள் முதலியவை மயிலின் உணவுகள்; பாம்புகளைக் கூட அது தின்கிறது. மயிலைக்கண்டால் பாம்புக்கு பயம்.

மயில், அடர்ந்த புதர்களில், குறிப்பாக நதிக்கரைப் புதர்களில் வசிக்கிறது. புதர்களிடையே பெண்மயில் முட்டையிடுகிறது. சில சமயங்களில் பாழடைந்த வீட்டுக் கூரைகளிலும் முட்டை போடும். ஒரு தடவைக்கு ஏழு முட்டையிடும். முட்டைகள் தந்தம் போன்ற வெள்ளை நிறமாக, அல்லது 'கிரீம்' நிறமாக உள்ளன. முட்டையிடும் பருவம் ஜூன் முதல் ஆகஸ்ட் வரை.

மயில்கள் கூட்டம் கூட்டமாகத் திரிகின்றன. ராஜஸ்தானத்தில் நூற்றுக்கு மேற்பட்ட மயில்கள் சேர்ந்த கூட்டங்களைக் காணலாம். முற்றிலும் வெள்ளை நிறம் கொண்ட மயில்வகை ஒன்று. அஸ்ஸாம் காடுகளில் மாத்திரம் காணப்படுகிறது.

மயிலை, ஐரோப்பாவில் அறிமுகப்படுத்தியவர் மஹா அலெக்சாண்டர் என்று வரலாறு கூறுகிறது. ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் ஈரானில் வளர்க்க முயன்றனர். ஆனால் முடியவில்லை.

பாடலுக்குக் குயில் பெயர் பெற்றிருப்பது போல ஆடலுக்கு மயில் பெயர் பெற்றுள்ளது. அழகுக்கும் பெயர் பெற்றுள்ளது!





# உடும்புப் பிடி

'உடும்புப் பிடி' என்று சொல்லக் கேட்டிருக்கிறோம். அந்த உடும்பைப் பற்றிக் கொஞ்சம் தெரிந்து கொள்வோமா?

பல்லி இன வகையிலே தமிழ் நாட்டில் மிகப் பெரிய பிராணியாக விளங்குவது உடும்பு. உடும்புகள் 3 முதல் 4 அடி வரை நீளமுள்ளவை.

முதிர்ந்த உடும்புகள், கருப்புப் பள்ளி மேனிக்கு மேல் பழுப்பு நிறமுள்ளவையாக இருக்கின்றன. அபூபமாகப் மஞ்சள் நிறமாக அல்லது பல்வேறு புள்ளிகள் அமைந்ததாக உள்ளது. உடும்பின் உறுப்புகள் மிக உறுதியானவை. பாதங்கள், 'உடும்புப் பிடி' என்பதற்கேற்ப வெகு உறுதியோடு பற்றிக் கொள்ளும் தன்மை உள்ளவை. சூழ்நிலைக் கேற்ப, வண்ணம் மாறும் தன்மை உள்ளது உடும்பு.

உடும்பு, காடுகளிலும் நாட்டுப் புறங்களிலும் தென்படுகின்றது. இந்திய நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் உடும்பைக் காணலாம். இலங்கை, பர்மா, நேபாளம் ஆகியவைகளிலும் உடும்புகள் உள்ளன.

உடும்பு வேகமாக இயங்கக் கூடியது. சில சமயங்களில் தப்புவதற்காக, ஆடாமல் அசையாமல் படுத்துக் கொள்ளும். உணவுக்காக, வனங்களில் கூடாரங்கள், குடிசைகள் ஆகியவைகளில் இது துணிவுடன் நுழைந்துவிடும். தூரத்திலிருந்த நிலையில் ஆத்திர மூட்டப்பட்டால், வாலை ஆட்டிய படி சீறும் தன்மை உள்ளது. விரோதியைக் கடிக்கவும் அஞ்சாது. உடும்புப் பிடி என்பது பிரசித்தமானது. உடும்பு ஒரு பொருளைப் பற்றிக் கொண்டால் அதைப் பிடுங்குவது மிகவும் கடினம்.

புற்றிலோ, வளைகளிலோ உடும்பு முட்டையிடும். இலைகள் முதலியவற்றைப் போட்டு மூடி வைக்கும். பின்பு அப் பெண் உடும்பு அந்தப் பக்கமே திரும்பாது! ஒரு அடையில் 20-லிருந்து 25 முட்டைகள் வரை இருக்கும். உடும்பு வெயில் காலத்தில் முட்டை இடுகிறது.

உடும்பின் இறைச்சியும், முட்டையும் மிகச் சுவையானவை. உடும்பு இறைச்சி, பக்கவாதத்துக்குத் தக்க மருந்து என்று பழங்குடி மக்கள் நம்புகிறார்கள். வேட்டை நாய் அல்லது வலைப் பொறி உதவியுடன் மலைவாழ் மக்கள் உடும்பைப் பிடிக்கிறார்கள்.

எலி, பறவைகள், பறவை முட்டைகள், பூச்சிகள் போன்றவைகளைத் தின்று உடும்பு உயிர் வாழ்கிறது. பறவைகளின் கூடுகளில் உள்ள முட்டைகளைத் தின்பதற்காக, இது வெகு லாவகமாக மரம் ஏறும்.

உடும்பினால், கோழிகளுக்குப் பெருஞ் சேதம் ஏற்படுவதும் உண்டு. ஆனால், விஷப் பூச்சி, புழுக்களைக் கொல்லுவது மூலம் இது மனித குலத்துக்கு உதவுகிறது. எனவே, உடும்பு இனத்தைப் பாதுகாப்பது அவசியம்.

## "வனராஜா" வளர்ப்புப் பண்ணை!

சென்னை மிருகக் காட்சி சாலையை வண்டலூருக்கு மாற்றுவதற்கான சாத்தியக் கூறுகளை ஆராயும் ஐவர் குழு அக்டோபர் மாதக் கடைசிக்குள் அதன் அறிக்கையை தமிழக அரசிடம் சமர்ப்பிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

தண்ணீர் தட்டுப்பாடு காரணமாக வண்டலூர் தேர்ந்தெடுக்கப்படாவிட்டால், சென்னை-மகாபலிபுரம் சாலையிலுள்ள முட்டுக்காடு தேர்ந்தெடுக்கப்படலாம்.

புதிய மிருகக் காட்சிசாலை அமைக்கப்படும் இடத்தில், சிங்கங்கள் வளர்ப்புப் பண்ணையையும் நிறுவ அரசு உத்தேசித்துள்ளது.

அநேகமாக புதிய மிருகக் காட்சிசாலைக்கான அடிக்கல் நாட்டு விழாவை ஆளுநர் சுகாதியா அவர்கள் நவம்பர் 14-ந் தேதி நேரு பிறந்த நாளன்று நடத்தி வைப்பார்.



# எழுத்தறிவின்மைக்கு எதிரான போர்!

டாக்டர் எச். எஸ். எஸ்.லாரென்ஸ்
பள்ளிக்கல்வி இயக்குநர்

ஒரு நாட்டின் உயிர்நாடியே அதன் கிராமங்கள்தான். நாட்டு மக்களில் பெரும்பாலோர் கிராமங்களில் தான் வசிக்கின்றனர். ஒரு நாட்டின் முன்னேற்றத்தைக் காணவேண்டுமாயின் அந்த நாட்டு கிராமங்கள் எந்த அளவுக்கு முன்னேறி உள்ளன என ஆராய்ந்து பார்த்தால் போதும். கிராமப்புறங்களின் வளர்ச்சியில் நாட்டு வளர்ச்சியைக் காணலாம். மக்களின் மிக முக்கிய தேவையாகிய உணவு மற்றும் உடைக்குத் தேவையான விவசாயப் பொருள்கள், கிராம மக்களால் தான் உற்பத்தி செய்யப்படுகின்றன. கிராமங்கள் இல்லையேல் நாடு இல்லை. இவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்த கிராமங்களை ஒருங்கிணைந்த முறையில் முன்னேற்றமடையச் செய்வது ஒரு நாட்டின் ஆளுமையில் பங்கு கொள்ளும் ஒவ்வொருவருடைய முக்கிய பங்காகும். ஒருங்கிணைந்த முறையில் வளர்ச்சி என்பது எல்லாத் துறைகளிலும் அதாவது கல்வி, பொது சுகாதாரம், வேளாண்மை, கால்நடை மற்றும் கோழி வளர்ப்புத்துறை, மின்சாரத்துறை, கிராமக் கைத்தொழில்துறை, போக்குவரத்துத் துறை முதலிய எல்லாத் துறைகளையும் உள்ளடக்கிய மொத்த வளர்ச்சி என்பதாகும்.

இதில் கல்வித்துறையைப்பற்றி நாம் எடுத்துக்கொள்வோம். கிராமப்புறக் கல்வி வளர்ச்சி என்பது கிராமப்புற மக்களின் எழுச்சிக்கு முதல்படியாகும். கல்வி வளர்ச்சியானது மற்ற வளர்ச்சிகளைப் பெற கிராம மக்களைத் தயார் செய்து கொள்வதற்குத் தகுதியுடையவர்களாக ஆக்கும். மக்களுடைய பொது அறிவு விரிவடைய கல்வியானது ஒரு மாபெரும் சக்திவாய்ந்த படைக்கலமாகும். இவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்த கல்வி அறிவை கிராம மக்களிடையே சிறப்பான, திறமையான முறையில் பரவச் செய்வது அத்துறையில் உள்ள ஒவ்வொருவரின் முக்கிய கடமையாகும். இதில் பள்ளி வயது வந்த சிறுர்களுக்கு ஆரம்பக் கல்வியும், உயர்கல்வியும் முறையான முறையில் அளிப்பதுடன், பள்ளி நீக்கம் செய்யப்பட்டவர்களுக்கும் வேளாண்மை மற்றும் கைத்தொழில்களில் ஈடுபட்டிருக்கும் பள்ளி வயதுக்கு மேற்பட்ட இருபால் மக்களுக்கும் அளிக்கப்படும் முறைசாராக் கல்வியும் அடங்கும். இதில் முறையான கல்வியை கிராம மக்களிடையே பரப்புவதற்கு முன்னுரிமை தரப்பட்டு, ஆரம்ப, நடுநிலை மற்றும் உயர்நிலைப்பள்ளிகள் கிராமங்களில் நடத்தப்படுகின்றன.

தற்போது முறைசாராக் கல்விக்கும் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு வருகின்றது. இந்த இரண்டு முறைகளின்படியும் போதிக்கப்படும் கல்வியானது மிகச் சிறப்பாகவும், சிக்கனமான முறையிலும், குறுகிய காலத்திலும், கிராம மக்கள் யாவருக்கும் பயன்படும் முறையிலும் பரப்பப்பட வேண்டும். .ஒருநாடு போர்க் கோலத்தில் இருக்கும்போது அந்நாட்டு அரசும், மக்களும் ஒருங்கிணைந்து, சகல தியாகங்களிலும் தங்களை ஈடுபடுத்திக்கொண்டு பகையை வெல்ல முயல்வது போல், இந்நாட்டு மக்களும் குறிப்பாக கிராமப்புற மக்களும், கல்வித்துறையும் ஒருங்கிணைந்து மக்களின் எழுத்தறிவின்மைக்கு

எதிராகப் போர் தொடுக்க வேண்டும். இப்போரில் வெற்றி பெற, கல்வித்துறைக்கு உறுதுணையாக இருந்து அதன் சகல திட்டங்களையும் நிறைவேற்றுவதில் ஒத்துழைக்க வேண்டியது எல்லா மக்களின் கடமையுமாகும். யாருக்காகத் திட்டங்கள் தீட்டப்படுகின்றனவோ அவர்கள் அத் திட்டங்களில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டார்களானால், அத்திட்டங்கள் வெற்றிகரமாக நிறைவேற முடியும்.

தமிழ்நாட்டில் உள்ள மக்கள் இத்துறையில் சிறப்பான முறையில் கல்வித்துறையுடன் ஒத்துழைத்து நல்ல முன்னேற்றம் கண்டுள்ளனர். பள்ளிகளில் பயிலும் வசதி குறைந்த சிறார்களுக்கு அரசு இலவச மதிய உணவுத் திட்டத்தை நிறைவேற்றி வருவதுடன், இம்மதிய உணவுத் திட்டத்தின் கீழ் பயன் பெறும் ஒன்று முதல் மூன்று வகுப்பு வரை பயிலும் சிறார்களுக்கு இலவச சிலேட்டு மற்றும் பாடப் புத்தகங்கள் வழங்கி வருகின்றது. இவ்வாண்டில் மக்கள் உதவியால் 2,800 உயர்நிலைப் பள்ளிகளிலும் 2,800 தொடக்க நடுநிலைப் பள்ளிகளிலும் புத்தக வங்கிகள் ஏழை மாணவர்களுக்காகத் தொடங்கப்பட்டுள்ளன. மேலும், பின்தங்கிய மற்றும் அரிசன வகுப்பைச் சார்ந்த வசதி குறைந்த பிள்ளைகளுக்குப் படிப்புதவி நிதியும் அளிக்கப்படுகிறது. முன்கூறிய எல்லாச் சலுகைகளையும் பெற்று அவற்றை நல்ல முறையில் பயன்படுத்திக் கொண்டு அம்மாணவர்கள் நல்ல முன்னேற்றமடைந்து வருகின்றனர். இது சம்பந்தமாகப் பெற்றோர் தனிக்கவனம் செலுத்தி அக்கறையுடன் தங்களின் பிள்ளைகளின் முன்னேற்றத்தைக் கண்காணிக்க வேண்டும்.

அரசும் தன் பங்கிற்கு, எங்கெல்லாம் பள்ளிகள் தேவையோ அங்கெல்லாம் உடனடியாகப் பள்ளிகள் திறந்திருக்கிறது. **தமிழ்நாட்டில் ஆரம்பக்கல்வியைப் பொறுத்த மட்டில் கல்வி வசதி அற்ற கிராமங்களே இல்லையென்று சொல்லலாம்.** இவை தவிர நடுநிலைப் பள்ளிகளையும், உயர்நிலைப் பள்ளிகளையும் தேவையான இடங்களிலெல்லாம் அரசு திறந்து வந்திருக்கிறது. இப்படித் திறக்கப்பட்ட பள்ளிகள், அவை உள்ள இடங்களில் பள்ளி வயது வந்த எல்லாப் பிள்ளைகளும் அவைகளில் சேர, பள்ளி ஆசிரியர்களும், பெற்றோர்களும், கல்வித்துறையும் சேர்ந்து பெருமுயற்சி செய்து பெருமளவு வெற்றியும் பெற்றுள்ளது. குறிப்பாக நடப்பு ஆண்டில் கிராமப்புற மற்றும் நகர்ப்புற ஆரம்ப, நடுநிலை மற்றும் உயர்நிலைகளில் குறிப்பிட்ட இலக்கிற்கு மேலாகவே, பள்ளி வயது வந்த சிறார் சேர்க்கப்பட்டுள்ளனர். இது உண்மையிலேயே ஒரு பெரும் சாதனையாகும். எழுத்தறிவின்மைக்கு எதிராக நாம் தொடுத்த போரில் நாம் கண்டுள்ள முதல் வெற்றியின் அறிகுறியே இது என்பது மிகையாகாது. கிராமப்புற மக்களின் விழிப்புணர்ச்சிக்கு இது மற்றுமோர் எடுத்துக்காட்டு. கல்வி அறிவின் அவசியத்தை நன்குணர்ந்த இக்கால கிராமப்புற மக்கள் தங்களின் பிள்ளைகள் பள்ளி வயதிலேயே கல்வி கற்க வேண்டும் என்ற ஆர்வத்துடன் அவர்கள் செய்யும் எல்லாவித முயற்சிகளின் முதல் எடுத்துக்காட்டே இது. கல்வித் துறையுடன் ஒத்துழைக்க முன்வந்திருக்கும் கிராம மக்கள், தங்களின் பிள்ளைகள் தொடர்ந்து முழுக் கல்வியறிவு பெற எல்லாவிதமான நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும். மாணவர் பள்ளி வகுப்புகளில் தேக்கமடையாமலும் பள்ளியிலிருந்து பெயர் நீக்கம் ஆகாமலும் கல்வி பயின்று பள்ளியை விட்டுவெளியேற ஆசிரியர்களுடன் பெற்றோர் ஒத்துழைக்க வேண்டும்.

அரசும், கல்வித்துறையும் சேர்ந்து தேர்ந்தெடுத்த கல்வித் திட்டத்தை நிறைவேற்றி வைக்க பள்ளிக்கட்டிடங்கள், நூல்கள் மற்றும் கல்வித்துணைப் பொருட்கள் அரசாங்கத்தினால் இலவசமாக வழங்கப்படுகின்றன. திருத்தியமைக்கப்பட்ட பாடத் திட்டங்களின்படி ஆங்கிலம், அறிவியல் மற்றும் புதுமுறைக் கணிதம் போதிப்பதற்கு அந்தந்தத் துறை ஆசிரியர்களுக்கு உள்ளிடைப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுகின்றன. கிராமப்புற ஆரம்ப மற்றும் நடுநிலைப் பள்ளிகளுக்கும், 'ஐ. நா. சர்வதேச குழந்தைகள் நலநிதி ஸ்தாபனத்தாரால் (யுனிசெஃப்) வழங்கப்பட்ட அறிவியல் போதனைக்குத் தேவையான அறிவியல் போதன உபகரணப் பெட்டகங்கள் வழங்கப்படுகின்றன. தமிழ்நாட்டில் இதுவரையில் 2,000 ஆரம்பப் பள்ளிகளுக்கும் 2,130 நடுநிலைப் பள்ளிகளுக்கும்



இத்தகைய ஆய்வுக்கூட பெட்டகங்கள் வழங்கப்பட்டுள்ளன. இவற்றில் கணிசமான அளவு கிராமப்புறப் பள்ளிகளுக்கே வழங்கப்பட்டன.

புதுமுறைக் கணிதம் மற்றும் உயர்நிலைப் பாடத்திட்ட அறிவியல் போதனு ஆசிரியர்களுக்குத் தனித்தனியே உள்ளிடைப் பயிற்சிகள் சிறப்பான முறையில் அளிக்கப்பட்டு வருகின்றன. தமிழ்நாட்டில் இப்பயிற்சித் திட்டத்தை நிறைவேற்றி வைக்க 'யுனிசெஃப்' ஸ்தாபனமும், தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனமும் அரசுடன் ஒத்துழைத்துச் சிறந்த முன்னேற்றம் கண்டுள்ளன. இவை தவிர உயர்நிலைப் பள்ளிகளில் பணியாற்றும் பட்டதாரி ஆசிரியர்கள் சேவா மனப்பான்மையுடன் இலவச உள்ளிடைப் பயிற்சி வகுப்புகளும் நடத்தி வருகின்றனர். இத்திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டிலுள்ள ஆரம்ப, நடுநிலை மற்றும் உயர்நிலைப் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்கள் பயன்பெற்றுள்ளனர். பள்ளி இடவசதியை எடுத்துக்கொண்டோமானுல் அரசாங்கத்தினுல் நடத்தப்படும் பள்ளிகளின் கட்டிடங்கள் தேவைக்கேற்ப ஆண்டுதோறும் புதுப்பித்தலோடு புதுக் கட்டிடங்களும் கட்டித் தரப்பட்டு வருகின்றன. தனியார் பள்ளிகளின் கட்டிடம் கட்டுவதற்கு, அங்கீகரித்த திட்டத்தின் கீழ் மானியங்களும் வழங்கப்படுகின்றன. பள்ளி விளையாடுமிடங்கள் வாங்குவதற்கும் அரசு தாராள சிந்தனையுடன் மானியம் வழங்கி வருகின்றது.

பள்ளி நூல் நிலையங்களைப் பற்றி எடுத்துக் கொள்வோமானுல் ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையுள்ள ஆரம்ப மற்றும் நடுநிலைப் பள்ளிகளுக்கு ஆண்டுதோறும் கணிசமான தொகைக்கு அரசு நூல்களை நேரடியாக வாங்கி வழங்கி வருகின்றது. இதைப் போலவே ஆண்டுதோறும் நூறு அரசுயர் பள்ளிகளுக்கு ஒவ்வொன்றுக்கும் ரூபாய் ஆயிரத்திற்குக் குறையாமல் நூல்கள் நேராக வாங்கி வினியோகிக்கப்படுகின்றன.

மக்கள் உதவியால்எல்லா பள்ளிகளிலும் வானுெலிப் பெட்டிகள் அமைக்கும் திட்டமும் வெற்றி பெற்று வருகின்றது. இத்திட்டங்கள் கிராமப்புற பள்ளிகளுக்கு மிகுந்த பயனுள்ளதாக இருக்கின்றன.

நாம் இதுவரை முறையான கல்வியைப் பற்றிப் பார்த்தோம். இனி முறைசாராக் கல்வியைப் பற்றிப் பார்ப்போம்.

கிராமப் புறங்களில் அறியாமையின் காரணமாகவோ, வசதிக் குறைவின் காரணமாகவோ பள்ளியை விட்டு நின்றுவிட்ட, வயது சற்று அதிகரித்த ஆண், பெண் இருபாலருக்கும் இம்முறைசாராக் கல்வியின் மூலம் கல்வி புகட்டத் திட்டமிடப்பட்டு அத்திட்டம் நிறைவேற்றவும் படுகின்றது. கிராமப் புறங்களுக்கு ஏற்ற வகையில் இது,

(1) ''முதியோர் கல்வி''
(2) 'உழவர் செயல்முறை எழுத்தறிவுத் திட்டம்'

(3) 'எழுத்தறியாமையைப் போக்கும் திறன் பணித்திட்டம்' மற்றும்

(4) 'முறைசாராக் கல்வி'

எனத் தனி வகைகளாகப் பிரிக்கப்பட்டு மாலை நேரங்களில் நடத்தப்பட்டு வருகின்றது.

இதில் முதலாவதாகக் கூறப்பட்ட முதியோர் கல்வித்திட்டத்தின் கீழ் 8 முதல் 18 வயது முடிய உள்ள ஆண், பெண் இருபாலருக்கும் பொதுக் கல்வி புகட்டப்படுகிறது. தமிழ்நாட்டில் மொத்தம் 10 இடங்களில் இவை செயல்பட்டு வருகின்றன. எழுதப் படிக்கவும், செய்தித்தாள்களைப் படித்துப் பொது அறிவை அபிவிருத்தி செய்து கொள்ளவும், சுலபமான கணக்குகளைச் செய்து கொள்ளவும், நடைமுறை அறிவியல் அறிவு பெறவும் இதில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டுள்ள மாணவர்களைத் தயார் செய்கிறது.

இரண்டாவதாகக் கூறப்பட்ட உழவர் செயல்முறை எழுத்தறிவு திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் கிராமப்புறங்களில் (செங்கற்பட்டு, தென்னுர்க்காடு, வடார்க்காடு, தஞ்சை, திருச்சி, கோவை, திருநெல்வேலி மற்றும் மதுரை மாவட்டங்கள்) 630 கிராமப்புற மையங்கள் செயல்பட்டு வருகின்றன. ஒவ்வொரு மையத்திலும் 15 முதல் 25 வயதுள்ள இருபாலரும் 30 [illegible] படிக்க வசதி உள்ளது. ஒரு வருடம் வரையில போதிக்கப்படும் இக்கல்வித் திட்டத்தில் முதல் ஆறு மாதங்களுக்குச் செயல்முறை எழுத்தறிவுத் திட்டமும், அடுத்த ஆறு மாதங்களுக்கு உழவர் தொடர் கல்வித் திட்டமும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. முதல் ஆறு மாதத்தில் நன்ருக எழுதப்படிக்க, கணக்கு வைத்துக்கொள்ளத் தேர்ச்சி பெறுகின்றனர். அடுத்த ஆறு மாதங்களில் நடைமுறை வேளாண்மை, கோழிவளர்த்தல், ஆடு, மாடு மற்றும் தேனீ வளர்த்தல் முதலியவற்றில் நவீன முறைகளைப் பற்றித் தெரிந்து கொள்கின்றனர். அரசு வேளாண்மைத் துறை மற்றும் கால்நடைப் பராமரிப்புத் துறை இரண்டும் இதில் ஈடுபட்டுள்ள ஆசிரியர்களுக்குத் துணை நிற்கின்றன. இத்திட்டத்தின் கீழ் கல்வி பெறுகின்றவர்களுக்குத் தேவையான நோட்டுப் புத்தகங்களும், பென்சில்களும் இலவசமாக வழங்கப்பட்டு ஊக்குவிக்கப்படுகின்றனர்.

மூன்ருவதாகக் கூறப்பட்ட எழுத்தறியாமையைப் போக்கும் திறன் பணித்திட்டத்தின் கீழ் சேலம் மாவட்டத்தில் ஆயிரம் மையங்கள் தொடங்கப்பட்டு நடந்து வருகின்றன. 15 வயதுக்கு மேற்பட்ட இருபாலரும் இதில் சேர்ந்து பயன்பெறுகின்றனர். இதிலும் மாணவ, மாணவியருக்கு நோட்டுப் புத்தகங்கள், சிலேட்டு, மற்றும் பென்சில்கள் இலவசமாக அளிக்கப்படுகின்றன ஒவ்வொரு மையத்திலும் 30 மாணவர் சேர்க்கப்பட்டு உள்ளனர். இத்திட்டம் ஓராண்டுக்காலத்திற்கு நடைபெற்று வருகின்றது.

நான்காவதாகக் கூறப்பட்ட முறைசாராக் கல்வித் திட்டம் 15 முதல் 25 வயது வந்த கல்வியறிவற்ற மற்றும் நடுவிலேயே கல்வி கற்றலை நிறுத்திவிட்ட இருபாலருக்கும் பயன்தரும் திட்டமாகும். இத்திட்டம் கோவை மற்றும் திருச்சி மாவட்டங்கள் ஒவ்வொன்றிலும் நூறு மையங்களில் செயல்படுத்தப்படுகின்றது. இதில் திருச்சி மாவட்டத்தில் இயங்கும் திட்டத்திற்கு மத்திய அரசும், கோவை மாவட்டத்தில் இயங்கும் திட்டத்திற்கு மாநில அரசும் நிதி வசதி அளித்து வருகின்றன. இத்திட்டத்திலும் ஒரு மையத்திற்கு 30 மாணவர் வீதம் சேர்க்கப்படுகின்றனர். மாணவருக்கு வேண்டிய நோட்டுப் புத்தகங்கள். புத்தகங்கள் மற்றும் பென்சில்கள் இலவசமாக அளிக்கப்பட்டு ஊக்குவிக்கப்படுகின்றனர்.

நாம் இதுவரை தமிழ்நாட்டில் கிராமங்களில் எழுத்தறிவின்மையைப் போக்கத் தொடுத்த போரைப் பற்றித் தெரிந்து கொண்டோம். இப்போரில் நாம் பெரும் வெற்றி பெற வேண்டுமாயின், போர்க்காலத்தில் எந்தெந்த தீவிர முயற்சிகள் ஒன்ருக இணைந்து செய்ய வேண்டுமோ, அவற்றைப் போலவே, இதிலும் நாம் ஒருங்கிணைந்து செயல்புரிந்து அறியாமையை வெல்வோமாக!



# குறைந்த செலவில் வீடுகள்!

வீட்டு மனையற்ற ஆயிரக்கணக்கான குடும்பங்களுக்கு வீட்டு மனை விநியோகிக்கும் பணி, குறைந்த செலவில் வீடுகள் அமைப்பதற்கான வசதிகளை அளிக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியுள்ளது. நாட்டில் கட்டுமானப் பொருள்களில் வேறுபாடு காணப்படுவதால், கட்டடங்களின் வடிவமைப்பும் பல்வேறு விதமாக உள்ளது. மத்தியக் கட்டட ஆராய்ச்சிக் கழகம் கட்டுமானத் தொழில்நுட்ப முறைகளை வகுத்து, அந்த முறைகளை அமலுக்குக் கொண்டு வருவதற்கான தக்க கட்டுமானப் பொருட்களை வடிவமைத்து உருவாக்கியுள்ளது. அக்கழகத்தின் சில குறிப்பிடத்தக்க பணிகள் வருமாறு :

## 1. மண்சுவரிலிருந்து நீர்க்கசிவு ஏற்படாமல் இருக்க வழி

கிராமங்களில் மண் சுவரினால் வீடு கட்டுவது இன்னமும் கடைப்பிடிக்கப்படுகிறது. மழைக் காலத்தின்போது, மண் சுவர்களினால் கட்டப்பட்ட பல வீடுகள் நீர்க்கசிவு காரணமாக இடிந்து விடுகின்றன. இதனால் ஒவ்வொரு ஆண்டும் பெரிய அளவு பழுது பார்க்கும் பணி மேற்கொள்ள வேண்டியிருக்கிறது. 'பிடுமன்' கரைசலை இந்தச் சுவர்களின் மீது தெளிப்பதன் மூலம், நீர்க்கசிவைத் தடுக்க முடியும் என்பதை மத்தியக் கட்டட ஆராய்ச்சிக் கழகம் கண்டுபிடித்துள்ளது. இதற்காகும் செலவும் குறைவுதான். 50 லிட்டர் மண்ணெண்ணெயில் 25 கிலோ கிராம் பிடுமன் கரைசல் தயாரிக்கப்பட்டு, பின்னர் ஆறவைக்கப்பட்டு வடிகட்டப்படுகிறது. கிராமப் பஞ்சாயத்திடம் கிடைக்கக்கூடிய தெளிப்பானைக் கொண்டு. இந்தக் கரைசல் சுவர்மீது தெளிக்கப்படுகிறது. 4 மணி நேர இடைவேளையில் இரண்டு முறை இந்தக் கரைசலைத் தெளிக்க வேண்டும். இந்தக் கரைசல் தெளிக்கப்பட்ட சுவர்கள் பழுப்பு நிறத்தில் காட்சியளிக்கும். ஒரு கிலோ கிராம் சுண்ணாம்பில், 75 கிராம் பிசினைச் சேர்த்து வெள்ளையடித்து விட வேண்டும். பல கிராமங்களில் மண் வீடுகளின் வெளிச் சுவர்கள் மீது இந்தப் பிடுமன் கரைசல் தெளிக்கப்பட்டது. பெருமழை பெய்தபோது கூட அந்த வீடுகளின் சுவர்களிலிருந்து நீர்க்கசிவு ஏற்படவில்லை. இந்தப் பிடுமன் கரைசல் தெளிக்கப்பட்ட சுவர்களில் 4 லிருந்து 5 ஆண்டுக் காலத்திற்கு நீர்க்கசிவு ஏற்படுவதில்லை. ஒரு சதுர மீட்டர் சுவருக்கு இந்தக் கரைசலைத் தெளித்து, வெள்ளையடிக்க சுமார் ரூபாய் 1.50 தான் செலவாகிறது.

## 2. வீட்டுக் கூரை தீப்பிடிக்காமல் இருக்க வழி

கிராமங்களின் பல்வேறு வீடுகளின் கூரைகள், வைக்கோலினாலோ அல்லது பனை ஓலைகளினாலோ அல்லது தென்னை ஓலைகளாலோ தான் வேயப்பட்டுள்ளன. கூரைகளுக்கு மூங்கில் கழிகள் பயன்படுத்தப்படுகின்றன. கோடைக் காலத்தில், இந்தக் கூரைகள் தீப்பற்றிக் கொள்கின்றன. தீ கிராமம் முழுவதும் எளிதில் பரவி விடுகின்றது. கால்நடை, மனிதர்கள் ஆகியோரின் உயிருக்கு ஆபத்து நேரிடுகிறது. மேலும் சொத்து இழப்பும் ஏற்படுகிறது. கூரை வேயப் பயன்படுத்தப்படும் பொருட்கள் எளிதில் தீப்பிடிக்காமல் இருக்கவும், தீ விபத்து நேரிடாமல் இருக்கவும் இக்கழகம், எளிய சிறந்த சுலபமான முறையொன்றை உருவாக்கியுள்ளது.

கூரை வேயப்படும் எல்லாப் பொருட்களும் 'டை அமோனியம் ப்ாஸ்ஃபேட்' (99.5 சதவிகிதம்), 'சோடியம் ஃப்ளோரைடு' (0.05 சதவிகிதம்) ஆகியவை கலந்த 14 சதவிகிதக் கரைசலில் முதலில் 10 முதல் 12 மணி நேரம் ஊற வேண்டும். பின்னர் அவற்றைக் காய வைக்க வேண்டும். பின்னர் அப்பொருட்களைக் கொண்டு கூரை வேய வேண்டும். தீப்பிடிக்காமல் இருப்பதற்கும், தண்ணீர் ஈர்க்காமல் இருப்பதற்குமான பெயின்டை அக்கூரையின் வெளிப்புறத்தில் பூச வேண்டும். இதனால் அக்கூரையில் நீர் ஒழுக்கு ஏற்படாது. மேலும் அதிக நாட்களுக்கு நீடித்து இருக்கும். முதலில் இரசாயனப் பொருட்களைக் கரைசலில்

ஊற வைத்து, பின்னர் பெயின்ட் பூசுவதற்கு, ஒரு சதுர மீட்டருக்கு ரூ. 5.50 தான் செலவாகிறது. இரசாயனப் பொருட்கள் கலவையில் ஊற வைத்து பின்னர், பெயின்ட் பூசுவதற்கு கூடுதல் செலவு ஆன போதிலும் கூரைகளின் ஆயுட் காலம் அதிகரிக்கிறது.



### 3. சிமென்ட் எஃகு இல்லாமல் வீடு கட்ட முடியும்

சிமென்ட், எஃகுப் பொருட்கள், மற்ற அரிய பொருட்களின் உபயோகத்தைக் குறைத்துக் கொண்டோ, அல்லது அவை இல்லாமலேயோ வீடு கட்டுவதற்கான தொழில் நுட்ப முறைகள் கண்டுபிடிக்கப்பட்டு வருகின்றன. உள்ளூர் வளங்களையும் தொழில் திறமைகளையும் கொண்டு சிறந்த வீடுகளை அமைப்பதற்கான ஒரு முயற்சிதான் 'சர்வதோகிருஹத்' திட்டம்.

இத்திட்டத்தின் முக்கிய அம்சங்களாவன:

1. இந்தியாவில் பெரும்பாலும் எல்லாக் கிராமங்களிலும் எளிதில் கிடைக்கக் கூடிய செங்கற்கள், மண், மூங்கில் ஆகியவற்றைக் கொண்டு இந்த முறையில் வீடுகளைக் கட்டலாம்.

2. இத்தகைய வீடுகளைக் கட்டுவது மிகவும் சுலபம். ஆகையால் கட்டடத் தொழிலில் தொழில் தேர்ச்சி பெற்றவர்கள் அவசியம் இல்லை.

கூடுகளைக் கட்டுவது போன்ற முறை இந்த வீடுகளைக் கட்டும் விஷயத்தில் கடைப்பிடிக்கப்படுகிறது.

### 4. தானியக் களஞ்சியம்

மத்தியக் கட்டட ஆராய்ச்சிக் கழகம் வீட்டு உபயோகத்திற்காக, ஒரு டன் முதல் 3 டன் கொள்ளளவு கொண்ட தானியக் களஞ்சியத்தைக் கட்டும் புதிய பணியிலும் தீவிரமாக ஈடுபட்டு வருகிறது. நிலத்தடியிலும், தரைக்கு மேலும் காங்கிரீட், செங்கற்கள் ஆகியவற்றினால் ஆன தானியக் களஞ்சியங்களை வடிவமைத்து உருவாக்கியுள்ளது. மண், மூங்கில், மரம் அறுக்கும் ஆலைகளிலிருந்து கிடைக்கும் மரத்தூள் போன்ற உள்ளூரில் கிடைக்கும் பொருட்களையும், சிமென்ட், செங்கல், பிடுமன், பூச்சிமருந்து ஆகியவற்றையும் பயன்படுத்தி 1 டன்கொள்ளளவுகொண்ட தானியக் களஞ்சியத்தை இக்கழகம் அண்மையில் வடிவமைத்துக் கட்டியுள்ளது. எலி, பூச்சி, ஈரப்பதம் ஆகியவற்றினால் இக்களஞ்சியம் பாதிக்கப்படாமல் இருக்க, சில தடுப்பு நடவடிக்கைகளும்மேற்கொள்ளப்பட்டுள்ளன. சூரிய வெப்பத்தால் உலர்த்தி வைக்கப்பட்ட செங்கற்களும், மண்ணும் பயன்படுத்தப்படுவதோடு, மூங்கில் கழிகளினால்அந்தக் களஞ்சியத்தின் உட்புறச் சுவர் வலுவாக்கப்படுகிறது. எளிதில் கரைந்து விடாத விதத்தில் உட்புறச் சுவரில் மண் பூசப்படுகிறது. இந்தத் தானியக் களஞ்சியத்தை அமைக்க 275 ரூபாய்க்கு மேல் செலவாகாது. இருந்தாலும் ஒருவர் தாமாகவே இதை அமைத்துக் கொள்வதாக இருந்தால் செலவு இன்னமும் குறையும். மண், மூங்கில் ஆகியவை இலவசமாகக் கிடைக்க



ஏற்பாடு செய்து சுயமுயற்சியில் ஈடுபட்டால், ஒருவர் சுமார் 90 ரூபாய்க்குள் தானியக் களஞ்சியத்தை ஏற்படுத்தி விடலாம்.

இந்தத் தானியக் களஞ்சியம் நம்பகமானதுதானா என்பது குறித்து ஆய்வு நடத்தப்பட்டது. ஹாப்பூரிலுள்ள இந்திய தானிய சேமிப்பு ஆராய்ச்சி மற்றும் பயிற்சிக் கழகம் இத்தகைய தானியக் களஞ்சியத்தில் நீர்க் கசிவு, காற்று புகாத் தன்மை ஆகியவை பற்றி தற்போது பரிசோதித்து வருகின்றது.

### 5. அரிசி தவிடையும், கழிவுச் சுண்ணாம்பையும் பயன்படுத்தி சுண்ணாம்புக் கலவை தயாரிக்கும் முறை

அரிசித் தவிடு, கழிவுச் சுண்ணாம்பு ஆகியவற்றைக் கொண்டு கட்டடப் பூச்சுக்கான சுண்ணாம்புக் கலவை தயாரிப்பதற்கான இரு முறைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. முதல் முறைப்படி தண்ணீரைக் கொண்டு அரிசித் தவிடும் சுண்ணாம்பும் சிறு உருண்டைகளாக்கப் பட்டு வெய்யிலில் காய வைக்கப்பட வேண்டும். செங்கற்சூளையில் பின்னர் அந்த உருண்டைகள் வைக்கப்பட்டு சுடப்பட வேண்டும். பின்னர் அவை தூளாக்கப்பட வேண்டும். அத்தூளை சுண்ணாம்புடனோ அல்லது சுண்ணாம்பு, மணலுடனோ சேர்க்கப்பட்டு சுண்ணாம்புக் கலவையைத் தயாரிக்கலாம்.

இரண்டாவது முறைப்படி நெல் உமியும், சர்க்கரை ஆலை, காகித ஆலை, தோல் தொழிற்சாலை, அஸிடிலின் வாயு மற்றும் இரசாயன உரத் தொழிற்சாலைகளிலிருந்து வெளியாகும் கழிவுச் சுண்ணாம்பும், தண்ணீரைக் கொண்டு சேர்க்கப்பட்டு உருண்டைகளாக்கப்பட வேண்டும். பின்னர் வெய்யிலில் உலர்த்தப் பட்டுக் கடைசியில் தூளாக்கப்பட வேண்டும். இதைப் பின்னர் சுண்ணாம்புடன் கலந்து

சுண்ணாம்புக் கலவையாக மாற்றி, கட்டடம் கட்டப் பயன்படுத்தலாம்.

இவ்விரு முறைகளிலும் அதிக எரி பொருள் தேவைப்படுவதில்லை. ஏனெனில் தேவைப்படும் வெப்பத்தை அரிசித் தவிடு அளித்து விடுகிறது. நவீன சாதனமோ அல்லது யந்திரமோ அல்லது தொழில் நுட்ப முறையோ தேவையில்லை. முன்னோடி அடிப் படையில் கட்டப்பட்ட வீடுகள் விஷயத்தில் பல டன்னுக்கு இந்தப் பொருட்கள் பயன் படுத்தப்பட்டுள்ளன. அதிக அளவுக்கு இந்தச் சுண்ணாம்புக் கலவையைத் தயாரிப்பதற்கான சாத்தியக் கூறு பற்றி தற்போது ஆய்வு நடத் தப்பட்டு வருகிறது.

## 6. தேவைப்படாத தென்னை நாரைக்கொண்டு கூரைப் பலகைகள்

கட்டடங்களுக்கான கூரைப் பொருட்கள் தேவை அதிகரித்து வருவதைக் கருத்தில் கொண்டு, இக்கழகம் தென்னை நாரைக் கொண்டு கூரைப் பலகையைத் தயாரிக்கும் முறையைக் கண்டு பிடித்துள்ளது. முதலில் உலோகத் தண்ணீரில் இரண்டு மணி நேரத் திற்கு தென்னை நார் ஊற வைக்கப்படுகிறது. பின்னர் ஊறிய நாரிலிருந்து நீர் இறக்கப்படு கிறது. உலர்ந்த சிமென்டுடன் கலக்கப்படு கிறது. மோல்டில் இந்தக் கலவை போடப் படுகிறது. பின்னர் அழுத்தப்பட்டு அதே அழுத்தத்தில் 4 முதல் 8 மணி நேரம் வைத் திருக்கப்புடுகிறது. பின்னர் அந்தப் பலகை எடுக்கப்பட்டு உலர வைக்கப்படுகிறது.

இந்த முறையில் கூரைப் பலகை தயா ரிக்க கனரக யந்திரமோ அதிக மூலதனமோ தேவையில்லை. இந்தப் பலகைக்கு மேற்பூச்சு கொடுத்தவுடன் மிகவும் நன்றாகக் காட்சி யளிக்கிறது. மேலும் இத்தகைய பலகைகள், அதிக அளவுக்கு வெப்பத்தைத் தாங்கும் சக்தி உடையதாக உள்ளன.

## 7. வட இந்தியாவில் மங்களூர் ஓடு உற் பத்திக்கு வழி

தென்னிந்தியக் களிமண் கொண்டு மங்க ளூர் ஓடுகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. இது நாள்வரை வட இந்தியாவில் வண்டல் மண் கொண்டு இத்தகைய ஓடுகளைத் தயாரிக்க முடியாமல் இருந்தது. மத்தியக் கட்டட ஆராய்ச்சிக் கழக ஆய்வுக் கூடத்திலும் தொழிற்சாலையிலும் மேற்கொண்ட ஆய்வுகளி லிருந்து வட இந்தியாவில் தேர்ந்தெடுத்த வண்டல் மண்ணிலிருந்து இத்தகைய கூரை ஓடுகளையும், தரை அமைப்புக்கான செங்கற் களையும் தயாரிக்க முடியும் என்பது தெரிய வந்துள்ளது. இந்த வண்டல் மண் களிமண் ணுடன் கலக்கப்பட்டு பின்னர் கையினால் இயக்கக் கூடிய கருவி மூலம் மங்களூர் ஓடுகள் உருவாக்கப்பட்டு, செங்கற் சூளையில் அதி வெப்பத்தில் சுடப்படுகிறது. இந்தியத் தரத் திற்கு ஏற்றவையாக அவை உள்ளன. அவை எளிதில் உடைவதில்லை.

ஆய்வு அடிப்படையில் இந்த ஓடுகள் தயாரிக்கும் முயற்சியில் இக்கழகம் ஈடுபட்டு உள்ளது. உள்ளூர் வண்டல் மண் கொண்டு 1,500க்கும் அதிகமான ஓடுகள் தயாரிக்கப் பட்டன. பள்ளிகளிலும், பொருட்காட்சிகளி லும் அவை வைக்கப்பட்டன.

## சோளப் பயிரில் சில புதிய கண்டுபிடிப்புகள்



தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில், சோளப் பயிரில் மேற்கொள் ளப்பட்ட பல்வேறு சோதனை களில் கண்டறியப்பட்டதில் சில இங்கு கொடுக்கப் பட்டுள்ளன.

மானாவாரிச் சோளத்திற்கு ஏற்ற இடைவெளி 45×12 செ. மீ. என்று அறியப் பட்டது. இறவைச் சோளத் தில் ஊடுபயிர் சாகுபடி செய்தால் மிகுந்த இலாபம் அடையலாம். சோளத்தை இணை வரிசைகளாக 60×30 செ. மீ. இடைவெளியில் விதைத்து, இவற்றிற்கு நடுவில் உளுந்து அல்லது அவரையை இரண்டு வரிசை களாக நட்டால் எக்டருக்கு சுமார் 6500 ரூபாய் நிகர வருமானம் கிடைக்கிறது.

சோளத்துடன் கோ. 8. அவரை இரகத்தைப் பயிரிட்டபொழுது தானியத் தில் உள்ள புரதச்சத்தின் அளவு தனிப்பயிராகப் பயிரிட்ட பொழுது இருந் ததைவிட அதிகமாக இருந்தது.

வெளியீடு :

—தகவல் தொடர்பு நிலையம்,
தமிழ்நாடு வேளாண்மைப்
பல்கலைக் கழகம்,
கோவை—3.



# பகத் சிங்

அடிமைப்பட்டுக்கிடந்த பாரத நாட்டை, உரிமை பெறச் செய்ய தம் உடல், பொருள், ஆவி, அனைத்தையும் தியாகம் செய்த வீரர்கள் பல்லாயிரக்கணக்கானோர்! அவர்கள் செய்த தியாகத்தின் விளைவே இன்று நாம் பெருமையுடன் வாழும் சுதந்திர பாரதம்

அத்தகைய சிறந்த தியாகிகள் வரிசையிலே ஒருவர் சர்தார் பகத்சிங்! பஞ்சாப் நாட்டு இளைஞன்! தன் உயிரைத் தியாகம் செய்த செம்மல்!

பஞ்சாப் மாநிலத்தில் லாயல்பூர் மாவட்டத்தில் புகழ் பெற்ற சிக்கிய வமிசத்திலே தோன்றியவர் (1907) பகத் சிங்! அவர் குடும்பமே தியாகக் குடும்பம்! லாகூரில் உள்ள ஆங்கிலப் பள்ளியில் ஆரம்பக் கல்வியும், பின்னர் கல்லூரிக் கல்வியும் பெற்றார். இளமையிலேயே அவர் நெஞ்சில் நாட்டுப் பற்று அரும்பியது!

காந்தி அடிகள் வகுத்த அற வழிப்பாதையிலிருந்து வீறு கொண்ட இளைஞர்கள், நாட்டுரிமை என்ற இலட்சியத்தை அடைய வேறு வழிகளைக் காண ஆரம்பித்தனர். புரட்சிகள் மூலம் இலக்கை அடைய எண்ணினர். பற்பல புரட்சி இயக்கங்களைத் தோற்றுவித்தனர் .பஞ்சாபில் ஒரு பெரும் இளைஞர் அணியை உருவாக்கி, அந்நியன் ஆதிக்கத்தை ஒழிக்க, பல சதித் திட்டங்களைத் தீட்டினர் பகத்சிங். மாற்றுப் பெயர்கள் வைத்துக் கொண்டனர். வெள்ளையர் ஆட்சிக்குப் பல தொல்லைகளைக் கொடுத்தனர்.

1926-ல் லக்னோ அருகில் ககோரி என்னுமிடத்தில் ஓடும் ரயிலை நிறுத்தி சர்க்கார் கஜானாவைக் கொள்ளையிட்டனர் இப் புரட்சியாளர்கள்! ஆங்கிலேயர் இப்புரட்சியாளர்களைக் கண்டு பிடிக்கப் பெரு முயற்சிகள் செய்ய வேண்டியிருந்தது.

பகத்சிங் வங்காளம், பீஹார் போன்ற பகுதிகளில் இருந்த புரட்சியாளர்களுடன் தொடர்பு கொண்டார். அவர்கள் ஒரு வலிவான அமைப்பை ஏற்படுத்திக் கொண்டனர்.

1928-ஆம் ஆண்டு 30-ஆம் நாள்! சைமன் கமிஷன் என்ற குழு லாகூருக்கு வந்தது. காந்திஅடிகள் அக்கமிஷனை பகிஷ்கரிக்குமாறு வேண்டுகோள் விடுத்திருந்தார். லாலா லஜபதிராய் தலைமையில் சென்ற ஊர்வலம், போலீசாரால் தடிகொண்டு தாக்கப்பட்டது. லஜபதிராய் கடுமையாகத்தாக்கப்பட்டார். அதன் விளைவாக அவர் இறக்க நேர்ந்தது.

லாலாஜி இறந்ததை இளைஞர்களால் தாங்கிக் கொள்ள இயலவில்லை. அவரைக்கண் மூடித்தனமாகத் தாக்கிய போலீஸ் சூப்பிரண்டு லாண்டர்லை, கொந்தளித்த இளைஞர் நெஞ்சங்கள் 'பழிக்குப் பழி' வாங்க முடிவெடுத்தன. பகத்சிங்கும் அவரது தோழர்களும் சதித் திட்டம் தீட்டினர்.

1928-டிசம்பர் 17-ஆம் தேதி லாகூர் போலீஸ் ஸ்டேஷனுக்கு நேர் எதிரில் லாண்டர்ஸ் கொலை செய்யப்பட்டார். கொலைகாரர்கள் தப்பிவிட்டார்கள். எல்லா சாலைகளும் கடுமையாக காவல் காக்கப்பட்டன. இளைஞர்களையெல்லாம் சோதனை செய்தனர்.

பகத்சிங் ஒரு சர்க்கார் அதிகாரி போல் மாற்றுடை அணிந்தார். அவர் நண்பர் அவருக்கு 'பியூன்' ஆனார். இருவரும் இரயில் நிலையம் சென்று முதல் வகுப்புப் பெட்டியில் ஏறித் தப்பினர். எந்த போலீஸ்காரரும் அவர்களைச் சந்தேகிக்கவில்லை.

பகத்சிங்கை, கைது செய்ய நாடெங்கும் விசேட போலீஸ் அதிகாரிகள் நியமிக்கப்பட்டனர். பகத்சிங், வேறு வேறு மாற்றுடைகளில் பல இடங்களுக்குச் சென்று கொண்டிருந்தார். வங்கப் புரட்சியாளர்களைச் சந்தித்து, வெடி குண்டு தயாரிக்கும் முயற்சியில் ஈடுபட்டார். அடுத்த பெரும் நிகழ்ச்சிக்குத் திட்டம் தீட்டிக் கொண்டிருந்தார் பகத்சிங்!

1929-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 7-ஆம் நாள்! டில்லியில் நடந்த நிகழ்ச்சி நாட்டையே உலுக்கியது. டில்லி அசெம்பிளியில் வெடிகுண்டுகள் வீசப்பட்டன. அறை முழுவதும் ஒரே புகை! ரகளை! ஆங்கிலேயர்களின் சவக்குரல்!

வெடிகுண்டு வீசிய இரு இளைஞர்கள் ஓடவும் இல்லை, தப்ப முயலவுமில்லை. ரிவால்வார்கள் வைத்திருந்த அவர்கள் யாரையும் சுடவில்லை. சர்தார் பகத்சிங்கும், அவரது நண்பருமே அவர்கள்! தாங்கள் கைதுசெய்யப்படுவதை அவர்கள் விரும்பினார்கள்! 'புரட்சி வாழ்க, ஆங்கில ஏகாதிபத்தியம் ஒழிக!' என்று முழக்கமிட்டனர். அவர்கள் இருவரும் கைது செய்யப்பட்டனர்.

அசெம்பிளி வெடிகுண்டு வழக்கு, லாகூர் கொலைவழக்கு ஆகிய வழக்குகளில் பகத்சிங் குற்றஞ்சாட்டப்பட்டார். சிறையில் அடைக்கப்பட்டார்.

சிறைச்சாலை பற்றிக் கவலைப் படாதவர் பகத்சிங். எப்பொழுதும் மகிழ்ச்சியுடன் ஏதாவது பாடிக் கொண்டே இருப்பாராம். பிற கைதிகளுக்குச் சுவையான நிகழ்ச்சிகள் பலவற்றைக் கூறுவாராம். சிறையிலேயும் கைதிகளின் சில வசதிகளுக்காகப் போராடினார். உண்ணா விரதம் மேற்கொண்

டார். இதனல் சிறைச்சாலை களில் சில வசதிகளைச் செய்ய அரசாங்கம் ஒப்புக் கொண்டது.

கோர்ட்டில் கைதிகளை ஆஜர்ப் படுத்துவதே பெருந்தொல்லை யாய் அமைந்தது போலீஸ்காரர் களுக்கு! அங்கு அழைத்து வரப் பட்டபோதெல்லாம் கோர்ட்டி லேயே 'புரட்சி ஓங்குக' ஏகாதி பத்தியம் ஒழிக!' என முழங்குவார் பகத்சிங்!

லாகூர் சதி வழக்குத் திட்டம் நாட்டின் கவனத்தைப் பெற்றது. அயல்நாடுகளிலும் அதுபற்றி அறிந்தனர். கோர்ட் நடவடிக் கைகளை பகத்சிங்கும் அவரது தோழர்களும் பகிஷ்கரித்தனர். விசாரணையின் பொழுது கோர்ட் டுக்கு வர மறுத்தனர்.

கைதிகள் விசாரணையின்றியே தீர்ப்பு வழங்கப்பட்டது. நீதி மன்றம் பகத்சிங் அவரது நண்பர் களான சுகதேவ், சிவராம் ஆகிய மூவருக்கும் தூக்கு தண்டனை வழங்கியது. அவர்களைப் பார்க்க உறவினர் கூட அனுமதிக்கப்பட வில்லை.

*1931*-ஆம் ஆண்டு மார்ச்சு *24* ஆம் நாள் பகத்சிங்கும் அவரு டைய இரு தோழர்களும் தூக்கி லிடப்பட்ட செய்தியைத் தாங்கி வந்தன காலைப் பத்திரிகைகள்.

மரணத்தின் போதும் பகத் சிங் தன் மன உறுதியையும், அஞ் சாமையையும் வெளிப்படுத்தினர். தூக்கிலிடப்படும் காட்சியைக் காண வந்த ஆங்கில மாஜிஸ்டி ரேட்டிடம் பகத்சிங் புன்னகை யுடன் கூறினர். ''மாஜிஸ்டி ரேட் அவர்களே நீங்கள் பெரிய அதிருஷ்டசாலி! ஒரு இந்தியப் புரட்சிக்காரன் தன் மகத்தான கொள்கைக்காகச் சிரித்தவாறே சாவைத் தழுவிக் கொள்வதை நேரில் காணும் வாய்ப்பு உங் களுக்குக் கிடைத்துள்ளது.''

''பகத்சிங்கும் அவருடைய நண்பர்களும் அமரத் தியாகிகள் ஆகிவிட்டார்கள். நான் அந்த இளம் தேசபக்தர்களைப் போற்று கிறேன்' என்றூர் காந்தி அடிகள்.

பகத்சிங் போன்ற இளைஞர் களின் தியாகமும், இணையற்ற துணிச்சலும், நமக்கு வேண்டும். ஆனல் புரட்சி வழிவிட்டு, காந்தி அடிகளின் அறவழியில் நின்று நம் நாட்டை எழில் மிகு பாரத நாடாக ஆக்குவோமாக.

(நன்றி: சென்னை வானெலி நிலையம்)



# காசு போட்டால் பால் கிடைக்கும்!

**பா**ல் வாங்கக் காலையும், மாலையும் கால்கடுக்கக் காத் திருக்கும் மக்களுக்கு ஒரு மகிழ்ச்சியான செய்தி!

இனி அவர்கள் 'கியூ'வில் நிற்க வேண்டியதில்லை. காசு போட்டதும் பால் கொடுக்கும் நவீன இயந்திரங்கள் சென்னை நகரில் இன்னும் 3 மாதங் களில் செயல்படவிருக்கின் றன.

இந்த இயந்திரங்களை தேசிய பால்வள நிறுவனம் தயாரித்துள்ளது. தமிழ்நாடு பால்வள நிறுவனத்தின் சார் பில், இவை, சென்னை நகரில் மொத்தம் 25 இடங்களில் நிறுவப்பட்டு வருகிறது.

ஏற்கெனவே சென்னையில் 3 இடங்களில் பரீட்சார்த்த மாக நிறுவப்பட்டுள்ள இந்த இயந்திரங்கள் திருப்திகரமான முறையில் செயல்பட்டு வரு கின்றன.

ஒரு இயந்திரத்தில் மட்டும் குளுமைப்படுத்தப்பட்ட 1000 லிட்டர் பால் கொள்ளத்தக்க அளவில் பெரிய கண்ணடி தொட்டி உள்ளது.

ஏற்கெனவே பாலுக்காகக் காசு கொடுத்து வாங்கிய ''டோக்கனை'' இயந்திரத்தில் உள்ள துவாரத்தில் போட வேண்டும். உடனே கண் ணடிக் குழாயில் இருந்து தேவையான அளவு பால் கொட்டும். அதைப் பாத்திரத் தில் பிடித்துக் கொள்ள வேண்டும்.



இப்படி பால் விநியோகிப்ப தால், பால் செலவு இல்லை. எனவே பாலின் விலையும் மலிவாக இருக்கும்.

''பாலிதீன்'' பைகளில் அடைத்து விநியோகிக்கப் பட்டு வரும் பால் பிரபலமாகி வருவதுடன் அதற்கு கிராக்கி யும் அதிகரித்துள்ளது.

எனவே, தினமும் இப்படி விற்கப்படும் 60 ஆயிரம் பாலை இரட்டிப்பாக்க (1 இலட் சத்து, 20 ஆயிரம் லிட்டர்) உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்காக இந்த ஆண்டு இறுதிக்குள் மேலும் 2 இயந் திரங்கள் வரவழைக்கப்படும்.

சாதாரண பாலைவிட பை களில் விற்கப்படும் பால் லிட்டருக்கு 10 காசு அதிகம். கைகளில் எடுத்துச் செல்ல அடக்கமாகவும் கலப்படம் இல்லாமலும் கிடைப்பதால் இதனை மக்கள் அதிகமாக விரும்புகிறூர்கள்.

பதப்படுத்திய பால் விற்ப னையை செங்கற்பட்டு, வட ஆர்க்காடு, மதுரை மாவட்டங் களில் விரிவுபடுத்தவும் திட்ட மிடப்பட்டிருக்கிறது. சென்னை, மதுரை நகரங்களில் மொத்தம் 2 இலட்சத்து 50 ஆயிரம் லிட்டர் பதப்படுத்திய பால் தற்போது விநியோகிக்கப்படு கிறது.

# ஏழை எளியவர்களின் கடன் சுமை தீர்ந்தது!




1976-ஆம் ஆண்டின் தமிழ்நாடு கடன் நிவாரணச் சட்டத்தின்படி, ஆண்டு குடும்ப வருமானம் ரூபாய் 2,400-க்கு மேற்படாத கிராம மக்கள் பட்ட கடன்கள் ரத்து செய்யப்பட்டுள்ளன.

வெளியீடு : செய்தி-மக்கள் தொடர்புத்துறை,
தமிழ்நாடு அரசு.



# இளைய தலைமுறையினருக்கு இனியவாழ்வு பிறந்தது!

* அறிவைப் பெருக்கிக் கொள்ள அனைத்துப் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் புத்தக வங்கிகள்!

* எல்லா மாணவர்களுக்கும் குறைந்த விலையில் நோட்டுப் புத்தகங்கள்!

* அரிசன, ஆதிவாசி, பிற்பட்ட, விமுக்த சாதி மாணவர்களுக்கு இலவசப் புத்தகங்கள் நோட்டுப் புத்தகங்கள், சிலேட்டுகள்!

இதனால் பயன்பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை :

1. அரிசன, ஆதிவாசி மாணவர்கள் - 1,45,520
2. பிற்பட்ட விமுக்த பரம்பரை மாணவர்கள் 30,339

* மாணவர் விடுதியில் தங்கிப் படிப்போர்க்குக் குறைந்த விலையில் உணவுப் பொருட்கள்!

இதனால் பயன்பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை :

1. அரிசன, ஆதிவாசி மாணவர்கள் - 41,296
2. பிற்பட்ட விமுக்த பரம்பரை மாணவர்கள் - 17,246

* மாதாந்திரச் சாப்பாட்டுச் செலவில் குறைவு!

* எல்லாப் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் கூட்டுறவுப் பண்டக சாலைகள்!

* இப்படி இருபது அம்சத் திட்டத்தால் ஏற்பட்டுள்ள நன்மைகள் ஏராளம்! ஏராளம்

**கல்வியைக் கண்ணெனக் கருதிக் கடமையைச் செய்வீர்!**

DIPR

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.

முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600002.


தமிழரசு இலவச இணைப்பு
1—11—76
ஒளிமயமான
எதிர்காலம்
உருவாகிட...
TV

# தமிழ்நாட்டில் பிரதமரின் பேருரைகள்

வெளியீடு :

இயக்குநர்,

செய்தி—மக்கள் தொடர்புத்துறை,

தமிழ்நாடு அரசு.

# பதிப்புரை

இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்கள் 1976 செப்டம்பர் 14, 15 இரு நாட்களிலும் தமிழ்நாட்டில் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் சுற்றுப்பயணம் செய்து, வறட்சி நிவாரணப் பணிகளையும் பார்வையிட்டார்கள்.

பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்கள் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு ஆற்றிய பேருரைகளின் தொகுப்பே "ஒளிமயமான எதிர்காலம் உருவாகிட" என்னும் இந்நூல் !

'தமிழரசு' இதழுடன் இந்நூல் இலவச இணைப்பாக வழங்கப் பெறுகிறது.

இயக்குநர்,
செய்தி-மக்கள் தொடர்புத்துறை,
தமிழ்நாடு அரசு.

# நாகர்கோவில் பொதுக்கூட்டத்தில்

**வணக்கம்!**

சகோதர சகோதரிகளே!

மிகவும் துயரமான சமயத்தில் தமிழ்நாட்டின் இந்தப் பகுதி தீவிரமான வறட்சியினால் பாதிக்கப்பட்டிருக்கும் வேளையில், நான் வந்திருக்கிறேன். என்னுடைய முந்திய திட்டப்படி மேலும் பல இடங்களைச் சுற்றிப் பார்க்கவும், வறட்சி நிவாரணப் பணிகள் சில வற்றைப் பார்வையிடவும் எண்ணியிருந்தேன். ஆனால், மழையின் காரணமாக அதுவும் வரவேற்க வேண்டிய மழைதான்—எனவே நான் அது குறித்து மகிழ்ச்சி அடைகிறேன்.—எனது நிகழ்ச்சிகளில் மாற்றம் செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. தற்போது நான் அதிக இடங்களைப் பார்க்கப் போவதில்லை. ஆனால் நான் ஏராளமான மக்களைப் பார்ப்பேன். அதிகாரிகளிடமும் மற்றவர்களிடமும், என்ன வேலை நடைபெறுகிறது என்று கேட்டறிவேன்.

வறட்சியின் சவாலை எதிர்த்து மக்கள் சமாளிப்பதற்கு ஏற்றதாக, திட்டங்களைத் தொடர்ந்து மேற்கொள்ள நாம் முயற்சி செய்கிறோம். துரதிருஷ்டவசமாக கடந்த ஆண்டுகள், பொருளாதார நெருக்கடி மிக்க ஆண்டுகளாகயிருந்துவிட்டன. அதன் காரணமாக ஏற்றுக்கொள்ளப்பட்ட பல திட்டங்கள், அனுமதிக்கப் பட்ட திட்டங்கள் பணப் பற்றுக்குறையின் காரணமாக விரைவாக நிறைவேற்ற முடியாமல் போய்விட்டன.

## விவசாயத்திற்கு அடிப்படை :

நீர்ப்பாசனத்திற்கும் மின்சாரத்திற்கும் நாம் அதிக முக்கியத் துவம் தருகிறோம்; ஏனெனில் விவசாய மேம்பாட்டிற்கு அவை அஸ்திவாரமாகும். வறட்சியால் பாதிக்க ஏதுவாகக் கூடிய இந்த மாவட்டங்களுக்கு உதவக் கூடிய வகையில் என்ன திட்டங்களை வகுக்கலாமென நாம் பார்க்க வேண்டும். அதே நேரத்தில், குறைந்த அளவு தண்ணீரைக் கொண்டும், உப்பு நீராக இருந்தால் கூட அவற்றைக் கொண்டு என்ன செய்யலாம் என்பது குறித்து ஆராய்ச்சி நடத்தி வருகிறோம். படிப்படியாக நாம் முன்னேறிக் கொண்டிருக்கிறோம். சமீபத்தில் ரிசர்வ் பாங்கும், அதற்கு முன்ன

தாக உலக பாங்கும், தொழிலிலும், உற்பத்தியிலும், கடந்த ஆண்டு கூட, நாம் பெரும் முன்னேற்றம் அடைந்திருப்பது பற்றி அறிக்கைகள் வெளியிட்டதை நீங்கள் செய்தித் தாள்களில் பார்த்திருப்பீர்கள். ஆனால் பணவீக்கத்தினால் நாம் பெற்ற அனுபவம் காரணமாக, நாம் கவனமாக இருக்க வேண்டும். அத்துடன் மீண்டும் அந்தத் தீமை நம்மிடம் வரவிடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். பணவீக்கம் என்றால், எல்லாப் பொருள்களின் விலையும் ஏறும் என்று பொருள்; நமது பணத்திற்குக் குறைந்த அளவே வாங்க முடியும். எனவே உங்களுக்கு எவ்வளவு கிடைத்தாலும் அதற்கு அதிக மதிப்பு கிடையாது.

## ஜனநாயகத்தின் பெயரால்......

நாம் இவ்வாறு மிகவும் சிரமமான பொருளாதார நெருக்கடியில் இருக்கும்போது, அதுவும் அனைத்துலக பொருளாதார நிதி நிலைமை நெருக்கடியினால் அதிக அளவு பாதிக்கப்பட்டபோது, இந்தியாவிலுள்ள சில மக்கள் இந்தச் சூழ்நிலையைப் பயன்படுத்தி அரசியல் குழப்பங்களை உருவாக்கலாம் என்று எண்ணினார்கள். ஜனநாயகத்தின் பெயரால் ஜனநாயகத்தை அழிக்க எல்லாவற்றையும் செய்தார்கள். ஜனநாயக முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டசபைகளைக் கலைக்க முயன்றனர் ; உறுப்பினர்கள் தங்களது பதவியை ராஜினமா செய்யத் தூண்டிவிடப்பட்டனர்; சில எதிர்க்கட்சிகள், இந்த சண்டையைத் தெருவுக்குக் கொண்டு வருவோம் என்று சொன்னார்கள். உண்மையிலேயே இதைத்தான் அவர்கள் செய்தார்கள்.

## வதந்தி, பொய்ப் பிரசாரம்......

ஆனால், அவர்கள் இதை விட மிக மிக மோசமான பிரச்சாரத்தில் ஈடுபட்டார்கள். வதந்திகளை பரப்புதல், தவறான செய்திகளைப் பரப்புதல், பொய்ப் பிரச்சாரம், இவை எல்லாவற்றிலும் மோசமான பீதி, ஏமாற்றம், நம்பிக்கையிழந்த அவலநிலை ஆகியவற்றை மக்களிடத்தே பரப்புதல் ஆகியவற்றில் ஈடுபட்டார்கள். மக்களுக்குத் தன்னம்பிக்கையில்லாவிட்டால் தங்களுக்கு எதிர்காலம் இல்லை என்று நம்பிக்கை ஏற்பட்டு விட்டால், எந்த தனி மனிதனும், எந்தப் பிரிவினரும், எந்த நாடும் முன்னேறிச் செல்ல முடியாது.

திட்டங்களை நிறைவேற்றும்போது, மக்களின் உடனடித் தேவை என்ன என்பதை நாம் கவனிக்க வேண்டியதுள்ளது. ஆனால், நெடுங்காலத் தேவைகளையும் பார்க்க வேண்டியுள்ளது. மக்களை இலகுவில் திருப்தி செய்யக்கூடிய சிறிய செயல்களைச் செய்துவிட்டு வெகு சுலபமாக மக்களின் பாராட்டுக்களை நாம் பெற முடியும். ஆனால் வருங்காலத்திற்கான பலமான அஸ்தி

வாரத்தை எழுப்ப அவை உதவாவிட்டால், அது மக்களைச் சரியான வழியில் முன்னேற்றிச் செல்லாவிட்டால், அது சரியான திட்டமல்ல.

### காந்திஜியின் ஆயுதம் என்ன ?

காங்கிரஸ் கட்சிதான் இந்தியாவுக்கு சுதந்தரம் வாங்கித் தந்த கட்சி என்பது உங்களுக்குத் தெரியும். நம்மிடம் என்ன ஆயுதங்கள் இருந்தன? நம்மிடம் பணம் இல்லை, நம்மிடம் இராணுவ தளவாடங்கள் இல்லை, நமக்கு வருவாய்க்கு வழியில்லை. அத்துடன் மக்கள் அழுத்தப்பட்டு, பயப்பட்டு, மிகவும் ஏழ்மை நிலையிலிருந்தனர். ஆனால் இதிலிருந்து மகாத்மா காந்தி உலகத்திலே மிகப் பெரிய எதிர்க்கக் கூடிய ஒரு படையை உருவாக்கினார். ஒற்றுமை, ஒழுங்கு, தன்னம்பிக்கை இவைதான் அவரது ஆயுதம். மக்கள் மாபெருந் தியாகங்களுக்கும் துன்பங்களுக்கும் தங்களை அர்ப்பணிக்கத் தயாராக இருந்ததால்தான் நாம் சுதந்திரத்தை அடைய முடிந்தது. எல்லா மக்களுக்கும் உண்மையான சுதந்திரம் கிடைக்க, சுதந்தரத்தின் கனிகளை எல்லா மக்களும் பெறுவதற்காக நாம் ஒரே பாதை வழியாக நடக்கிறோம். இது சரியான முன்னேற்றத்தின் மூலம்தான் கிட்டும்; போராட்டங்களினால் அல்ல; மொழியின் பெயராலோ, அல்லது மதம் அல்லது சாதி அல்லது வேறு சில பிராந்திய உணர்வுகள், மாநில சுயாட்சி பெயராலோ மக்களது கவனத்தைத் திருப்புவதால் அல்ல. இவை எல்லாம் வெற்றுக் கோஷங்கள். மக்களை பலமுள்ளவர்களாக்க மேற்கொண்டுள்ள பணியிலிருந்து அவர்களின் வேகத்தைத் திருப்புவதற்காக ஏற்படுத்தும் கோஷங்களாகும்.

நாமோ, அல்லது வேறு யாரோ ஏழ்மையை அடியோடு நீக்கிவிட முடியாது. நாம் என்ன செய்ய முடியுமென்றால், மக்கள் ஏழ்மையைச் சமாளிக்கவும், படிப்படியாக அவர்களாக வெற்றி பெறவும் அவர்களுக்கு உதவக் கூடிய நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும். அவர்கள், நல்ல சுகாதாரம், நல்ல கல்வி, நல்ல விவசாயக் கருவிகள், ஆகியவை பெறவும் அதன் மூலம் இந்த வழிகளில் அவர்கள் பலமுள்ளவர்களாகவும், மெல்ல மெல்ல உயர்ந்த வாழ்க்கைத் தரத்தை அடையவும் செய்ய முடியும். நாம் நல்ல வாய்ப்புக்களை ஏற்படுத்த முடியும். மக்கள்தான் அந்தச் சந்தர்ப்பங்களைப் புரிந்துகொண்டு, அதனைப் பயன்படுத்த வேண்டும்.

### நிருவாகத்தில் சிறந்த நாடு

துரதிருஷ்டவசமாக நமது நாட்டில், தமிழ்நாட்டில் பல குறுகிய மனப்பான்மையுள்ள சக்திகள் உள்ளன. அவைகளுக்கு நாட்டை வலுப்படுத்துவதிலும், இந்தியாவுக்கு ஒளி மயமான எதிர்காலம் உருவாக்குவதிலும் அக்கறை கிடையாது. இந்தியா

அல்லது தமிழ்நாடு அதன் மக்களின் சிந்தனை குறுகிய பாதையில் வழிப்படுத்தப்பட்டால், பொருளாதாரத்திலோ அல்லது வேறு எந்த வழியிலோ முன்னேறவே முடியாது.

நாடு முழுவதும் பலமுடையதாகவும் ஒற்றுமையுடையதாக வும் ஒன்றாக பணியாற்றுவதாகவும் இருந்தால்தான் ஒவ்வொரு அங்கமும், ஒவ்வொரு மாநிலமும், முறைப்படி உதவ முடியும் ; அதுவும் முன்னேற முடியும். முன்பு காங்கிரஸ் அரசாங்கம் இருந்தபோது, திரு. காமராஜ் அவர்கள் முதலமைச்சராாகயிருந்த போது, நாடு முழுவதிலும் தமிழ்நாடுதான் நிருவாகத்தில் சிறந்த நாடு என்பதாகக் கருதப்பட்டது.

ஆனால் அதற்குப் பின்னால், புகழ் கிடைக்க வேண்டுமென்ப தற்காக எப்படியாவது பதவியிலிருக்க வேண்டுமென்ற நாட்டத் தில் நிருவாகம் புறக்கணிக்கப்பட்டது. சில ஏழைகள் உதவி செய்யப்பட்டார்கள். சில பிரிவினர் உதவி செய்யப்பட்டார்கள் என்பது உண்மைதான். ஆனால் மொத்தமாகப் பார்க்கும்போது நிருவாகம் கீழ்நோக்கிச் சென்றது. அதன் காரணமாக தமிழ் நாடே முன்னேற முடியவில்லை. எல்லா மாநிலங்களையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது—என்னிடம் தற்போது புள்ளி விவரங்களில்லை. முன்பு ஒரு முறை சென்னைக்கு வந்த போது நான் எல்லாப் புள்ளி விவரங்களையும் தந்திருந்தேன்—அவற்றை ஒப்பிட்டுப் பார்க்கும் போது, மற்ற மாநிலங்களின் முன்னேற்றத்தைவிடத் தமிழ்நாடு எவ்வளவு பின்தங்கியிருந்தது என்பது தெரியும்.

தற்போது கூட வறட்சியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு எல்லோரும் உதவ வேண்டிய நேரத்தில், சிலர் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி மத்திய அரசு, போதுமான அளவு செய்யவில்லை என்று குற்றம் சாட்டுகிறார்கள். மத்திய அரசு தன்னால் முடிந்த அளவு உதவிடும். ஒருவேளை உங்களுக்கு நினைவிருக்கலாம், சில ஆண்டுகளுக்கு முன்னால் நீங்கள் வறட்சியால் பாதிக்கப்பட்ட போது, உத்திரப் பிரதேசம், பீஹார் போன்ற வறட்சியால் பாதிக்கப்பட்ட மாநிலங்களை விட தமிழ்நாட்டுக்கு அதிக அளவில் உதவி செய்ததாக பாராளுமன்றத்தில் என் மீது குற்றம் சாட் டப்பட்டது.

## எல்லோரும் சமம்

எனவே, என்னால் உங்களுக்கு உறுதியாகச் சொல்ல முடியும், மத்தியிலுள்ள எங்களுக்கு, எல்லா மாநிலங்களும் எங்களது குழந் தைகள் மாதிரி, எல்லோரும் சமம். எங்களிடம் உள்ள எல்லாம் மாநிலங்களுக்குச் சொந்தம். ஏனெனில் இந்தியா என்பது என்ன? இந்தியா என்பது மாநிலங்கள் சேர்ந்த ஒன்று. எல்லோரும் முன்னேறினால், மக்களுடைய துன்பங்கள் நீக்கப்பட்டால், இந் தியாவும் வளமுடையதாக முடியும். வறட்சி நிவாரணப் பணி

போதுமானதாக இல்லா விட்டால் நாம் எல்லோரும் நம்மாலானதைச் செய்து அதனை அதிகப்படுத்த வேண்டும். செய்யப்படும் பணி எவ்வாறு செய்யப்பட வேண்டுமோ அவ்வாறு செய்யப்படாவிட்டால், அதனை எவ்வாறு சீர்படுத்த வேண்டுமோ அதனைச் செய்வது ஒவ்வொரு குடிமகனின் கடமையாகும். ஏழ்மையிலுள்ளவர்களுக்கு உதவ வேண்டியது நல்ல நிலையிலுள்ளவர்களின் கடமையாகும்.

சென்ற ஆண்டு ஏற்பட்ட கணிசமான முன்னேற்றத்தை, வளர்ச்சியைப் பற்றி நான் சற்று முன்னால் குறிப்பிட்டேன். அது எவ்வாறு நடைபெற்றது? அது நடந்தது எவ்வாறெனில், நடைபெற்ற போராட்டங்களும், துவக்கப்பட்ட பலாத்கார இயக்கங்களும் நாட்டுக்குத் தீமை பயக்கத் தக்கவை என்பதை மக்கள் உணர்ந்தார்கள். அவை நமது உற்பத்தியைக் குறைக்க மட்டும் செய்யவில்லை; பல தொழிற்சாலைகளை மூட வேண்டியதாயிற்று. அவை விவசாயிகளுக்கு, தொழிலாளர்களுக்கு, இல்லத்தரசிகளுக்கு, மாணவர்களுக்கு, உண்மையில், எல்லாத் தரப்பு மக்களுக்கும் தீங்கிழைத்தன.

## புத்துணர்வு பிறந்தது....

எனவே இவ்வாறு நடைபெறுவதை தடுப்பதற்கான சூழ்நிலை உருவானதும், பொறுப்பு மிக்க புத்துணர்வு உருவாயிற்று, அப்பணியில் பங்கேற்கும் உணர்வு மக்களிடம் உண்டாயிற்று.

இதுதான் தமிழ் நாட்டுக்குத் தேவை. இப்பணிகளை மக்களே பொறுப்பேற்று நடத்த வேண்டும். வேறு யாராவது செய்து தருவார்களென்று பிறரை எதிர்பார்க்கக் கூடாது. இதுதான் உண்மையான சுதந்தரம். உண்மையான ஜனநாயகம். அதாவது மக்களே தங்களது திட்டங்களை முடிவு செய்து நிறைவேற்றுவதில் பங்கேற்பது. பொறுப்பு உணர்வோடு செயலாற்றுபவர்களுக்கு எப்போதும் உதவி வந்து சேரும், அப்பணியைச் செய்ய உதவிடவும் செய்யும்.

இன்றைக்கு, நமது மாநிலங்களிடம் வேளாண்மை சம்பந்தப்பட்ட அதிகாரங்கள் அனைத்தும் உள்ளன; நீர்ப்பாசனம் அவர்களிடம் உள்ளது; கல்வி பற்றிய அனைத்தும் உள்ளது; சுகாதாரம் பற்றிய அனைத்தும் உள்ளது. மக்களின் அன்றாட வாழ்க்கையைத் தொடுகின்ற எதுவுமே மத்திய அரசிடம் இல்லை. அது எங்கள் அதிகாரத்தில் இல்லை. அது மாநில அரசாங்கத்தின் அதிகாரத்தின் கீழ் உள்ளது. ஆனால் பொது அதிகாரத்தின் கீழ் ஏதாவது கொண்டு வர நினைத்தால் மாநிலங்கள் அதனை எதிர்க்கின்றன. பொது அதிகாரம் என்று கூறும்போது, மாநிலங்களின் அதிகாரங்களை நாங்கள் எடுத்துக் கொள்வதாக அர்த்தமில்லை. ஆனால் எங்களுக்கும் அது குறித்து ஏதாவது கூற உரிமை இருக்கிறது என்பதுதான் அர்த்தம்.

இன்றைக்குத் தண்ணீர்ப் பிரச்சினை தேசியப் பிரச்சினையாக இருந்தால், தண்ணீர்ப் பிரச்சினை பொது அதிகாரத்தின் கீழ் இருந்தால், வறட்சியால் பாதிக்கப்பட்ட தமிழ்நாட்டு மாவட்டங்களுக்கு இன்னும் சிறந்த முறையில் நம்மால் உதவிட முடியும்.

அதே போன்று கல்வியிலும், அந்தந்த வட்டாரங்களின் கோரிக்கைகளைப் பூர்த்தி செய்வதற்காக எல்லா விதமான கல்லூரிகளும் தோன்றுவதையும் அதிலிருந்து வெளிவரும் பட்டதாரிகள் வேலை கிடைக்காமலிருப்பதையும் நாம் பார்க்கிறோம். இதற்காக தேசிய மட்டத்தில் கொள்கையிருந்தால், எதனைக் கற்றுக் கொடுப்பது, எவ்வாறு இந்த இளைஞர்களுக்கு வேலை தருவது, எங்கே அவர்களுக்கு வேலை தருவது என்பதெல்லாம் இன்னும் சிறப்பான முறையில் உறுதி செய்யப்படும்.

பெரிய நாட்டினைச் சேர்ந்தவர்களாக இருப்பதன் பெரிய அனுகூலம் என்னவெனில், நெடுங்கால ஏழ்மையின் காரணமாகவும் பொருளாதாரப் பிற்போக்குகளினாலும், தற்சமயம் நாம் பலமில்லாதவர்களாகயிருப்பினும், நாம் பலமுடைய நாடாக வளர வளர, மக்களுக்குக் கிடைக்கும் வாய்ப்புக்கள், சிறிய நாடு அல்லது சிறிய பகுதியை விடப் பலமடங்கு அதிகமாயிருக்கும். எனவே தான், பல்வேறு பகுதியிலுள்ள எல்லா மக்களுக்கும் உதவிடும் வகையில் நமக்கு வருவாய்களுக்கான வழி வகைகளை ஏற்படுத்தவும், போதுமான பலமுள்ளவர்களாகவும் முயன்று வருகிறோம்.

## அரசியல் சாசனம்

நமது அரசியல் சாசனத்தில் சில மாறுதல்கள் செய்ய விரும்புகிறோம் என்று சமீபத்தில் அறிவித்திருந்தோம். அரசியல் சாசனம் திருத்தப்பட்டிருப்பது தற்போது அல்ல, அரசியல் சாசனம் ஏற்றுக் கொள்ளப்பட்டவுடனேயே திருத்தப்பட்டது. திருத்தங்கள், ஒன்றல்ல, இரண்டல்ல, பல திருத்தங்கள், நான் பிரதமர் ஆவதற்கு நீண்ட காலத்திற்கு முன்பே செய்யப்பட்டன. ஏனெனில், வருங்காலத் தேவைகள் எவ்வாறு இருக்குமென்று யாரும் முன்னதாகவே கண்டு கொள்வது இயலாது. அது மட்டுமல்ல, ஒரு சாசனத்தில் எல்லாவற்றையும் சேர்த்து விடலாம் என்று யாரும் எண்ணிப் பார்க்க முடியாது. அரசியல் சாசனத்தை உருவாக்கியவர்கள், பின்னால் அதனைத் தவறாகப் பயன்படுத்தப் போகிறார்கள் என்பதையோ, தவறாகப் பொருள் கூறப் போகிறார்கள் என்பதனையோ முன்னதாக எண்ணிப் பார்த்திருக்க முடியாது.

இருப்பினும் அரசியல் சாசனத்தைத் திருத்த வேண்டுமென்று பெரிதாகக் கோஷம் எழுப்பியது காங்கிரஸ் கட்சி அல்ல. எதிர்க் கட்சிகள்தான் இந்தக் கோரிக்கையை விடுத்தார்கள்; மாற்றங்கள் ஏற்படுத்த குழு அமைக்க வேண்டுமென்றும், அது நமது தேர்தல் முறையையே மாற்றி அமைப்பது குறித்து பரிசீலிக்க வேண்டுமென்றும் அவர்கள் கோரினார்கள்.

நாம் விரும்புவதெல்லாம் அரசியல் சாசனத்தின் பின்னணியில் உள்ள உண்மையான நோக்கத்தினை உறுதிசெய்வது, எல்லா மக்களுக்கும்—செல்வாக்குள்ள சில மக்களுக்கு மட்டுமல்ல — எல்லா மக்களுக்கும் உண்மையான சுதந்தரம் கிடைக்கப் பெறத் தேவையான ஆர்வம் உள்ளுணர்வு என்றும் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதுதான். அத்துடன் முக்கியமாக சேர்க்கப்பட வேண்டியது என்னவென்றால் மக்களின் பொறுப்புகளும், கடமைகளும் ஆகும். கடமையும் உதவும் பண்பும் இல்லாமல் சலுகையும் உரிமையும் இருக்க முடியாது என்பதனை மகாத்மா காந்தி நமக்கு அடிக்கடி சொல்லித் தந்துள்ளார். மக்கள் தங்களுக்காகச் செயலாற்ற வேண்டும், சுயசார்புடையவர்களாக இருக்க வேண்டுமென்று நான் சொல்லும்போது, அவர்களுக்கு தங்கள் நல்வாழ்வுக்கான பொறுப்புணர்ச்சியிருக்க வேண்டுமென்பதுடன் மட்டுமின்றி, தங்களுக்கு அருகிலுள்ளவர்கள், சுற்றுப்புற சமுதாயம், நாடு முழுவதற்கும் அவர்கள் செயலாற்ற வேண்டிய கடமைகள் உண்டு என்ற பொறுப்புணர்ச்சி வேண்டும். இந்தப் பொறுப்புணர்ச்சி வந்துவிடும்போது, எது தவறு என்பதை அவர்கள் குறிப்பிட முடியும், தவற்றினைச் சரி செய்ய முடியும். சமுதாயத்தில் தாழ்ந்த நிலையிலுள்ளவர்களுக்கு உதவ வேண்டுமென்று நாம் கண்டிப்பாக விரும்புகிறோம். ஏனெனில், இந்தியா முழுவதும் தாழ்ந்த நிலையிலிருந்தபோது, அதை விடவும் இழிந்த நிலையிலும் சில பகுதியினர் இருந்தார்கள். துரதிருஷ்டவசமாக, அவர்களுக்காகப் பல திட்டங்கள் துவக்கப்பட்டாலும், இன்னும் அதிக அளவில் செய்ய வேண்டியது உள்ளது. அவர்கள் மேலான நிலைக்கு உயர்த்தப்பட வேண்டும். அவர்களுக்கு உதவும் முயற்சிகளில், அவர்களை உயர்த்தாமல், மற்றவர்களை கீழே இழுப்போமானால், நாடு முழுவதுமே கீழே போய்விடும். நம்மால் உலகின் பிற பகுதிகளுடன் போட்டியிட முடியாது.

## புகழ்மிக்க தமிழ்நாடு

தமிழ்நாடு உயர்ந்த தரத்திற்கு பெயர் பெற்று வந்திருக்கிறது. அந்தப் புகழை தமிழ்நாட்டிற்காக மட்டுமல்ல, அனைத்து இந்தியாவிற்காகவும் நிலைநிறுத்த வேண்டும். ஏனெனில் நாம் நமது நாடு முழுவதையும் உயர்த்த விரும்புகிறோம்.

இப்போது நான் பிற இடங்களைப் பார்க்கப் போகிறேன். எனவே, இப்போதே நீங்கள் உங்கள் பொறுப்புணர்ச்சியைக் காட்டும்படி கேட்டுக்கொள்கிறேன். வறட்சிப் பணிகளில் ஏதாவது குறைபாடுகள் இருந்தால், என்ன செய்யலாம் என்பதற்கு நீங்கள் ஆலோசனைகள் வழங்க விரும்பினால், என்னிடமாவது ஆளுநரிடமாவது சொல்லுங்கள். ஆனால், மீண்டும் உங்களிடம் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். மத்திய அரசிலிருந்தும் மாநிலங்களிலிருந்தும் எங்களால் முடிந்தவற்றைச் செய்வோம். அதே

நேரத்தில், நீங்கள் தனிப்பட்ட முறையில் இந்தச் சூழ்நிலையில் என்ன உதவி செய்யலாமென்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

உங்களது அன்பார்ந்த வரவேற்பிற்கும், இந்தக் கடுமையான வெயிலில் பொறுமையாகக் கேட்டுக் கொண்டிருந்ததற்கும் நான் உங்களுக்கு நன்றி கூறிக் கொள்கிறேன். மழை வரும் என்று நான் கண்டிப்பாக நம்புகிறேன், அதுமட்டுமல்ல; வறட்சி வந்தாலும், துன்பங்கள் மிகக் குறைவாகிவிடக் கூடிய அளவிற்கு மக்கள் வலிவு பெற்றவர்களாக விளங்குவார்கள் என்று நான் நம்புகிறேன்.

உங்களுக்கு என் நல்வாழ்த்துக்கள்.

*[நாகர்கோவில் பொதுக் கூட்டத்தில் பிரதமர் ஆற்றிய உரை—14—9—76].*

# பாளையங்கோட்டை பொதுக்கூட்டத்தில்

சகோதர, சகோதரிகளே,

இந்தப் பகுதிக்கு வருவதென்றாலே எனக்கு எப்பொழுதும் மகிழ்ச்சிதான். இருந்தாலும் இந்தத் தடவை என் விஜயமானது ஒரு துயரமான கட்டத்தில் அமைந்துள்ளது. வறட்சியினால் பாதிக்கப்பட்டு வாடும் மக்களுக்கு என்னுடைய ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிக்கவும்—நடைபெறும் வறட்சி நிவாரணப் பணிகளைப் பார்வையிடவும்—மேலும் ஏதாவது செய்ய முடியுமா என்பதைப் பார்க்கவும் நான் வந்துள்ளேன். தொடர்ந்து இரண்டாண்டுகளாக இந்தப் பகுதிகளில் மழை பெய்யாமல், அதன் விளைவாக பெருவாரியான மக்கள் பாதிப்புக்குள்ளாகியுள்ளதும் மிகுந்த துயரினை அளிக்கின்ற ஒன்றாகும். துரதிர்ஷ்டவசமாக, ஹெலிகாப்டரில் வருவது இயலாது என்ற நிலை ஏற்பட்டதினால் என் சுற்றுப்பிரயாண நிகழ்ச்சிகளை மாற்ற வேண்டியதாகி விட்டது. இதனால் நான் செல்ல வேண்டிய பல இடங்கள் என் பயணத்தில் இடம் பெறாமல் புதிய பயணத் திட்டம் போடப் பட்டது. இருந்தாலும் மக்களின் பிரச்சினைகள் குறித்து விவாதிக்கவும்—மக்களைச் சந்திக்கின்ற வாய்ப்பினையும் நான் பெற்றுள்ளேன்.

இப்பொழுது என்னிடம் பல மனுக்கள் தரப்பட்டன. அவைகளை அவசர அவசரமாக மேலோட்டமாகப் பார்த்தேன். இங்கே பேசப்பட்ட பேச்சில்கூட கேரளத்திலிருந்து தண்ணீர் கொண்டு தரப்பட வேண்டும் என்ற வேண்டுகோளும் விடப்பட்டது. ஆனால், தண்ணீர், பாசனம், விவசாயம் இவையெல்லாம் மாநில அரசின் அதிகார வரம்பின் கீழ் வருபவை என்பது உங்களுக்குத் தெரியும். உங்கள் மாநிலம்—சில காலங்களுக்கு முன்பு உங்களுக்கிருந்த மாநில அரசு, மாநில சுயாட்சியையே சொல்லிக்கொண்ட வந்த ஓர் அரசாக இருந்தது. இப்படிப்பட்ட விஷயங்களில் மத்திய அரசுக்கு செயல்படவோ நடவடிக்கை எடுக்கவோ எந்த வித அதிகாரமும் இல்லை என்பதே இதன் பொருள். நாங்கள் செய்யக் கூடியது எல்லாம் முதலமைச்சரிடம் பேசி அவரை இணங்கச் செய்ய முயற்சிப்பது மட்டும்தான். இந்த விஷயங்கள் அனைத்துமே பொதுவான நாட்டு நலனை முன்னிறுத்தியோ, தேசத்தின் தேவையை அனுசரித்தோ சிந்திக்கப்படுவதில்லை. ஒவ்வொரு மாநிலமும் தன்னுடைய தேவைகளைப் பற்றித்தான் சிந்திக்கிறது. இதனால், பலவீனமான பகுதிகளுக்கோ, தனியான பிரச்சினைகளால் பாதிக்கப்படும் பகுதிகளுக்கோ உதவி செய்வது மிகுந்த சிரமமாகிவிடுகிறது.

## வறுமையை அகற்ற யாரால் முடியும்?

மத்திய அரசு பலமுடையதாக இருந்தால்தான், நாடு முழுவதும் பலமுடையதாக இருந்தால்தான், எல்லா மாநிலங்களும் முன்னேற்றம் அடைய முடியும். அந்த நிலை உருவானால், பாதிக்கப் பட்ட பகுதிக்கு, பிற்பட்ட பிரிவுக்கு, நலிந்த, பலவீனமான பகுதிக்கு மேலும் உதவி செய்கின்ற நிலையில்—மத்திய அரசு இருக்கும்.

இத்தனை ஆண்டுகளாக, நாம்—காங்கிரஸானது—இந்த நாட்டுக்கு ஒரு வலுவான அடித்தளம் அமைத்து வந்துள்ளது. பல பிரதேசப் பிரச்னைகள், பல திட்டங்கள் எடுத்துக் கொள்ளப் பட வேண்டியவை—எடுத்துக் கொள்ளப்பட முடியவில்லை. ஓரிரு திட்டங்களை எடுத்துக் கொண்டு ஒரு பகுதியினருக்கு உதவுவதின் மூலமாக—நாடு முழுமைக்குமாக நாட்டினை அச்சுறுத்தும் எல்லா அபாயங்களையும் எதிர்த்துச் சமாளிக்க முடியாமல் போய்விடுகிறது. இந்த நாட்டின்—இந்த நாட்டு மக்களின் அடிப்படை பலத்தை நாம் உருவாக்கி கட்டிக் காத்து வந்துள்ளோம். நம்மால் மட்டும் வறுமையை ஒழித்து விட முடியாது. யாராலும் வறுமையை ஒழித்துவிட முடியாது. பொறுப்புணர்ச்சியுடனும், நாட்டின் எதிர்கால நல்வாழ்வில் தங்களைத் தாங்களே ஈடுபடுத்திக் கொள்கின்ற பொதுநல நோக்குடனும், மேலும் மேலும் சுயச் சார்புடையவர்களாக வளர்கின்ற மக்களால் மட்டுமேதான் —அவர்களால்தான்—வறுமையைக் குறைக்க முடியும். கஷ்டங்களும், சிரமங்களும் எப்பொழுதும் இருந்து வந்தாலும் கூட, சிறிது, சிறிதாக, இந்த இடர்ப்பாடுகளைச் சமாளிக்க நம் மக்கள் தங்களைத் தாங்களே தகுதி படைத்தவர்களாக்கிக் கொண்டுள்ளார்கள். வெளிநாட்டு அபாயங்களுடன், உள்நாட்டுக் குழப்பங்களையும், ஏன், வறட்சி, வெள்ளப் பெருக்கு, நிலநடுக்கம் போன்றவைகளைக் கூட முழுமையான அளவில் நாடு சமாளிக்கின்ற நிலையில் உள்ளது. ஆனால் இந்தச் சிரமமான காலங்களில் கூட, மக்களுக்கு எப்படி உதவுவது, நம் நாட்டின் மீது தீராக் களங்கத்தினை ஏற்படுத்தாத வகையில் எப்படி இந்தக் கஷ்டங்களைத் தவிர்ப்பது என்றெல்லாம் ஒவ்வொருவரும் நினைத்துப் பார்க்காமல், எதிர்க் கட்சிகளும், பலம் பொருந்திய வேறு பல சக்திகளும் மத்திய அரசினைப் பலவீனப்படுத்த ஒன்றாகச் சேர்ந்து கொண்டு ஜனநாயகத்தின் பேரால் கிளர்ச்சிகளை நடத்தத் தொடங்கினார்கள். இதனால் வன்முறைகளும், அழிவுச் சக்திகளுமே தலைதூக்கின. நாட்டை வலிவுடையதாக்கும் செயல் திட்டங்களையும்—வயல் வெளியிலும்—தொழிற்சாலைகளிலும் செயல்படுத்தப்படுகிற உற்பத்தித் திட்டங்களையும் இவை வெகுவாகப் பாதித்தன.

எதிர்க்கட்சியில் சில காலம் இருந்த திரு. காமராஜ் அவர்கள் எங்களை எதிர்த்தார்கள் என்பது உங்களுக்குத் தெரியும். ஆனால், இந்த வகையான கிளர்ச்சிகள் மூட்டிவிடப்பட்ட நோக்கம் —செயல்படுத்தப்பட்ட தன்மையையும்—ஜனநாயக அமைப்பில்

அளிக்கப்பட்டுள்ள உரிமைகள் ஜனநாயகத்தையே குலேக்கும் வகையில் செயல்படுவதையும் கண்டு—என்னைச் சந்தித்துப் பேச பல தடவை அவர் வந்தார். இக்கிளர்ச்சிகள் குறித்தும் அவை நடத்தப்படும் முறை குறித்தும் மிகுந்த அதிருப்தியை அவர் தெரிவித்தார். நாம் பின்பற்றுகின்ற கொள்கைகள் சரியான கொள்கை என்பதனையும் அவர் உணர்ந்தார். அவர் இறப்பதற்கு பல மாதங்களுக்கு முன்பே எங்களோடு சேர விழைவதாகவும், நடைபெற்று வரும் ஆக்கப் பணிகளுக்கு அவரும் உறுதுணையாக இருக்க விரும்புவதாகவும் என்னிடம் சொன்னர்.

## அனைவருக்கும் உள்ள பொறுப்பு

கடுமையான வெய்யிலில் நீண்ட நெடு நேரமாக நீங்களெல்லாம் அமர்ந்துள்ளீர்கள். உங்கள் நேரத்தை அதிகமாக எடுத்துக் கொள்ள நான் விரும்பவில்லை. ஆனல் ஒன்றை மட்டும் நான் வலியுறுத்திக் கூற விழைகிறேன். சிரமங்கள் ஏற்படுகின்ற காலங்களில், எல்லா அரசியல் தொண்டர்கள், தானே முன் வந்து இயங்குகிற நிறுவனங்கள், மக்கள் எல்லோருக்கும் கடமை ஒன்று உண்டு. நடைபெறுகின்ற பணிகளில் ஏதாவது குறைபாடுகள் இருந்தால், அவற்றை எங்களுக்குச் சுட்டிக்காட்டுவதுடன், மேலும் அரசு என்னென்ன செய்யலாம் என்பது குறித்தும், அதிகாரிகளும் அரசு ஊழியர்களும் எப்படி எப்படியெல்லாம் செயல்படுகிருர்கள் என்பது குறித்தும் எங்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும். அதேசமயத்தில், ஒவ்வொருவரும்—தங்கள் பங்கினை ஆற்றுகின்ற வகையில் தன்னல் முடிந்ததைச் செய்யவும் வேண்டும். குறிப்பாக கைவினைப் பொருட்கள் தயாரித்தல் மற்றும் இதுபோன்ற சம்பந்தப்பட்டவை குறித்துத் தன்னல் முடிந்ததைச் செய்ய ஒவ்வொருவரும் முன்வர வேண்டும். இப்படிப்பட்ட சிறு சிறு காரியங்கள் தனிப்பட்ட நபர்களாலும், சிறு சிறு குழுக்களாலும் தொடங்கப்படலாம். ஒருவர் ஒரு பணியினை அந்தரங்கச் சுத்தியுடன் மேற்கொள்வாரேயானல், உதவி எப்பொழுதும் அதற்குக் கிடைக்கும்.

ஆகவே, என்னுடைய சார்பிலும், இந்திய அரசின் சார்பிலும் —மற்றும் நாட்டின் மற்ற பகுதிகளில் உள்ள உங்கள் சகோதர, சகோதரிகள் சார்பிலும் நீங்கள் படுகின்ற இந்தக் கஷ்டங்களுக்கு என்னுடைய ஆழ்ந்த அனுதாபத்தை மீண்டுமொரு முறை சொல்லிக் கொள்கிறேன். உங்களுடைய எதிர்கால நல்வாழ்வுக்கு என் நல்லாசிகள்.

வணக்கம்.

—*14—9—'76*ல் பாளையங்கோட்டை பொதுக்கூட்டத்தில் திருமதி இந்திரா காந்தி அவர்கள் ஆற்றிய உரை

# புதுஅப்பநேரிக் கூட்டத்தில்

சகோதர, சகோதரிகளே,

தமிழ் நாட்டுக்கு வருவதென்றுலே எனக்கு எப்பொழுதும் மகிழ்ச்சிதான். ஆனுல் இந்தத் தடவை நான் அவ்வளவு மகிழ்ச்சி அடையவில்லை. உங்களை யெல்லாம் சந்திப்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். ஆனுல், வான்மழை பொய்த்துப் போய்விட்ட தனுல் இந்தப் பகுதி வாழ் மக்களாகிய நீங்கள் படும் அவதியையும் சிரமங்களையும் காண நான் மிகுந்த வேதனைப்படுகிறேன். இத்தனை ஆண்டுகளாக, நாங்கள்—அதாவது காங்கிரசானது—நாட்டிலே பலமான ஓர் அடித்தளம் உருவாக கடுமையாகப் பாடுபட்டு வந்துள்ளது. வறுமையை ஒழிக்க வேண்டுமென்று நாம் சொல்லும் போது, நமக்கோ வேறு யாருக்கோ வறுமையை ஒழிக்கின்ற அளவுக்கு வலிவு இல்லை என்பது நமக்குத் தெரிந்தே உள்ளது. தூக்கி எறிந்து விடுவதற்கு வறுமை ஒன்றும் ஒரு பழைய புடவையோ, கிழிந்த சட்டையோ அல்ல; வறுமை என்றுல் என்ன? உண்ண உணவு இல்லாமை, உடுக்கின்ற உடைப் பற்றுக்குறை, தங்க இடமின்றித் தவித்தல், வேலையில்லாத் திண்டாட்டம்—இவை போன்ற இல்லாமைகளின் மொத்த உருவம்தான் வறுமை என்பது. ஆகவே, மக்களுக்கு உதவி புரிய வேண்டுமென்றுல், இந்தப் பற்றுக்குறைகள் அகற்றப்பட வேண்டும். உணவு உற்பத்தியாகட்டும், தானியங்கள் போன்ற மற்ற உணவு வகைகளாகட்டும், தொழில் உற்பத்தியாகட்டும்—எல்லாவித உற்பத்திகளையும் நாம் பெருக்கியாக வேண்டும். மக்களில் எல்லாப் பிரிவினரும் தங்களுடைய பங்கினைப் பெறுகின்ற வகையில்—இப்படி உற்பத்தியாகின்ற பொருள்கள் சமமாகப் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். உற்பத்திப் பெருக்கம் என்பது நாட்டில் நிலவுகின்ற சில நிலைகளை ஒட்டியே அமையும். அதாவது உற்பத்தி, பணத்தை விழுங்குவதாக அல்லாமல், இலகுவாக இருக்க வேண்டும். வன்முறையோ—வன்முறைக் கிளர்ச்சிகளோ இருக்கக் கூடாது. சில சமயங்களில் வன்முறைக் கிளர்ச்சிகளும், தேவையற்ற தவறுனப் பிரச்சாரங்களும், தவறுன கோஷங்களும் கூட உற்பத்திப் பெருக்கத்தினைப் பாதித்து நிறுத்திவிடுகின்றன.

## ஆபத்தைச் சமாளிக்க பலமான அடித்தளம்

முன்பு, தமிழ் நாட்டில் காங்கிரஸ் ஆட்சி இருந்தபொழுது நிர்வாகத் திறமைக்கு தமிழ்நாடு மிகவும் பெயர் பெற்றிருந்தது. எல்லாத் துறைகளிலும் தமிழ்நாடு முன்னேற்றம் பெற்றிருந்தது. துரதிருஷ்டவசமாக, நாம் தேர்தலில் தோற்று, வேறு ஒரு கட்சி ஆட்சிக்கு வந்தது. ஆட்சிக்கு வந்தவர்களின் நோக்கும், சிந்தனையும் நாட்டின் வளர்ச்சியிலும், உற்பத்தியிலும் இல்லை. அவர்கள் மக்களின் சில பிரிவினர்களுக்கு உதவி புரிந்தார்கள். அது நல்ல

பணி. ஆனால் அது அடிப்படையான பணி அல்ல. ஆகவேதான், தமிழ்நாட்டிற்கு ஓர் ஆபத்து ஏற்படும்பொழுது, ஒரு நெருக்கடி வரும்பொழுது அதைச் சமாளிக்கின்ற நிலையில் மக்கள் தயாராக இல்லை! அதைச் சமாளிக்க போதிய மனத் திண்மையும் மக்களுக்கு இல்லாமல் போய்விட்டது. ஒரு வீட்டின் அடித்தளம் உறுதியாக இல்லையென்றால்—அந்த வீட்டை எப்படி எப்படி யெல்லாம் அலங்காரம் செய்துள்ளோம் என்பதெல்லாம் மிக மிகச் சாதாரணமான அளவுக்கு கவைக்குதவாத விஷயமாகிவிடும். ஏனெனில் அஸ்திவாரம் பலமில்லையென்றால், ஒரு புயல் அடிக்கும்பொழுது, வீடே பறந்து போய்விடும். ஆகவே, தமிழ்நாட்டின் அஸ்வாரத்தைப் பலப்படுத்தாமல், மக்களைச் சுயச்சார்புடையவர்களாகவும், பொறுப்புள்ளவர்களாகவும் ஆக்காமல், அடிப்படை ஆக்கப் பணிகளிலிருந்து மக்களுடைய கவனத்தைத் திசை திருப்ப எல்லாவிதமான கோஷங்களும் தமிழ்நாட்டில் எழுப்பப்பட்டன.

எந்த மக்கள் மீதும் எந்த மொழியையும் திணிக்க நாம் விரும்பவில்லை என மக்களுக்கு நாம் உறுதி அளித்தது மட்டுமல்லாமல், நம்முடைய கொள்கையாலும், செயல்களாலும் அதைத் தெளிவுபெற நிரூபித்துள்ளோம். எல்லா வகைகளிலும் இயன்ற அளவுக்கு பிரதேச மொழிகளுக்கு ஊக்கம் அளிக்க நாம் விரும்புகிறோம் என்பதை நிரூபித்துள்ளோம்.

மாநில சுயாட்சி என்றால் என்ன? தன்னுடைய அதிகாரங்களை வைத்துக்கொண்டு ஒவ்வொரு மாநிலமும் தனக்குப் பிடித்தமானவற்றைச் செய்யவும், தனக்கு எந்தக் கொள்கை பிடிக்கிறதோ அதைக் கடைப்பிடிக்கவும் அனுமதிக்கப்பட வேண்டும் என்பதுதான் அதன் பொருள். தண்ணீர், விவசாயம், நீர்ப்பாசனம் இவை மத்திய அரசின் ஆளுகையின் கீழ் உள்ள விஷயங்கள் அல்ல. இவை மாநில அரசின் கீழ் வருபவை. மற்ற மாநிலங்களிடமிருந்து இன்று உங்களுக்குத் தண்ணீர் வேண்டியுள்ளது. நீங்கள் அதை எப்படிப் பெற முடியும்? உங்களுக்குத் தேவையான தண்ணீரைத் தருமாறு அந்த மாநிலங்களுக்கு நாங்கள் எப்படி எடுத்துச் சொல்ல முடியும்? இந்த மாதிரியான மாநில சுயாட்சி இருக்க வேண்டுமெனில், பிறகு, தமிழ்நாடு மட்டுமல்ல; இந்தியாவில் உள்ள ஒவ்வொரு மாநிலமும சிரமம வரும்பொழுது அவதியுற வேண்டியதுதான். எப்படி இந்தப் பிரச்னையைத் தீர்க்கலாம் என்பது குறித்து தமிழ்நாடு, கர்நாடகம், கேரளம் ஆகிய மூன்று மாநிலங்களும் கலந்து பேச நம்மாலான முயற்சிகளைச் செய்து கொண்டு வருகிறோம். கர்நாடகத்திடம் கொஞ்சம் தண்ணீர் இருக்கிறது. அதிகமாக இல்லை. ஆனால், கொஞ்சம் தண்ணீரை அது கொடுக்கலாம். ஆனால், கர்நாடகத்தில் மின்சாரப் பற்றாக்குறை உள்ளது. கேரளம், கர்நாடகத்துக்கு மின்சாரம் தர முடியும். ஆனால் அந்த மின்சாரம் தமிழ் நாட்டின் மூலமாகத்தான் செல்ல முடியும். ஆகவே, கர்நாடகத்துக்கு அந்த மின்சாரம் செல்ல தமிழ்நாடு அனுமதித்தாலொழிய தண்ணீர் கொடுக்க கர்நாடகம் விரும்பவில்லை. இந்த மூன்று மாநிலங்களும் வெகு விரைவில் ஒரு தீர்வு காண முடியும்

என நான் நம்புகிறேன். தானும் சிரமத்தில் இருப்பதையும், அவசரக் காலத்தில் தமிழ் நாடு தனக்கு உதவுமா என்பதைக் கேரளம் தெரிந்து கொள்ள விரும்பும்.

இங்குள்ள உங்களில் பெரும்பாலானவர்கள் இந்த வறட்சி நிவாரணப் பணியில் ஈடுபட்டுள்ளீர்கள். சற்று முன்பு அந்தப் பணிகளை நான் பார்வையிட்டேன். வேலைவாய்ப்பு சிலபேருக்குக் கிட்டியுள்ளது குறித்து எனக்கு மகிழ்ச்சி. இருந்தாலும் மேலும் வேலைவாய்ப்புகள் அளிக்கப்பட வேண்டுமென்றும், மேலும் இது போன்ற வேலைத் திட்டங்கள் செயல்படுத்தப்பட வேண்டும் என்பதை நான் உணர்கிறேன். ஆண்களை விட பெண் வேலையாட்களுக்கு குறைந்த ஊதியம் அளிக்கப்படுகிறது என்று எண்ணிப் பார்க்க நான் வருந்துகிறேன். வறட்சிப் பணிகளைப் பொறுத்த வரையிலாவது, இந்த ஊதியமானது, ஆண்களுக்கும், பெண்களுக்கும் சமமாக இருக்கும்படி பார்த்துக் கொள்ள வேண்டுமென ஆளுநரையும், அவருடைய ஆலோசகர்களையும், அவருடைய அலுவலர்களையும் கேட்டுக் கொள்கிறேன்.

## வாதை நீங்கிட வான்மழை வேண்டும்

என்னுடைய தமிழ்நாட்டு விஜயம் குறித்து தகவல் தெரிவிக்கப்பட்டபொழுது இங்கே சிறிதளவு மழை பெய்தது. மறுபடியும் நான் இந்தப் பகுதிக்கு வந்து கொண்டிருந்தபொழுது வழியில் சிறு சிறு மழை பெய்து கொண்டிருந்தது. தூரத்தில் மேகம் சூல் பிடித்து மழைக்கான அறிகுறிகள் தென்படுகின்றன. இந்தப் பகுதிக்கும் அந்த மழை பெய்ய வேண்டும், தமிழ் நாட்டில் உள்ள எல்லா வறட்சிப் பகுதிகளிலும், மரங்களைக் காய்ந்து போகாமல் காப்பாற்றவும்—வாடிடும் மக்களுக்கு வரப்பிரசாதமாகவும் — இந்த மழையானது பெய்ய வேண்டும் என நான் மனப்பூர்வமாக நம்புகிறேன்; வேண்டிக்கொள்கிறேன்.

மத்திய அரசும், மாநில அரசும் உங்களுக்கு உதவி புரிய முயற்சிகள் மேற்கொண்டுள்ளன. மேலும் என்னென்ன செய்ய வேண்டுமோ அவற்றைச் செய்ய எங்களாலான முயற்சிகள் அத்தனையும் செய்வோம். நீங்கள் எனக்கு அளித்த இந்த வரவேற்புக்கு என் நன்றி. நல்ல எதிர்காலம் உங்களுக்கு அமைய வேண்டுமென்று என் நல்லாசிகளைக் கூறிக் கொள்கிறேன். இப்பொழுது நீங்கள் அனுபவிக்கின்ற இன்னல்கள்—இடர்ப்பாடுகள்—சூழ்ந்து உள்ள இருள்—இவை அத்தனையும் விலகி—தமிழ்நாட்டுக்கு நல்ல ஒளிமயமான எதிர்காலம் நிச்சயம் உண்டு என்பதிலும்—மிகுந்த மனத் திண்மையுடனும், மனங்கலங்காமலும், சிரமங்களைச் சமாளிக்கின்ற தமிழகத்து மக்கள், தங்களுக்கு ஏற்பட்டுள்ள இன்னல்கள் அனைத்தையும் களைந்தெறிந்துவிட்டு ஒளிமயமான எதிர்காலத்தை நோக்கி முன்னேற்றப் பாதையில் ஏறுநடை போடுவர் என்பதிலே எனக்கு எள்ளளவும் சந்தேகம் கிடையாது.

வணக்கம்.

*—கோவில்பட்டி அருகில் புதுஅப்பநேரியில் 14-9-76-ல் இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்கள் ஆற்றிய உரை.*

# மதுரைப் பொதுக்கூட்டத்தில்

சகோதர, சகோதரிகளே!

இன்று நான் உங்களிடையே பேசுகின்ற வாய்ப்பினைப் பெற்றமைக்கு பெருமகிழ்ச்சி அடைகிறேன். பெருமழையினையும் பொருட்படுத்தாமல் நீங்கள் இங்கே தொடர்ந்து இருப்பதற்காக மிகுந்த நன்றியினையும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இங்கே சில நிமிடங்களுக்கு முன்பேயே நான் வந்திருக்கக்கூடும். ஆனால், இங்கே கூட்டம் கலைந்துவிட்டது என யாரோ சிலர் எங்களிடம் சொன்னார்கள். நீங்கள் மேலும் மழையில் அதிகமாக நனைவதை நான் விரும்பவில்லை. ஆகவே, என் பேச்சினை நீண்ட தாக்க நான் விரும்பவில்லை. உங்களுக்கு என்னுடைய நல்வாழ்த்துக்களை வழங்க விரும்புகிறேன். மதுரைவாழ் மக்கள் எப்பொழுதும் பெரியதொரு வரவேற்பினையே எனக்கு வழங்கியவர்கள். ஆனால், இந்தத் தடவை எனக்கு அளிக்கப்பட்ட வரவேற்பு மகத்தானதாகும். பெருமழை இருந்துங்கூட, சாலைகள் முழுதும் மக்கள் ஆரவாரமான வரவேற்பினைத் தந்துள்ளார்கள். இந்த வரவேற்பு தனிப்பட்ட முறையில் எனக்கு அளிக்கப்பெற்ற வரவேற்பல்ல என்பதை நான் அறிவேன்; நாம் மேற்கொண்டுள்ள திட்டங்களுக்கும் கொள்கைகளுக்கும் கிடைத்த வரவேற்பேயாகும்.

## முக்கியத் திருப்பத்தில் நிற்கிறது நாடு

இந்திய மக்களைப் பற்றி நான் மிகவும் பெருமைப்படுகிறேன். அவர்களின் செயல்திறனையும், சகல இன்னல்களையும், இடர்ப்பாடுகளையும் சமாளிக்கும் தன்மைகளையும் கண்டு நான் பெருமைப்படுகிறேன். இன்று நாம் இடர்ப்பாடு மிக்க முக்கியமான திருப்பக் கட்டத்தில் இருக்கிறோம். ஏராளமான நம்முடைய பெருந்தலைவர்கள் சிரியதொரு வழியை நமக்கு வகுத்துத் தந்துள்ளார்கள். நாம் அவர்களுடைய பாதையில் தொடர்ந்து செல்லவும், அவர்களது வழியினைப் பின்பற்றி நடக்கவும் முயற்சிகள் மேற்கொண்டு வருகிறோம். ஆனால் இப்பொழுது புதிய பிரச்சினைகள் எழுந்திருக்கின்றன. வலிவுள்ளவர்களாகவும், சுயச்சார்புடையவர்களாகவும் திகழ தகுதி வாய்ந்தவர்களாகவும் நாம் இருக்கிறோம் என்பதை எடுத்துக் காட்டியுள்ளோம். நமது இளம் பொறியாளர்கள், விஞ்ஞானிகள் போன்றோர் பெருஞ் சாதனைகளை உருவாக்க வல்லவர்களாகத் திகழ்கிறார்கள். உலகத்தில் நாம் யாருக்கும் இளைத்தவர்களில்லை என்ற நிலையினை நாம் எய்தியுள்ளோம். உலகிலுள்ள அநேக நாடுகள் இதனை விரும்பவில்லை என்பதை நாம் காண்கிறோம். நாம் வலிவு பெறுகின்ற அதே நேரத்தில் பல தொல்லைகளுக்கு நாம் ஆட்பட்டுள்ளோம். வெளிநாட்டு அபாயங்களுக்கும், உள்நாட்டுத் தொல்லைகளுக்கும் ஆட்பட்டுள்ளோம். துரதிருஷ்டவசமாக, நம்மிடையே நாட்டில் தேசிய நலனைக் கருதாத மக்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். வெளிப்புறச் சக்திகள் அவர்களைப்

பாராட்டுகின்ற பொழுது தாங்கள் ஏதோ அதிசயமான செயலைப் புரிந்துவிட்டதாக அவர்கள் நினைக்கிறார்கள். தங்கள் செய்கையில் அவர்கள் வெற்றி பெறுவார்களேயானால், அது நாட்டினையே பல வீனப்படுத்தும் என்பதை அவர்கள் உணரவில்லை. இந்தியாவை சுயச்சார்பில் நம்பிக்கையுள்ள நாடாக ஆக்குவதே நம்முடைய நோக்கமாகும். நாடு முழுதும், அனைத்து மாநிலங்களும், எல்லாத் தரப்பட்ட சமுதாயத்தினரும், ஏன், தனிப்பட்ட எல்லா நபர் களுமே சுயச்சார்பு படைத்தவர்களாகத் திகழ வேண்டுமென்பதே நம்முடைய நோக்கமாகும்.

## ஏழ்மையைப் போக்க ஓரே மந்திரம்

ஏழ்மையினை எந்தவொரு வெளிப்புறச் சக்தியினைக் கொண்டும் அகற்றிவிட முடியாது. உற்பத்தியைப் பெருக்குவதின் மூலம், உற்பத்தியாவதை அனைத்து மக்களிடையே சமமாக விநியோகிக் கப்படுவதன் மூலமுமே நாம் ஏழ்மையினை அகற்ற முடியும். முந்தைய ஆண்டில் அல்லது கடந்த 15 மாதங்களில் நம்முடைய பொருளாதாரத்தில் பாராட்டத்தக்க சாதனைகளையும், முன்னேற் றத்தையும் நாம் அடைந்துள்ளோம். இது எப்படிச் சாத்திய மாகியது? மக்களிடையே ஒற்றுமை உணர்வு, கட்டுப்பாட்டு உணர்ச்சி இருந்ததாலும், மேலும், கிளர்ச்சி, வன்முறை போன்ற வைகளின் மூலம் நம்முடைய பிரச்சினைகளைத் தீர்க்க முடியாது என்பதையும் மக்கள் அறிந்திருந்ததாலுமே இந்த முன்னேற்றத் தினை நாம் அடைய முடிந்தது. கடின உழைப்பு, ஒற்றுமை உணர்வு, சரியான பாதையில் செல்லுதல் போன்றவைகளால் மட்டுமே இந்தியாவைப் பொருளாதாரத் துறையிலும், சமுதாயத் துறையிலும்—வெளிநாடுகளிலிருந்து கிளம்புகின்ற சவால்களை யெல்லாம் பலமாக எதிர்க்கின்ற சக்தி மிக்க நாடாக ஆக்க முடியும். எனவேதான், அரசியலமைப்புச் சட்டத்தில் நாங்கள் செய்ய உத்தேசித்துள்ள மாற்றங்களில் குடிமக்களின் கடமைகளுக்கு மிகுந்த அளவில் முக்கியத்துவம் கொடுத்து வலியுறுத்தியுள்ளோம். கடமைகளை ஒட்டியே உரிமைகள் எழுகின்றன என்பதை காந்தி யடிகள் நமக்குக் கற்றுத் தந்துள்ளார்கள். அரசியலமைப்புச் சட்டத்தில் நாம் மாற்ற நினைத்துள்ள சில மாற்றங்கள் கூட உண் மையிலே மக்களை சமூக, பொருளாதார மாற்றங்களுக்குத் தகுதி படைத்தவர்களாகவும்—மேலும் அவர்களைத் திறம் வாய்ந்தவர் களாகவும் மாற்றியமைக்க உறுதுணையாக அமையும். மக்களின் குரலானது நாடாளுமன்றத்தின் மூலம்தான் ஒலிக்க முடியும். எனவே, நாடாளுமன்றம் உயர்ந்த நிலையில் வைத்து எண்ணப்பட வேண்டும். ஆக்கிரமிப்பை நாம் முறியடித்துள்ளோம். பண வீக்கத்தை நாம் சமாளித்திருக்கிறோம். நம் நாட்டின் மக்களாட்சி முறையை அழிக்கவும், நமது ஒற்றுமையைக் குலைக்கவும் முற்பட்ட சில தீயசக்திகளையும் நாம் சந்தித்திருக்கிறோம். தமிழ் நாட்டு மக்கள் நாட்டு வளர்ச்சியில் பெரும் செயல் திறனைக் காட்டி யுள்ளார்கள். அவர்களது திறமை இங்குள்ள அரசினை மட்டும் நடத்திட உதவவில்லை. மத்திய அரசினையும் செம்மையுற நடத்திட உதவியுள்ளது.

## மக்கள் ஒத்துழைப்புடன் மாண்புறு சமுதாயம் அமைப்போம்

நிருவாகத்தைச் சீர்திருத்தம் செய்வதோடு மட்டுமல்லாமல், எல்லா மக்களையும் முன்னேற்றப் பணிகளில் ஈடுபடச் செய்ய வேண்டும். நீங்கள் இந்தப் பணிகளில் ஆதரவு தந்தால் நம்மால் இந்தச் சவாலையும் சந்திக்க முடியும் என நான் கருது கிறேன். வாழ்க்கைத் தரத்தினை உயர்த்தி, வேலை வாய்ப்பு வசதிகளை உருவாக்கி இங்குள்ள மக்களின் எல்லாத் தேவைகளை யும் நிறைவேற்ற முடியும் என நான் நம்புகிறேன்.

மீண்டும் ஒருமுறை உங்கள் அனைவர்க்கும் என் நல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். நாங்கள் யாரு டைய துணையினை மதிப்பு வாய்ந்ததாகக் கருதுகிறோமோ, அவர்க ளுக்கும், எதிர்காலத்தைச் செம்மையாக உருவாக்க வேண்டிய இளைஞர்கள், புதிய சந்ததியினரை உருவாக்கி, குடும்பத்தை யும், நாட்டையும் தீரத்துடன் நூற்றுண்டுக் காலங்களுக்கு வழி நடத்திச்செல்லும் திறமை படைத்த மாதர் சமுதாயத்துக்கும், அனைவருக்கும் எனது நல்வாழ்த்துக்களை வழங்குகிறேன். உங்களில் யாருக்கும் இந்த மழையினுல் ஜலதோஷம் பிடிக்காது என நினைக் கிறேன். மாருக, இந்தக் கூட்டத்திலிருந்து திரும்பச் செல்லும் நீங்கள் மேலும் வலிவுடன் மிகுந்த ஆர்வத்துடன் சமுதாயத்தை மாற்றியமைக்கும் இந்த மகத்தான பணியில் உங்களையே ஈடுபடுத் திக் கொண்டு, சீரியதொரு சமுதாயத்தை உருவாக்க முற்படு வீர்கள் என நான் நம்புகிறேன்.

வணக்கம்.

*[14—9—76 அன்று மதுரையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்கள் ஆற்றிய உரை.]*

# சிவகங்கைப் பொதுக்கூட்டத்தில்

சகோதர, சகோதரிகளே,

தமிழ்நாட்டுக்கு வருவதென்ருலே எனக்கு எப்பொழுதுமே ஒரு தனி மகிழ்ச்சி. உங்களையெல்லாம் சந்திப்பதிலே நான் பெரு மகிழ்ச்சியடைகிறேன். அது மட்டுமல்ல; என்னேடு, தொடர்ந்து சிறிதளவு மழையும் வந்தது குறித்தும் நான் மகிழ்ச்சி அடைகிறேன். நீங்கள் படுகின்ற அவதிகளுக்கிடையே இந்த மழை சற்று உங்களுக்கு உபகாரமாக வந்துள்ளது. மரங்கள் சில பட்டுப் போகாமல் காப்பாற்றப்படவும், ஓரளவு குடிதண்ணீர் உங்களுக்குக் கிடைக்கவும் இந்த மழை உங்களுக்கு உதவியாக அமையும். நிவாரணப் பணிகள் இங்கு நடைபெற்று வருகின்றன. இந்தப் பகுதி வாழ் மக்களுக்கு இந்த நிவாரணப் பணிகள் பயனுள்ளதாக அமையும் என நம்புகிறேன். முந்தைய கூட்டங்களில் நான் குறிப்பிட்டதுபோல, இந்தப் பணிகள் போதிய அளவுக்கு இல்லையென்ருே, அவை சரிவர நிறைவேற்றப்படவில்லை என்ருே, நீங்கள் கருதினுல், அதை எங்களுக்குத் தெரியப்படுத்துவது உங்களுடைய பொறுப்பாகும். உங்களுக்கு எந்த அளவுக்கு முடியுமோ அந்த அளவுக்கு உதவி புரிய நாங்கள் தயாராக இருக்கிருேம் என்ற உறுதிமொழியை நான் உங்களுக்கு அளிக்கிறேன். நல்லெண்ணத்துடனும் அந்தரங்க சுத்தியுடனும் இப்படிப்பட்ட பிரம்மாண்டமான பிரச்சனைகளை நாம் சமாளிக்கும்போது, சில தவறுகளும் குறைகளும் ஏற்படலாம். அது மட்டுமல்ல; பல்வேறு செயல் திட்டங்கள்—பணிகள் இங்குள்ள அரசு ஊழியர்களாலும், பிரதேச மக்களாலுமேதான் நிறைவேற்றப்பட வேண்டியுள்ளன. ஆகவே, எந்த அளவுக்கு தங்கள் திறமையையும், ஈடுபாட்டினையும், சேவா மனப்பான்மையையும் இதில் ஈடுபட்டுள்ளோர் காட்டுகிருர்களோ, அந்த அளவுக்கு இந்தப் பணிகளை வெற்றிகரமாக நிறைவேற்ற முடியும்.

## பொதுப் பிரச்னை: மக்களின் கடமை

நான் இங்கு வந்து கொண்டிருக்கும்பொழுது, கிணறுகளைத் தோண்டுதலிலும் ஆழப்படுத்துதலிலும், சிறிய பாசனத் திட்டங்களிலும் கடந்த ஐந்தாண்டுக் காலங்களில் செய்திராத அளவுக்கு இன்னும் முடிவு பெருத இந்த ஆண்டில் அதிக அளவில் பணத்தைச் செலவழித்திருப்பதாக ஆளுநர் அவர்கள் என்னிடம் தெரிவித்தார்கள். மக்களின் அடிப்படையைத் தேவைகளுக்கும், அவர்களுடைய சிரமங்களைப் போக்குவதற்கும் கவனத்தைச் செலுத்தாமல், உருப்படியான ஆக்கப்பணி ஆற்ருமல், சிறு சிறு விஷயங்களில் நிர்வாக இயந்திரத்தின் திசையைத் திருப்பிவிட்டிருந்ததனுல், அனுவசியமாக இழந்துவிட்ட பொன்னுன காலத்தை ஈடுசெய்ய வேண்டிய நிலையில் நாம் உள்ளோம். இந்தப் பணியிலே உள்ளூர் மக்கள் அனைவருடைய உதவியும், ஆதரவும் நமக்குத் தேவை.

உள்ளூர் மக்கள் முழுக்க முழுக்க தங்களைத் தாங்களே ஈடுபடுத்திக் கொண்டாலன்றி, எந்தப் பணியும் திறம்பட நடக்காது. அதிகாரிகளிடமும் நிர்வாக இயந்திரத்தினிடமும் நமக்கென்ன என்று இந்த வேலையை விட்டு விட முடியாது. ஆகவேதான் தாங்கள் வாழ்கின்ற பகுதியின் மேம்பாட்டிலும், சமுதாயம் முழுமையுமே நல்வாழ்வு வாழவும் மக்கள் பொறுப்புணர்வுடன் செயலாற்ற வேண்டும் என நான் விரும்புகிறேன்.

## பரந்த நோக்கு—ஒற்றுமை உணர்வு

மொழி விஷயமானாலும் சரி, சாதி மதப்பாகுபாடானாலும் சரி—எவ்விதக் குறுகிய நோக்கத்துக்கும் நாம் ஆளாகக்கூடாது. பரந்த மனப்பான்மையுடனும் பெருநோக்குடனும் பிரச்னைகளை நாம் அணுகுவோமேயானால், உறுதியான நிலைத்த பயனை நாம் பெறுவது எளிதாக இருக்கும். நிவாரணப் பணிகள் இப்பொழுது நடைபெற்று வருகின்றன. ஆனால், அவை மட்டும் போதாது. எதிர்காலத்தைப் பற்றி நாம் சஞ்சலப்படாமல் நிலைத்த பயன் பெறவும், எதிர்காலத்தில் வான் மழை பொய்த்துப் போய்விட்டாலோ, அல்லது இயற்கையின் உற்பாதங்கள் ஏதோ ஏற்பட்டாலும், அப்படிப்பட்ட எதிர்பாரா நிலைமைகளை மக்கள் உறுதியுடன் சமாளிக்க, நியாயத்தின் அடிப்படையில் போதிய பாதுகாப்புகள் மக்களுக்கு அளிக்கப்படுகின்ற வகையில், நாம் மேலும் பெரிய அளவில் பணியாற்ற வேண்டும் என நான் கருதுகிறேன்.

பல்வேறு பிரிவினராலும், கட்சிகளாலும் என்னிடம் அளித்த மனுக்களில் உபரி நீரைத் திருப்பிவிடுதல் குறித்தும், மற்ற மாநிலங்களிலிருந்து தண்ணீரைக் கொண்டு வருதல் போன்ற விஷயங்கள் குறித்தும் சொல்லப்பட்டுள்ளன. ஒவ்வொரு மாநிலத்தின் நன்மையும்—வளர்ச்சியும் நாடு முழுமைக்கான ஒளிமயமான எதிர்காலத்துடனும் ஒட்டு மொத்த முன்னேற்றத்திலும்—பின்னிப் பிணைந்துள்ளன என்று ஒவ்வொரு மாநிலத்துக்கும் எடுத்துக்கூறி இந்த வழியில் மற்ற மாநிலங்களைக் கொண்டு வருவதே நம் முன் உள்ள முயற்சியாக உள்ளது. சம்பந்தப்பட்ட மற்ற மாநிலங்களின் முதல் அமைச்சர்களை தமிழ் நாட்டுக்கு மேலும் அதிகமான அளவில் தண்ணீரைத் திருப்பி வழங்க வேண்டுமென நாம் கேட்டுக் கொண்டுள்ளோம். நீருக்கு மாற்றாக, அவர்களுக்கு மின்சாரம் வேண்டியுள்ளது. அதேபோல் வேறு விஷயங்கள் வேண்டியுள்ளன. ஆகவே, எந்த மாநிலமும் சிரமப்படாமலும், எந்த மக்களும் அவதியுறாமலும் இருக்கும் வகையில், அனைவரும் ஒரு சேர அமர்ந்து பிரச்னைகளுக்குத் தீர்வு கண்டாக வேண்டும்.

## காமராஜ் பிறந்த மண்

இந்தப் பகுதி திரு. காமராஜ் அவர்கள் பிறந்த பகுதி என்று என்னிடம் சொன்னார்கள். மரியாதைக்குரிய தலைவராகவும்—எங்களுக்கெல்லாம் உற்ற தோழராகவும் அவர்விளங்கினார் என்பது

உங்களுக்குத் தெரியும். சில காலம் அவர் நம்மிடமிருந்து பிரிந்து இருந்தார். அவருடைய கட்சி உட்பட எதிர்க்கட்சிகள் அர்த்தமற்ற கிளர்ச்சிகளில் ஈடுபட்டபொழுது அதனுல் பல இடங்களில் வன்முறைகள் தாண்டவமாடியதையும்—ஜனநாயகத்துக்குப் புறம்பான செயல்கள் நடந்ததையும்—அவர் கண்டபொழுது—இந்தப் போக்கு மிகவும் தவருனது என்று அவர் கண்டுகொண்டார்.

## மகத்தான முன்னேற்றம்—எப்படிச் சாத்தியமானது?

கடந்த 15 மாதங்களில் இந்த நாடு மகத்தான முன்னேற்றத்தினை அடைந்துள்ளது. சகல துறைகளிலும், தொழில் துறையில், குறிப்பாக பொதுத் துறையில், விவசாயத் துறையில், மற்ற பலவகை உற்பத்தித் துறைகளிலும், எல்லாத் துறைகளிலும், நாம் மகத்தான முன்னேற்றத்தினை அடைந்துள்ளோம். இது எப்படிச் சாத்தியமானது? மக்களிடையே ஒற்றுமை உணர்வு ஓங்கி, பொறுப்புணர்ச்சி, கட்டுப்பாட்டுணர்வு பல்கிப் பெருகியதிலுைம், பிரிவினைச் சக்திகள் தலைதூக்கவிடாமல் தடுத்து நிறுத்தப்பட்டதாலும், பயனற்ற கிளர்ச்சிகள் நாட்டையும்—நம் முன்னேற்றத்தையும் பாதிக்காமல் பார்த்துக் கொண்டதாலும்தான்—இந்த முன்னேற்றத்தினை நாம் அடைய முடிந்தது.

கடுமையான வெய்யிலிலே நெடுநேரமாக அமர்ந்து என்னுடைய பேச்சை அமைதியாகக் கேட்டுள்ளீர்கள். என்னுடைய நன்றியறிதலை உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். முற்போக்கான சுயசார்புடைய ஒளிமயமான எதிர்காலம் தமிழகத்துக்குக் கிட்ட வேண்டும் என்ற என்னுடைய நல்லாசிகளை தமிழ் மக்களுக்குக் கூறிக் கொள்கிறேன். ஏனெனில் முற்போக்கான, சுயச்சார்பு பெற்ற இந்தியாவுக்கு அப்படிப்பட்ட தமிழ் நாடு அவசியம் தேவை. ஆகவே, நாம் அனைவரும் கட்டுப்பாட்டுணர்வுடனும், ஒற்றுமையுணர்வுடனும், உறுதியுடனும், ஒன்ருக இணைந்து பாடுபட வேண்டும். தன்னைத் தானே பாதுகாத்துக் கொள்கின்ற உணர்வோடு—நம்மைவிட ஏழை, எளிய மக்களை கைதூக்கிவிட வேண்டும் என்ற நல்லுணர்வு எங்கும் பல்கிப் பெருக வேண்டும்.

வணக்கம்.

[15—9—76-ல் சிவகங்கைப் பொதுக்கூட்டத்தில் இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்கள் ஆற்றிய உரை.]

# மதுரை மகளிர் கூட்டத்தில்

எனது சகோதரிகளைச் சந்திப்பதில் எப்போதுமே எனக்கு மகிழ்ச்சி. அதிலும் இது ஓர் இனிமையான கூட்டம். வேலை நாளில் காலை நேரத்தில் வருவதற்கு உங்களுக்கு எவ்வளவு கஷ்ட மாகயிருக்கும் என்பதை நான் அறிவேன். பல காரணங்களுக்காக நான் பெண்களைச் சந்திக்க விரும்புகிறேன்; நாட்டின் மக்கள் தொகை யில் அவர்கள் பாதிப்பேர் என்பதால் மட்டுமல்ல; அவர்கள் என்ன நினைக்கிறார்கள், என்ன செய்கிறார்கள் என்பது நமது வருங்கால சமுதாயத்திற்கு மிகவும் முக்கியமானது என்பதினா லேயே! வருங்கால சந்ததியினரை நல்வழிப்படுத்த வேண்டிய பெரும் பொறுப்பு அவர்களுக்கு உள்ளது. எனவே, இன்றைய இந்தியாவின் பிரச்சனைகளை அவர்கள் புரிந்து கொள்ளாவிட்டால் அல்லது தவறான கோஷங்களினால் பொய்ப் பிரசாரங்களால் தவறாக வழிகாட்டப்பட்டால், அது இளைய தலைமுறையினரிடமும் அந்தச் சமுதாயம் வளரும் நிலையிலும் ஒரு மோசமான நிலையை உருவாக்கிவிடும்.

நமது பெண்கள், இளைய தலைமுறையினரை, தங்கள் சம்பந்தப் பட்ட மட்டிலோ அல்லது தங்களது சுயமுன்னேற்றம் பற்றியோ மட்டும் அல்லாமல், சமுதாய முன்னேற்றத்திலும், நமது நாடு முழுவதையும் இன்னும் மேலான நிலைக்கு உயர்த்தும் முயற்சியி யிலும் அதற்கான சாதனை புரியும் தன்னை அர்ப்பணிக்கும் பொறுப் புள்ள, பக்குவப்பட்ட குடிமக்களாக வளரப் பயிற்றுவிக்க வேண்டும்.

காந்திஜியின் வேண்டுகோளுக்கு இணங்கி இலட்சக்கணக்கான இந்தியப் பெண்கள், சுதந்திரப் போராட்டத்தில் பங்கேற்க முன் வந்தனர்; ஆண்களுடன் சரிசமமாக அவர்கள் தியாகங்களையும் கஷ்டங்களையும் ஏற்றார்கள். பெண்களுக்கு தனிச் சலுகை வழங்கப் படவில்லை.

## வளரும் சமுதாயத்தில் மகளிர் பொறுப்பு

சுதந்திரத்திற்குப் பின், நாட்டினை நிர்மாணிக்கும் பணியிலும், வளர்ச்சிப் பணிகளிலும், கல்வி மற்றும் பிற பணிகளிலும் பெண்கள் அதிகளவில் பங்கேற்பதை நாம் பார்க்கிறோம், அதை விரும்ப வும் செய்கிறோம். சில பெண்கள் மாத்திரம் பெரிய பதவிகளை அடைவதில் மட்டும் நமக்கு அக்கறையில்லை. சராசரிப் பெண், கிராமப்புறப் பெண், நகரத்துப் பெண், அனைவரும் சமுதாயத்தில் மதிக்கப்பட வேண்டும் என்று நாம் விரும்புகிறோம். காலங்கால மாக பல உலகத் தலைவர்கள் கூறியிருக்கிறார்கள், ஒரு நாட்டின் நாகரிகம், வளர்ச்சி ஆகியவற்றை அந்த நாடு அதன் பெண்களுக்குக்

கொடுக்கும் சமுதாய அந்தஸ்து, பதவி ஆகியவைகள் மூலமாகத் தான் தீர்மானிக்க முடியுமென்று. பெண்கள் மதிக்கப்பட்டால் தான் அவர்களின் குரல் கேட்கப்படும். ஆனால் அந்த மதிப்பினை உழைத்துப் பெற வேண்டும். எனவே வேகமாக மாறிவரும் இன்றைய உலகில், இதற்கு முன் எப்போதையும் விடப் பெண்க ளுக்கு தற்போது மிகப் பெரிய பொறுப்புக்கள் உள்ளன.

மக்கள் மிக அதிக அளவில் எதிர்பார்க்கிறார்கள். எதனால்? நாம் நமது பேச்சுக்களில் என்ன சொல்கிறோம் என்பதால் மட்டு மல்ல, நாட்டின் வளர்ச்சி எப்படிப்பட்ட மாபெரும் மாறுதல்களைக் கொண்டு வர முடியும் என்பதை முதல் முதலாக அவர்கள் உணர் கிறதால்தான். எனவே நாம் அனைவரும் நாட்டினை முன்னேற்றும் முயற்சியில் பங்கேற்க வேண்டும்.

எல்லாவிதமான பணிகளிலும் நிகரற்று விளங்கப் பெண்கள் முயற்சிக்க வேண்டும். எந்த ஒரு வேலையும் மற்றதை விட தாழ்ந்த தாக நான் நம்பவில்லை. ஒரு தலைவராயிருப்பது அல்லது சமுதா யத்திற்கு சேவை செய்வது என்று சொன்னால் வீட்டை விட்டு வரவேண்டுமென்றோ, அரசியலுக்கு வரவேண்டுமென்றோ அல்லது வேறு விதமாக வரவேண்டுமென்றோ அவசியமில்லை. நீங்கள் அரசியலுக்கு வர விரும்பினால், வரவேற்கிறோம்; ஆனால் வீட்டை நல்ல வீடாக ஆக்குவதும் தேசத்திற்கு சேவை செய்வதற்கு ஒரு வழிதான்.

## வீட்டின் முன்னேற்றமே நாட்டின் முன்னேற்றம்

நல்ல இந்தியாவை உருவாக்க வேண்டுமென்று நாம் கூறும் போது அதற்கு என்ன பொருள்? நல்ல வீடு உருவாக்கப்பட வேண்டும் என்பதுதான் அதற்கு உண்மையான அர்த்தம். வீடு முன்னேறினால், பின் நகரமும், கிராமமும் முன்னேறுகின்றன. நகரமும், கிராமமும் முன்னேறினால், தானாக நல்ல நாடு உருவாகிறது.

பொது வாழ்வுக்கு வரும் பெண்களுக்கு இரு பங்கு கஷ்டமான பணியுள்ளது. ஏனெனில், அவர்கள் பொதுப் பணியையும் செய்ய வேண்டும். அதே நேரத்தில் வீட்டுப் பொறுப்பையும் புறக்கணித் தல் கூடாது. வேறு வேலைகளை மேற்கொள்வதால் அவர்கள் தங்களது வீடுகளைப் புறக்கணிக்கக் கூடாது. இரு பணிகளையும் சிறப்புடன் செய்ய நீங்கள் தயாராக இருக்க வேண்டும். சில பெரிய பணிகளும் உண்டு. ஆனால் சிறிய வேலைகளை நன்றாக செய்து முடிப்பவர்கள்தான், பெரும் பணிகளை ஏற்க முடியும்.

எந்தவிதச் செலவும் இல்லாமல், எந்தவித போக்குவரத்தும் இல்லாமல், ஒவ்வொரு பெண்ணும் தனது சுற்றுப்புறத்தை முன்னேற்ற முடியும். தனக்குப் பக்கத்தில் வசிப்பவர்களுக்கு கற்றுக் கொடுப்பது, அதாவது படிக்கக் கற்றுத் தருவது, வீட்டை

யும் தெருக்களையும் சுத்தமாக வைத்திருக்கக் கற்றுத் தருவது, குழந்தைகளை எவ்வாறு நல்ல முறையில் பராமரிப்பது அல்லது சத்துணவு தருவது குறித்து சொல்லித் தருவது ஆகிய பணிகளைச் செய்யலாம். நமது அன்றாட வாழ்க்கையில் நாம் பல காரியங்களைச் செய்கிறோம். அதையே, நமது வேலை செய்யும் பகுதிகளை விரிவாக்கிக் கொண்டால், அதுவே மிகப் பெரிய தேச சேவையாக அமையும்.

இன்னும் சிலப் பிரச்சினைகள்—மிக ஆழமான பிரச்சினைகள் உள்ளன. அதாவது, நாம் சமுதாயத்தினை மாற்ற விரும்பினால், இந்தப் பணியையும் வீட்டிலும், குடும்பத்திலும் இருந்தே தொடங்க வேண்டும். மூட நம்பிக்கைகளையும் குறுகிய மனப் பான்மைகளையும், காந்திஜி வழக்கமாக குறிப்பிடுவதுபோல ஆண் பெண் இருபாலரிடையே உள்ள இயற்கைக்கு மாறுபாடான செயற்கையாக உருவாக்கப்படும் உலகத்தையும் எதிர்த்து நாம் போராட வேண்டும். நமது தேசத்தில் வெவ்வேறு இனங்கள், வெவ்வேறு மதங்கள், வெவ்வேறு மொழிகள் உள்ளன. அத்துடன் பல்வேறு பழக்க வழக்கங்கள், நடை உடைகள், உணவுப் பழக்கங்கள் போன்ற் பல உள்ளன. நமது பாரம்பரியம் பொறுமை மிக்கது என்பதை நாம் அறிய வேண்டும்.

## வேற்றுமையில் ஒற்றுமை

நாம் ஒரே மாதிரியான அமைப்பையோ, கட்டுப்பாடான வாழ்க்கையையோ விரும்பவில்லை. இந்த மாறுபாடுகள் நம்து வாழ்க்கையை வளமாக்குகிறது. நமது நாட்டை மேலும் இனிமையானதாக்குகிறது என்று நாம் நம்புகிறோம். இதற்கு என்ன பொருள் என்றால், ஒரு பிரிவினர், ஒரு மாநிலம், ஒரு மதம், ஒரு மொழி பிறருடன் அமைதியாக வாழக்கற்றுக் கொள்ள வேண்டும், மற்றவர்களுடன் ஒத்துழைக்கக் கற்றுக்கொள்ள வேண்டும் என்பதே ஆகும்.

இதுதான் தேசத்தை உருவாக்கவேண்டிய அருமையானநேரம். நமது சுதந்திரத்தை உறுதிப்படுத்திட, தேசத்தை பலமுள்ளதாக்க, வெளியிலிருந்து வரும் அபாயத்தையோ, உள்நாட்டுக் குழப்பத்தையோ, உள்நாட்டின் அல்லது வெளிநாட்டிலிருந்து செல்வாக்குள்ள கூட்டங்களின் மூலமாக உருவாக்கப்படும் நெருக்கடியையோ சமாளிக்க இதுவே நல்ல நேரம். எனவே, நீங்கள் இளைய தலைமுறையினரை போராட்டப் பாதையில் செல்ல விடாமல், அல்லது பலாத்காரம், அல்லது குற்றம் அல்லது மேற்கு நாடுகளில் குறிப்பிடப்படும் ''கற்கால சமுதாயம்'' நோக்கிச் செல்ல விடாமல் நல்வழிப்படுத்த வேண்டும்.

இன்றைய இளைஞர்கள் சரித்திரத்தின் ஏடுகளில் பிரகாசிக்க வேண்டும் என்று நாம் விரும்புகிறோம். நீங்கள் அவர்களை ஆக்கப் பணிகளிலும் புதிய முயற்சிகளிலும், வழிகாட்டினால்தான் இது

நிறைவேற முடியும். அவர்களுக்கு தனக்குத்தானே உதவவும் சுற்றுப்புறத்தில் உள்ளவர்களுக்கு நம்மைவிட தாழ்வான நிலையில் உள்ளவர்களுக்கும் உதவும்படி கற்றுத் தாருங்கள்.

கடந்த சில ஆண்டுகளாக தமிழ் நாட்டில் தவறான கோஷங்களை ஊக்குவிக்கவும், தமிழ்நாட்டை மட்டுமின்றி நமது நாடு முழுவதையும் பலவீனப்படுத்தக்கூடிய நம்பிக்கையில் ஈடுபடுத்தவும் வேண்டுமென்றே முயற்சி எடுக்கப்பட்டு வந்தது.

தமிழ் ஒரு அழகான மொழி, பழமையான மொழி. சமீபத்தில், சுமார் 2 ஆண்டுகளுக்கு முன்னதாக, வெகு தொலைவிலுள்ள செனகல் என்ற ஆப்பிரிக்க நாட்டின் ஜனாதிபதி இங்குநம்மிடையே வந்திருந்தார். அவர் சென்னையையும் சுற்றிப் பார்த்தார். தற்போது அவர்களது நாட்டில் தமிழையும், சமஸ்கிருதத்தையும் கற்றுக் கொடுக்க அவர்கள் விரும்புகிறார்கள்.

## மொழித் திணிப்பு கிடையாது

எந்த மொழியானாலும் தன்னுடைய சுயபலத்திலேயே வளருகிறது. மத்தியிலுள்ள நாங்கள் எல்லா பிராந்திய மொழிகளும் வளருவதற்கு உதவுவதைக் கொள்கையாகக் கொண்டிருக்கிறோம். எந்த மொழியானாலும் அல்லது எந்த நபரானாலும் மற்ற மொழியை அல்லது மற்றவர்களைக் கீழே தள்ள முயற்சிப்பதன் மூலம் வளர்ந்து விடமுடியாது. தமிழ் நாட்டின் மீதோ அல்லது வேறு மாநிலத்தின் மீதோ எந்த மொழியையும் புகுத்த நாங்கள் விரும்பவில்லை. ஆனால், உங்களுக்கு எவ்வளவு அதிக மொழிகள் தெரிகின்றனவோ, அவ்வளவு அதிக வாய்ப்புக்கள் உங்களுக்குக் கிடைக்கும்.

தமிழ் நாட்டுப் பெண்கள் ஏற்கனவே சமூக நலப் பணிகள், சமூக சேவைகள் ஆகிய பல்வேறு துறைகளில் வழிகாட்டியுள்ளார்கள், எனவே, புதிய தமிழ்நாட்டை, புதிய இந்தியாவை உருவாக்கும் பணியிலும் அவர்கள் வழிகாட்டுவார்கள் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. இங்கே அமர்ந்திருக்கும் ஆடவர்கள் இப்பணியில் அவர்களுக்கு முட்டுக்கட்டையாக இருக்காமல் உதவுவார்கள் என நம்புகிறேன்.

ஆண்கள் சில சமயங்களில் என்ன சொல்லுவார்கள் என்பது உங்களுக்குத் தெரியும். பெண்களால் பேசாமலிருக்க முடியாது; ஒற்றுமையாகப் பணியாற்ற முடியாது என்று அவர்கள் சொல்லுவார்கள். ஆனால், இந்த இரண்டு விஷயங்களிலும் அவர்களது கணிப்பு முழுவதும் தவறு என்பதனை நாம் நிரூபித்து விட்டோம்.

தமிழ் நாட்டில் வறட்சியால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக வறட்சி நிதிக்கு நீங்கள் நன்கொடை வழங்கியதற்காக நான் உங்களுக்கு நன்றி கூறுகிறேன். எனது பேச்சையும், பிற பேச்சாளர்கள் கூறியதையும் பொறுமையோடு இருந்து கேட்டதற்கும்

உங்களுக்கு நன்றி கூறிக்கொள்கிறேன். இந்தியாவின் எல்லாப் பெண்கள் சார்பிலும் உங்களுக்கு நான் வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறேன். உங்கள் அனைவருக்கும், உங்கள் குடும்பத்தினருக்கும், அழகான இந்த மாநிலத்துக்கும் ஒளிமயமான, வளமான எதிர்காலம் உருவாக எனது நல்வாழ்த்துக்கள்.

## சிந்தனைக்கோர் கேள்வி

ஒரு முக்கியமான குறிப்பினைச் சொல்ல மறந்து விட்டேன். சுதந்திரத்திற்குப் பின் இந்தியாவில் செயலாக்கப்பட்ட பணி பிரம்மாண்டமானது என்பதை நீங்கள் அறிவீர்கள். நாம் சிறிய நாடாக இருந்திருப்பின், இதற்குள்ளாக முழுவதுமாக மாற்றப் பட்டிருப்போம். சுதந்திரத்திற்காகப் போராடும்போது நாம் 32 அல்லது 35 கோடி மக்கள். ஆனால் இன்று 61 கோடி. எனவே இதனைத் தொடர்வோமானால் இந்த விகிதத்தில் மக்கள் பெருக்கம் போய்க்கொண்டிருந்தால், ஆடவர் எவ்வளவு செயலாற்றினாலும், பெண்கள் எவ்வளவு பணியாற்றினாலும், இளைஞர்கள் எவ்வளவு பணியாற்றினாலும், அவை அனைத்தும் மக்கள் கடலில் சங்கமம் ஆகிவிடும்.

எனவே நமது சந்ததியினரின் பிற்காலத்தைப் பாதுகாக்க, அளவான குடும்பம் அமைத்திட நாம் நடவடிக்கை மேற்கொண்டாக வேண்டும். இன்று நமது மக்களை நாம் ஏற்றுக் கொள்ளுகிறோம். நமது மக்கள் தொகை இன்னும் சிறிது கூடினால் கூட நாம் அவர்களை ஏற்றுக்கொள்ளுவோம். ஆனால் இதே வீதத்தில் வளருமேயானால் ஒருநாள் வரும்; அப்போது எவ்வளவு முயற்சி எடுப்பினும் மக்களுக்குச் சரியாக உணவளிக்க நம்மால் முடியாது; அப்போது அங்கே போதுமான நிலமிருக்காது. சுற்றி வருவதற்கு வேறு எதுவுமேயிருக்காது. எனவே ஆண்களும் பெண்களும் இந்தக் கேள்வி குறித்து தீவிரமாகச் சிந்தித்து, இந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும்.

வணக்கம்! நன்றி!

[மதுரையில் 15—9—76 அன்று நடைபெற்ற மகளிர் கூட்டத்தில் இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்களின் உரை]

# கோயமுத்தூர் பொதுக்கூட்டத்தில்

சகோதர, சகோதரிகளே!

இங்கு வந்ததிலும் கோவை மக்களாகிய உங்களையெல்லாம் விமான நிலையத்திலிருந்து சாலையின் இருமருங்கிலும், இதோ என் முன்னாலும் காண்பதிலும் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். ஆனால், இந்தப் பகுதி பூராவும் வறட்சியினால் பாதிக்கப்பட்டுள்ள நேரத்தில் நான் வந்துள்ளேன். நீங்கள் படும் துயருக்காக என்னுடைய ஆழ்ந்த அனுதாபத்தை மட்டுமின்றி, இந்திய மக்கள் அனைவருடைய அனுதாபத்தையும்கவலையையும் நான் உங்களுக்குத் தெரியப்படுத்திக் கொள்கிறேன். இயற்கையின் உற்பாதங்களை நாம் தடுக்க முடியாது. ஆனால் இந்த நாடு சுதந்திரம் பெற்றதிலிருந்தே, நம்முடைய மக்கள் இப்படிப்பட்ட சவால்களை நிமிர்ந்து நின்று சமாளிக்கின்ற வகையில், நம்முடைய சமுதாயத்திற்கு பலமானதொரு அடித்தளம் அமைப்பதே நம்முடைய பெரும் முயற்சியாக இருந்து வந்துள்ளது. நம்முடைய திட்டங்கள் அனைத்தும் செயல்முறைகளும் இந்த இலட்சியத்தையே அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளன. ஒவ்வொரு முறையும் தொடர்ந்து இப்படி உற்பாதங்கள் ஏற்படும்பொழுதெல்லாம், நாடு அதை அதிக பலத்துடன் சமாளித்துள்ளதை நாம் காண்கிறோம். இதுவே நம்முடைய நோக்கம் வெற்றி பெற்றுள்ளது என்பதற்கு அத்தாட்சி. மக்களுடைய கஷ்டங்களையும் துயர்களையும் ஓரளவுக்கு நாம் குறைக்க முடிகிறது. ஆனால், கல்வி, பாசனம், விவசாயம் போன்ற மனிதனின் அன்றாட வாழ்க்கையைத்தொடுகின்ற பெரும்பாலான விஷயங்கள் அனைத்தும் மாநில அரசுகளின் அதிகாரப் பட்டியலில் உள்ளன. மாநில அரசுகள் அவற்றை எப்படி நிறைவேற்றியுள்ளன, பிரதேச மக்கள் போதிய வலிவூட்டம் பெற்றுள்ளார்களா, இல்லையா என்பதைப் பொறுத்தே இவை வெற்றி பெற்றுள்ளனவா இல்லையா என்பதைச் சொல்ல முடியும்.

**சாதனைகள் எப்படிச் சாத்தியமாயின !**

1966-ஆம் ஆண்டில், இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் கடுமையான வறட்சி நிலவியபொழுது, உணவுத் தானியங்களை அதிக அளவுக்கு நாம் இறக்குமதி செய்ய வேண்டி வந்தது. ஆனால் 1972-லும் 1973-லும், நாட்டின் மிகப் பெரிய பரப்பளவு வறட்சியால் பாதிக்கப்பட்டபொழுது, சிறிதளவே உணவுத் தானியங்களை இறக்குமதி செய்து, எல்லா மக்களுக்கும் உணவுத் தானியங்கள் போய்ச் சேரும்படியாக நம்மால் பார்த்துக் கொள்ள முடிந்தது. கடந்த ஆண்டு மகசூலில் நாம் பெருத்த அளவில் உணவு உற்பத்தியினை ஈட்டியுள்ளோம் என்பது உங்களுக்குத் தெரிந்ததே. 18 மில்லியன் டன்கள் உணவுத்தானியங்கள் உபரியாக நமக்குக் கிடைத்தது.

அதேபோல், தொழில் உற்பத்தியிலும், மற்ற மற்ற உற்பத்தித் துறைகளிலும், நாம் குறிப்பிடத் தக்க முன்னேற்றத்தினைக் கண்டுள்ளோம். இது குறித்து ரிசர்வ் வங்கி ஓர் அறிக்கை வெளியிட்டுள்ளது. உலக வங்கி நல்ல முறையில் சாதகமாகவே இதைப் பற்றி குறித்துள்ளது இது எப்படிச் சாத்தியமானது? உணவு உற்பத்திப் பெருக்கத்துக்கு பருவநிலை நன்றாக அமைந்திருந்தது ஒரு காரணம். வடக்கே நல்ல மழை இருந்தது. அதைவிட விவசாயிகளுக்கு விவசாயத்துக்கு அரசினால் கொடுக்க முடிந்த விவசாயக் கருவிகள் போன்ற உதவிகளே இதற்கு மிக முக்கிய காரணம். இந்தநாட்டு உழவர் பெருமக்களை நான் பாராட்ட விழைகிறேன். ஏனெனில், விவசாயத்தில் புதிய முறைகளைக் கையாள அவர்கள் இசையாமல் இருந்திருந்தாலோ, நாம் கொடுத்த உதவிகளைப் பயன்படுத்தமாலிருந்திருந்தாலோ, நாம் உணவு உற்பத்தியில் வெற்றியினை ஈட்டியிருக்க முடியாது. தொழில் துறையிலும் இதே நிலைதான்.

## நாட்டின் நலனுக்கு எதிரான செயல்கள்

இரண்டாண்டுகளுக்கு முன்னால் இந்தியப் பொருளாதாரமே ஸ்தம்பித்துப் போய்விடுமோ என்று அச்சப்படுகிற நிலை இருந்தது. எங்கு பார்த்தாலும் நம்முடைய தொழிற்சாலைகளில் வேலைநிறுத்தங்களும், கதவடைப்புகளும், மூடிவிடுதலும் நடைபெற்றன. இன்றியமையாப் பண்டங்கள் அனைத்துக்கும் பற்றாக்குறை ஏற்பட்டது. ஆனால், அப்பொருள்களை நாம் உற்பத்தி செய்யாமல் இருந்தோம். நம்முடைய பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் என்ன நிலை தெரியுமா? நம்முடைய இளஞ்சிறார்கள்—பள்ளிகளிலும், கல்லூரிகளிலும், பல்கலைக் கழகங்களிலும் உள்ள மாணவர்களும் மாணவிகளும் —படிப்பில் கவனம் செலுத்தாமல், எதிர்காலத்துக்கு தங்களை உருவாக்கிக் கொள்ளாமல், கிளர்ச்சிகளில் கலந்து கொள்ளுமாறு அவர்கள் அழைக்கப்பட்டார்கள். அரசியல் வீதிகளுக்குக் கொண்டுவரப்பட்டது. முழுமையான புரட்சி என்ற பெயரால், மிகவும் பிற்போக்குத்தனமான சக்திகளுடன் தங்களைத் தாங்களே ஈடுபடுத்திக் கொண்டு, நம்முடைய சுதந்திரப் போராட்டத்துடன் துவங்கிய உண்மையான இந்தியப் புரட்சியின் வளர்ச்சிக்கு ஊறு விளைவித்துக் கொண்டிருந்தார்கள். சுதந்திரப்போராட்டத்துடன் துவக்கப்பட்ட உண்மையான புரட்சி இன்னும் முற்றுப் பெறவில்லை. எல்லா மக்களுக்கும் உண்மையான சுதந்திரம் கிடைக்கப் பெறும் பொழுதுதான், இப்புரட்சி முற்றுப்பெறும். நம்முடைய சமுதாயத்தில் இன்னும் அதிகமான சமத்துவத்தை நாம் கொண்டு வரும்பொழுதுதான் இது முடிவடையும். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களை ஜனநாயகத்தின் பேரால் ராஜிநாமா செய்யும்படி அவர்கள் மிரட்டினார்கள். சட்டசபைகளைக் கலைக்குமாறு நெருக்கினார்கள். இறுதியாக மத்திய அரசைப் பலவீனப்படுத்தவும் அரசுப் பணிகளே நடைபெறாமல் அரசை ஸ்தம்பிக்கச் செய்யவும் நாடு தழுவிய கிளர்ச்சி நடத்த வேண்டுமென அவர்கள் விரும்பினார்கள். பெரிய பொருளாதார நெருக்கடியில் நாடு இருந்தபொழுது, இந்தச் செய்கைகள் நிச்சயமாக

நம்முடைய நாட்டை மிகவும் பலவீனப்படுத்தியிருக்கும். சமுதாயத்திலோ அல்லது அரசியல் வாழ்க்கையிலோ படிந்துள்ள எல்லாத் தீமைகளையும் நம்மால் அகற்ற இயலவில்லை. ஆனால் இவைபோன்ற பயனற்ற உருப்படியில்லாத கிளர்ச்சிகளை, வெத்து ஆர்ப்பாட்டங்களை நம்மால் தடுத்து நிறுத்த முடிந்தது. நம்முடைய மக்களிடையே ஓரளவு பொறுப்புணர்ச்சியினையும்—ஒற்றுமை உணர்வினையும், கட்டுப்பாட்டுணர்வினையும் நம்மால் ஏற்படுத்த முடிந்தது.

## நாட்டின் உருவமே மாறியது!

முழுமையான அளவுக்கு இல்லையென்றாலும், மக்களுடைய எண்ணப்போக்கிலே ஏற்பட்ட இந்த மாற்றத்தினால் இந்தியாவின் உருவத்தை மாற்றியமைக்க முடிந்தது. ஒரே நிலையில் ஸ்தம்பித்துப் போய்க் கிடந்த—தேங்கிக் கிடந்த பொருளாதாரத்தை வேகமானதாகவும் வளர்ச்சி பொருந்தியதாகவும் மாற்றியமைக்க இதனால் முடிந்தது. ஆனால் நம்முன்னே உள்ள பணியானது மிகப் பிரம்மாண்டமானது. ஆகவே எல்லாம் முடிந்துவிட்டது என்று நாம் திருப்தியடைந்து வாளா இருந்துவிட முடியாது. பணவீக்கம் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது. ஆனால் ஏதாவது ஒரு வாய்ப்புக் கிடைக்குமா—எங்காவது பணவீக்கத்தின் சாயல் தென்படுமா என்று மறுபடியும் தலைதூக்க அது காத்துக் கொண்டு கிடக்கிறது. பணவீக்கம் என்றால் வேறு என்ன? விலைவாசிகள் ஏறுகின்றன; பணத்தின் மதிப்பு குறைந்து போகிறது. இதுதானே? பணவீக்கம் மக்களில் எல்லாப் பிரிவினரையும் தாக்குகிறது. நிலையான வருமானம் பெறுபவர்களையும்—ஏழை மக்களையும், மாதர்களையும், குடும்பப் பெண்டிர்களையும் பணவீக்கம் அதிகமாகத் தாக்குகிறது. இதனால்தான், மக்களின் தேவைகள் நமக்கு முழுக்க முழுக்கத் தெரிந்திருந்தும், பெரிய பெரிய திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்தியிருந்தாலும், அரசுத் துறையில் பணத்தைச் செலவழிப்பதில் நாம் மிக மிக ஜாக்கிரதையாக இருக்க வேண்டியுள்ளது. ஐந்தாண்டுத் திட்டத்தில் எஞ்சியுள்ள இரண்டாண்டுகளில் பணி நடைபெற்று வரும் திட்டங்கள் பேரில் மட்டுமே நாம் கவனம் செலுத்தி வருகிறோம். மிக முக்கியமாக, அதாவது நீர்ப்பாசனத் திட்டங்கள், மின்சாரத் திட்டங்கள் மீது கவனம் செலுத்தி வருகிறோம். எல்லா வகையான ஆதாரங்களை வலியுறுத்தி அவைகளை அதிக அளவில் திரட்டுவதை ஒவ்வொரு மாநிலமும் செய்யவேண்டும். நிறைய ஆதாரங்களை நாம் பெறுவோமேயானால், பல திட்டங்களை நாம் எடுத்துச்செய்ய முடியும். இல்லையேல் அவைகளைத் தள்ளிப்போட வேண்டி வரும். ஆனால், நாட்டு மக்களில் எந்தப் பிரிவினராவது தனிப் பிரச்சினையினால் பாதிக்கப்பட்டு சிரமங்களை அனுபவித்தால், அவர்களுக்கு உதவி புரிய அனைவரும் முன்வர வேண்டும்!

## உண்மையான சுதந்திரத்தின் உட்பொருள்

நம் வாழ்வில் ஒவ்வொரு விநாடியும் கண்ணிமையைக் காப்பதுபோல் சுதந்திரத்தை நாம் பாதுகாக்க வேண்டியுள்ளது.

தவறுமேயானுல், அதன்மீது களங்கமாக நிழல் படிந்துவிடும். மகாத்மா காந்தியும் மற்ற பெரிய தலைவர்களும் நம்மோடு இருந்த அந்தக் காலத்திலேயே சுதந்திரம் என்பது வெறும் அரசியல் சுதந்திரம் மட்டும் இல்லை என்பதை நமக்கு மகாத்மா காந்தி தெளிவுபடுத்தியுள்ளார். சுதந்திரம் என்ருல் வேறு என்ன பொருள்? இந்திய மக்கள் அனைத்துப் பிரிவினருக்கும் ஒரு புது வாழ்வு அளித்தலே சுதந்திரத்தின் உட்பொருள்; தாத்பரியம் ஆகும். மக்களிடையே உள்ள ஏற்றத் தாழ்வினைப் போக்குதல், மேலும் அதிக வாய்ப்புகளை மக்களுக்குக் கிடைக்கும்படிச் செய்தல், மூடநம்பிக்கையிலிருந்தும், இருள் கப்பிய எண்ணங்களிலிருந்தும் விடுதலை பெறுதல்—இவை அத்தனையும் சுதந்திரத்தின் பாற்படும். மக்களுக்கு அப்படிப்பட்ட அடிப்படைத் தேவைகளை வழங்குவது மட்டுமல்ல; அவர்களுடைய அன்றாடத் தேவைகளைப் பூர்த்தி செய்தல் மட்டுமல்ல சுதந்திரம்! அதற்கும் மேற்பட்ட உன்னதக் கருத்தினை உள்ளடக்கியது சுதந்திரம்!

மக்கள் தங்களுடைய வாழ்வின் எல்லையை விரிவுபடுத்திக் கொள்ள—விசாலமாக்கிக் கொள்ள வாய்ப்பினைப் பெற்றிருத்தல், ஆத்மீகத் துறை உட்பட எல்லாத் துறைகளிலுமே மக்களை உயரிய நிலைக்கு உயர்த்துதலுமே சுதந்திரத்தின் உட்பொருளாகும். விஞ்ஞானமும், ஆத்மிகமும் கலந்த ஒரு கலவையான சமுதாய அமைப்பினை நாம் பெற்றிருத்தல் வேண்டும் என என் தகப்பனுர் கூட சொல்லி வந்தது உங்களுக்குத் தெரியும். இதை எப்படி நாம் அடைவது? ஏதோ ஒருவாழ்வின் காலகட்டத்தில் அடைந்துவிடக் கூடியதல்ல இது. ஆனுல், நாட்டை இந்த உயரிய பாதையில் கொண்டு செல்ல அந்தப் பாதையிலே சில முக்கியமான அடிச்சுவடுகளை நாம் இந்த நீண்டபயணத்தில் எடுத்து வைத்துள்ளோம். இப்படிச் செய்வதன் மூலம் இந்த நாட்டை சுதந்திர ஒளிவீசும் சொர்க்கபூமியாக மாற்றியமைக்கும் பணியானது தொடர்ந்து, பாரம்பர்யம்—பாரம்பர்யமாக நடைபெற வழிவகுத்துத் தந்தவர்களாவோம் நாம். இந்த நாட்டிற்கு வலுவான ஓர் அடித்தளத்தினை நாம் உருவாக்கியுள்ளோம் என்று நான் முன்பு குறிப்பிட்ட பொழுது, முன்னேற்றப் பாதையில் பல கதவுகளை நாம் திறந்துவிட்டிருக்கிருேம். இதற்கு முன்பு மூடிக்கிடந்த பலபகுதிகளைத் திறந்து வைத்துள்ளோம்—இருளைப் போக்கி ஒளிவீசச் செய்துள்ளோம் என்ற பொருளில்தான் அப்படிக் குறிப்பிட்டேன்.

## எத்தனைப் பிரச்னைகளைச் சமாளித்தோம்!

ஏழைமக்கள் எல்லோருக்கும் உதவி புரிய நம்மால் இயலவில்லை. ஆனுல் நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகளின் மூலமாகவும், வேறு பல திட்டங்களின் மூலமாகவும் இலட்சோப இலட்ச மக்களுக்கு உதவி கிட்டுமாறு நாம் செய்துள்ளோம். மேலும் மேலும் அதிக மக்களுக்கு இந்த வாய்ப்புகள் கிடைக்கச் செய்ய, பல ஆண்டுகள், கடினமான, உறுதியான உழைப்பினுல்

தான் முடியும். ஏனெனில், இலட்சக்கணக்கான மக்களுக்கு நாம் உதவி புரிந்தாலும் கூட, இந்த நாட்டின் அறுபது கோடி மக்கள் சமுதாயத்துடன் ஒப்பிடும்பொழுது அவையெல்லாம் கடலில் கரைத்த பெருங்காயம்தான்! ஆனல், மனித வாழ்வை மேம் படுத்தும் இந்தப் போராட்டத்தில் நாம் ஈடுபட்டிருக்கும்பொழுது, பல சம்பவங்கள் இங்கே நடந்துவிட்டன. வெளிநாட்டு ஆக்கிர மிப்பினை நாம் சமாளிக்க வேண்டியிருந்தது. பலதரப்பட்ட இயற்கை உற்பாதங்களை நாம் சமாளிக்க வேண்டி வந்தது. நம் மக்களிடையே, எதிர்க் கட்சிகளைச் சேர்ந்தவர்களும், கட்சி களில் சேராதவர்களுமாக சிலர்—நம்முடைய திட்டங்களையும் கொள்கைகளையும் ஒத்துக் கொள்ளாத அவர்கள்—மாறுதல் வேண்டாம் என்று பகிரங்கமாக அறிவிக்க திராணியற்ற சிலர்— நம்மிடையே உள்ளனர். ஏழைகளுக்கு உதவி செய்யக் கூடாது என்று அவர்களால் சொல்ல முடியவில்லை. ஆகவே அதை விட்டு விட்டு மற்ற மற்ற கோஷங்களை அவர்கள் கண்டுபிடித்தார்கள். மக்களை இந்தப் பாதையிலிருந்து திசை திருப்ப வேறு பல காரண காரியங்களை அவர்கள் கண்டு பிடித்தார்கள். ஒரு தடவையல்ல, பல தடவை, பல நூறு தடவை, நாம் திட்டவட்டமாக அறுதி யிட்டு எல்லா மேடைகளிலும்—நாடாளுமன்றத்திலும், பொதுக் கூட்டங்களிலும், தனியார்க் குழுக்களிடமும்—மக்கள் மன்றம் அனைத்திலும்—எந்த மக்கள் மீதும் எந்த மாநிலத்தின் மீதும் எந்த ஒன்றையும் பலவந்தமாகத் திணிப்பதில் எள்ளளவும் எங்க ளுக்கு நம்பிக்கை கிடையாது என்று முரசறைந்துள்ளோம். அழகு இலக்கிய வளத்தை தன்னகத்தே கொண்டுள்ள தமிழ் மொழியினை இந்திய நாட்டின் பழம்பெரும் மொழிகளில் ஒன்ருக நாங்கள் கருதுகிறேம். இந்தியாவின் மற்ற பிரதேச மொழிகள் போலவே தமிழ் மொழியும் மேலும் வளம் பெற அதற்கான உதவிகளைச் செய்வதே எங்கள் கொள்கையுமாகும்.

மாநில சுயாட்சி என்றல் என்ன பொருள்? மத்திய அரசிட மிருந்து மாநிலத்திற்கு எந்தவித உதவியும் தேவையில்லை என் பது அதன் பொருளா? மற்ற மாநிலங்களோடு இந்த மாநிலம் ஒத்துழைக்காது அவைகளிடமிருந்து ஒத்துழைப்பையும் பெருது என்று பொருளா? இன்றைக்கு மற்ற மாநிலங்களிலிருந்து தமிழ் நாட்டுக்குத் தண்ணீர் தேவைப்படுகிறது. ஆனல் மற்ற மாநி லங்கள் அவைகளுக்கும் மாநில சுயாட்சி இருக்கிறது. அப்படி யிருக்க, ஏன் அவை தமிழ்நாட்டுக்குத் தண்ணீர் கொடுக்க வேண் டும்? மாநிலங்கள் அவைகளுக்குள்ளாகவே ஒருங்கிணைந்து ஒன்றுக் கொன்று நெருங்கிய ஒத்துழைப்புடன் இயங்கி வந்தால்தான், அத் துடன் மாநிலங்களுக்கும் மத்திய அரசுக்குமிடையே அப்படிப் பட்ட ஒத்துழைப்பு மனப்பான்மை, ஒருங்கிணைந்து பணியாற்றும் தன்மை நிலவினல்தான், நாடு முன்னேற்றம் காண முடியும்.

### சுமுகமாக பிரச்னை தீரவேண்டும்

நம்முடைய அரசியல் சட்டத்திற்கு சில திருத்தங்கள் கொண்டு வருவது என நாம் குறிப்பிட்டபொழுது, தண்ணீரை

ஒரு தேசியச் சொத்தாக அறிவிக்க வேண்டும் என்று பெருமளவில் கோரிக்கை எழுப்பப்பட்டது. ஆனால், இந்த மாநிலத்தில் செய்யப்பட்ட தவறான பிரச்சாரத்தின் காரணமாக, எல்லா மாநிலங்களும் இந்தக் கருத்தை எதிர்த்தன. உண்மையில் பார்க்கப் போனால், எந்த விஷயத்தையும் மத்திய அரசின் அதிகார வரம்புக்குள் கொண்டு வருவதினால், மாநிலத்திடமிருந்து எந்த அதிகாரமும் எடுக்கப்பட்டு விடுவதில்லை. மேலும் இந்த ஒருங்கிணைப்புப் பணியினை மத்திய அரசு நல்ல முறையில் ஆற்ற, இது மத்திய அரசுக்கு உதவியாக இருக்கும். எது எப்படியானாலும், இந்தப் பிரச்னையைத் தீர்க்க நம்மாலான முயற்சிகள் அனைத்தையும் நாம் செய்து கொண்டிருக்கிறோம். இங்கே பேசிய பலர் இதைப் பற்றிப் குறிப்பிட்டு மற்ற மாநிலங்களிலிருந்து எப்படித் தண்ணீரைக் கொண்டு வருவது என்பது பற்றிக் குறிப்பிட்டுள்ளார்கள். மூன்று மாநிலங்களும் இணைந்து விரைவில் இந்தப் பிரச்னைக்குத் தீர்வு காணும் வகையில் வல்லுநர் குழுவினரால் இதற்காக முயற்சி எடுக்கப்படும் என நாம் நம்புகிறோம். கர்நாடகத்திலிருந்து உங்களுக்குத் தண்ணீர் தேவையாக இருக்கிறது. கர்நாடகத்திற்குக் கேரளத்திலிருந்து மின்சாரம் தேவையாக உள்ளது. கேரளத்து மின்சாரம் தமிழ்நாட்டின் மூலமாகத்தான் கர்நாடகத்திற்குச் செல்ல வேண்டியுள்ளது. ஆக, இந்தப் பிரச்னைகள் எல்லாவற்றிற்கும் தீர்வு காண வேண்டும். இந்தப் பிரச்னை திருப்திகரமான சுமுகமான முறையில் தீர்த்து வைக்கப்படும் என நான் மனப்பூர்வமாக நம்புகிறேன்.

## பரஸ்பர ஒத்துழைப்பு—நாட்டின் பொதுவான வளர்ச்சி

இந்த விஷயத்தில் மட்டுமில்லாமல், மற்ற விஷயங்களிலும் நாம் முயற்சி செய்து ஒருவரோடொருவர் ஒத்துழைப்புடன் பரஸ்பரம் விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையையும் உருவாக்க வேண்டும். ஒவ்வொரு மாநிலமும் ஓரளவுக்கு அண்டை மாநிலங்களைச் சார்ந்தே உள்ளது. சில சமயங்களில், தனக்குத் தேவையானவற்றைப் பெறுவதில் தூரத்தில் உள்ள மாநிலங்களையும் சார்ந்தே உள்ளன. நம்மிடையே தேசிய உணர்வு இல்லாததினாலும், நாட்டுப் பற்றைத் தோற்றுவிக்க வேண்டும்என்ற எண்ணம் இல்லாததினாலுமே, நாம் அந்நியருக்கு அடிமையாக்கப்பட்டோம். இதனால்தான் தனித் தனியாக இயங்கி வந்த ஒவ்வொரு ராஜாவும்—நவாப்போ அன்றி ராஜாவோ—அவர்கள் ஒவ்வொருவரும் பிரிட்டிஷ்காரர்களால் தோற்கடிக்கப்பட்டனர். இந்திய தேசிய காங்கிரசுடன் இணைந்து மகாத்மா காந்தி அவர்கள் நம் மக்கள் அனைவரிடமும் ஒற்றுமை உணர்வினை—தியாக உள்ளத்துடன் செயலாற்றும் மனப்பாங்கினை, சுயச்சார்பினை உருவாக்காமலிருந்திருந்தால், நம்முடைய சுதந்திரத்தை எந்தக் காலத்திலும் நாம் அடைந்திருக்கவே முடியாது.

## பெரிய நாடாக இருப்பதின் பலன் !

ஒரு பெரிய நாட்டை நாம் சேர்ந்துள்ளது ஒரு பெரிய நன்மையாகும். ஏனெனில், பெரிய நாடாக இருப்பதினால் வாய்ப்புகள்

பெரிய அளவில் உள்ளன. ஒருவருக்கொருவர் உதவி புரிந்து கொள்ள சாத்தியக் கூறுகள் அதிகமாக உள்ளன. உண்மையான சுதந்திரமோ—உண்மையான ஜனநாயகமோ தனி நபர் மீது இந்த நாட்டின் ஒவ்வொரு குடிமகன் மீதும் மிக மிகச் சிறப்பான பொறுப்புகளைச் சுமத்தியுள்ளது. ஏனெனில், உரிமைகளும், சலுகைகளும், கடமைகளிலிருந்தும் பொறுப்புகளிலிருந்துமே எழும்புகின்றன. நம்முடைய வேலைத் திட்டங்களில் சில அரசு நடவடிக்கைகளால் மட்டுமே இயக்கப்படுபவை. ஆனால், பல திட்டங்கள் வெற்றி பெறுவது மக்களுடைய ஒத்துழைப்பும் மக்கள் உஷாராக அவற்றைக் கவனிப்பதிலும் திட்டங்களைச் செயல்படுத்துவதில் மக்கள் ஏற்கும் பங்கினையும் பொறுத்தே யுள்ளது.

நான் எவ்வளவு தூரம் பயணம் செய்கிறேன் என்று என்னால் சொல்ல முடியாது. அநேகமாக உலகில் யாரைக் காட்டிலும் அதிகமாக பயணம் செய்கிறேன்—எப்படியிருந்தாலும் பல மக்களை நான் சந்திக்கிறேன். உலகில் யாரையும் விட நான் அதிகமான அளவில் மக்களைச் சந்திக்கிறேன். இருந்தும், கிராமங்களிலும் —நகர்ப்புறங்களில் சந்து பொந்துகளிலும் என்ன நடக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ளவே என்னால் முடியவில்லை. அங்கங்கு வாழும் மக்கள்தான் அதைப்பற்றி யெல்லாம் தெரிந்து சொல்ல முடியும். அரசு ஊழியர்கள் சரியாகப் பணியாற்றுகிறார்களா, திட்டங்கள் சரியான முறையில் செயல்படுத்தப்படுகின்றனவா, அப்படிச் செயல்படுத்தும்பொழுது ஏதாவது கொடுமையோ, தொந்தரவோ எங்காவது உள்ளதா என்பதையெல்லாம் அங்கங்கு வாழ்கின்ற உள்ளூர் மக்கள்தான் சொல்லமுடியும். இதைத்தான் மக்கள் கூர்மையாகக் கவனித்துப் பார்க்க வேண்டும். தவறு நடந்தால் அதைத் திருத்திக் கொள்ள, அதைக் குறித்து தகவல் எல்லாம் எங்களுக்குத் தெரிவிக்க வேண்டும். செயல் திட்டங்களை நல்ல முறையில் செயல்படுத்தி வெற்றி காண்பது உங்கள் பொறுப்பு என நீங்கள் கருதினால்தான்—அது உங்களுடைய பணி தான்—அப்படி இருந்தால்தான் திட்டங்கள் உண்மையான வெற்றி பெறும்.

## 20 அம்சத் திட்டமே ஒரு முடிவு அல்ல!

ஓர் 20-அம்சத் திட்டத்தினை நாம் அறிவித்துள்ளோம். ஆனால் 20-அம்சத் திட்டமே நம்முடைய வேலைத் திட்டத்தின் முடிவல்ல; எல்லாம் அதில் அடக்கம் என்று பொருளுமல்ல. அதிகமான அளவில் வலியுறுத்தப்பட்ட வேண்டும் என்று நாம் கருதிய சில அம்சங்களை—இவற்றில் சில புதிது; சில பழமையானவை — நம்முடைய கவனத்திற்குக் கொண்டு வருவதுதான் 20 அம்சத் திட்டம். ஆனால் நாட்டிற்கான திட்டம் 20 அம்சத் திட்டத்தை விட மிக மிகப் பெரியது. நம்முடைய இளைஞர் காங்கிரஸ் அதற்கு மேலும் 4 அம்சங்களைச் சேர்த்துள்ளது. ஆனால், அவை கூடுதலாகச் சேர்க்கப்பட்டவை அல்ல. 20 அம்சத் திட்டத்தின்

அடித்தளம் அவை. ஏனெனில், இப்பொழுது வளர்ந்து கொண்டே செல்கின்ற வேகத்தில் நம் ஜனத்தொகை பெருகிக் கொண்டே போனால்—எந்தத் திட்டத்தையும் நாம் செயல்படுத்த முடியாது. இங்கே நடைபெற்றுள்ள பணிகள்—அவை செய்து முடிக்கப்பட்டிருந்தால்—மக்கள் தொகை பெருகாமலிருந்தால்—இப்பொழுது மக்கள் தொகை பெருகிவிட்டது—மக்கள் தொகை இரண்டு மடங்காக ஆகாமல் இருந்திருந்தால்—நாடு நிச்சயமாக நல்ல முன்னேற்றத்தினை அடைந்திருக்கும். நாமோ அல்லது அரசோ நம்முடைய ஜனத்தொகை பெருகிக் கொண்டு போகும் வேகத்திற்கு ஈடு கொடுக்க முடியாது. வளர்ச்சிப் பணியாக இருந்தாலும் சரி—உற்பத்திப் பெருக்கமாக இருந்தாலும் சரி—இந்த வேகத்தில் மக்கள் தொகை பெருகிக் கொண்டே போனால் எல்லா மக்களுக்கும் போதிய அளவு வசதிகளை நாம் எப்படி அளிக்கமுடியும்? நம்முடைய மக்கள் அனைவருடைய நலனையும் நாம் கவனிக்க முடியவில்லையென்றால், நாம் எப்பொழுதும் ஒரு பலமான நாடாக ஆக முடியாது. எப்பொழுதும் மக்கள் தொகைப் பெருக்கம் என்ற இந்தப் பலவீனமான நிலைமை இருந்து கொண்டே நம்மைக் காலை வாரி விட்டுவிடும்.

அதேபோல, நம்முடைய சமுதாயத்தைக் கப்பியுள்ள தீய பழக்கங்களையும் எதிர்த்து நாம் போராடவில்லையென்றால், நமது சமுதாயம் காலத்தோடு ஒவ்வாததாகிவிடும்; பிற்பட்ட நிலைக்குத் தள்ளப்பட்டுவிடும். ஆகவே, இளைஞர் காங்கிரசின் இந்தச் செயல் திட்டங்கள், காங்கிரசின் செயல்திட்டங்களில், நாட்டின் திட்டங்களில் ஒரு கூறே ஆகும். நமக்காக மட்டுமல்ல இந்தத் திட்டங்கள்; உலகம் பூராவுமே இவை முக்கியத்துவம் பெற்று வருகின்றன. நமது பயணத்தில் நாம் இன்னும் நெடுந்தூரம் போகவேண்டியுள்ளது. இந்தப் பணிகளை நாம் முடிப்பதற்கு முன்னமேயே புதிது புதிதாக நல்வாழ்வுத் திட்டங்களைப் பற்றிச் சிந்திப்பதற்கே நமக்கு நேரம் வேண்டியுள்ளது. புதிய பிரச்னைகள் தோன்றிக் கொண்டேயிருக்கின்றன; சில சமயங்களில் சில பிரச்னைகள் புது வடிவம் பெற்று வருகின்றன.

இன்று, நமது நாட்டிலும், வெளிநாடுகளிலும் உள்ள சிலர்,
அரசியல் சட்டத்தில் சில திருத்தங்களை நாம் கொண்டு வர
முனைவது கண்டு ஒரே கூச்சல் எழுப்புகிறார்கள். அரசியல் சட்டத்
தைத் திருத்துவது என்பது என்னுடைய தந்தையார் காலத்
திலேயே நாடாளுமன்றத்தினால் அரசியல் சட்டம் ஏற்றுக்
கொள்ளப்பட்ட ஆண்டிலேயே தொடங்கிவிட்டது என்பதை
உங்களுடைய நினைவுக்குக் கொண்டுவர விரும்புகிறேன். அதன்
பிறகு பல திருத்தங்கள் செய்யப்பட்டு விட்டன. இன்னும்
சொல்லப் போனால் அரசியல் சட்டத்தை முழுக்க முழுக்க திருத்த
வேண்டுமென்ற கோரிக்கையை எழுப்பியதே எங்கள் கட்சி அல்ல.
எங்களை எதிர்ப்பவர்கள்தான் இந்தக் கோரிக்கையை எழுப்பிய
வர்கள். இந்த விஷயங்களைக் கவனிக்க ஒரு குழு அமைக்கப்பட
வேண்டும் என்று போராடியவர்களே அவர்கள்தான். நாம்

இப்பொழுது கொண்டு வரும் திருத்தங்கள் நாடாளுமன்றத்திற்கு மேலும் வலிவூட்ட, ஜனநாயகத்துக்கு வலிவூட்ட மட்டுமே கொண்டு வரப்படுபவை. ஏனெனில் நாடாளுமன்றத்தின் மூலமாக மட்டுமேதான் மக்களுடைய குரலும் மக்களுடைய இதயக் கிடக்கைகளும் உறுதி செய்யப்பட முடியும். அரசியல் சட்டம் தவறான முறைகளில் விமர்சிக்கப்பட்டாலும், அரசியல் சட்டத்தின் நன்னோக்கம் குறித்து நமது தலைவர்கள் கொண்டிருந்த எண்ணங்கள் நிலைநிறுத்தப்படவும் இந்தத் திருத்தங்கள் வழி வகை செய்யும்.

சுதந்திரத்திற்குப் பிறகு, இந்தியா முழுவதிலும் மிகச் சிறந்த நிர்வாகம் நடைபெறும் மாநிலம் என்ற புகழினைத் தமிழ்நாடு பெற்றிருந்தது என்பது உங்களுக்குத் தெரியும். கடந்த ஐந்து ஆண்டுகளில் செய்யப்பட்டதைக் காட்டிலும் அதிகமாக கிணறுகள் தோண்டுதலிலும், ஆழப்படுத்தலிலும், பாசன வசதிகளைப் பெருக்கு வதிலும் நிறைய தொகை இப்பொழுது தமிழ்நாட்டில் செலவழிக் கப்பட்டுள்ளது. சாதி, மொழி, பிரிவினை உணர்வு போன்ற குறுகிய மனப்பான்மையை விட்டொழித்து மக்கள் நாட்டை முன்னேற்றும் திருப்பணிக்கு முழு ஒத்துழைப்பு தரவேண்டும்; வீணே விரயமாகிப் போய்விட்ட பொன்னான நேரத்தை ஈடுகட்டு வதில் தங்களுடைய சக்திகளைத் திரட்டிப் பாடுபட வேண்டும்; மறுபடியும் தமிழ்நாடு தலையாய இடத்தை அடைந்து, மற்ற மாநிலங்களுக்கெல்லாம் வழிகாட்டியாக அமைகின்ற உன்னத நிலையை அமையப் பாடுபட வேண்டும் என நாங்கள் பெரிதும் விரும்புகிறோம்.

## உயர்ந்த எண்ணங்கள்—உயரிய செயல்கள் !

வறட்சியினை—அதனால் ஏற்பட்டுள்ள இடர்ப்பாடுகளை நெஞ்சுரத்துடன் சமாளிக்கும் வறட்சிப் பகுதி வாழ் மக்கள் அனைவருக்கும் என் பாராட்டுதல்கள் ! உங்களைப் பற்றி மிக உயரிய நம்பிக்கை நான் கொண்டுள்ளேன். இந்தியாவின் மிக முக்கியமான நகரங்களில் கோவை மாநகரமும் ஒன்று. கோவை மற்ற ஊர்களுக்கு ஒரு வழிகாட்டியாகவே உள்ளது. ஆக, எப் பணியில் இருந்தாலும், தொழில் புரிந்தாலும், வியாபாரம் செய் தாலும்—விவசாயத்தில் ஈடுபட்டிருந்தாலும், எப்படி எப்படி இருந்தாலும், அனைத்து மக்கள் ஒவ்வொருவரிடமிருந்தும் உயரிய எண்ணங்கள்—சிந்தனைகள்—உயர்ந்த செயல்களை நான் எதிர் பார்க்கிறேன். மிக உயரிய நேர்மையினை, சாதனை குவிப்பதில் மிக உயர்ந்த நிலையினை உங்களிடம் நான் எதிர்பார்க்கிறேன். தமிழ் நாட்டுப் பெண்டிர், குறிப்பாக கோயமுத்தூர் பெண்டிர் இந்தத் துறையிலே தலைசிறந்து விளங்குபவர் என உறுதியாக நம்புகிறேன். உருவாகி வரும் ஆண்—பெண் அடங்கிய இளைய தலைமுறையானது சீரிய குணநலனுடனும், நேர்மையுடனும், உண்மையான நாட்டுப் பற்றுடனும் பரந்த மனப்பாங்குடனும் திகழும்

படியாகப் பார்த்துக் கொள்வது மகளிரின் கடமையாகும். இந்த நெறிமுறைகளை மட்டும் நமது இளைய தலைமுறையினர் கடைப் பிடிப்பார்களேயானல், தமிழ் நாட்டின் புதிய வரலாறு பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படக் கூடிய புகழ் மிக்கதாக இருக்கும் என்பது உறுதி. அழிவுச் செயல்களில் ஈடுபடுவதிலும், தீ வைத்துக் கொளுத்துதல், கல்லெறிதல், தீமையானவற்றை எடுத்துப் பேசுதல் போன்ற சில்லறை விஷயங்களில் ஈடுபட்டே சிலர் சுலபமாக தலைவராகிவிடுகிருர்கள். உருப்படியான திட்ட வட்டமான ஆக்கப் பணி புரிவதன் மூலம் தான் உண்மையான தலைவர்கள் உருவாக்கப்படுவார்கள். அப்படி உண்மையான தலைவர்களை உருவாக்க வேண்டுமென்றுதான் கோயமுத்தூர் மக்களிடமிருந்து, தமிழகத்து மக்களிடமிருந்து நான் எதிர்பார்க்கிறேன்.

நீங்கள் படும் சிரமங்களுக்கெல்லாம் என் அனுதாபங்களை மறுபடியும் தெரிவித்துக் கொள்கிறேன். இன்னலிடையேயும் நீங்கள் காட்டும் துணிச்சலுக்கு, நெஞ்சுரத்துக்கு என்னுடைய பாராட்டுதல்கள்! ஒளிமயமான எதிர்காலம் உங்களுக்கு உருவாக வேண்டுமென்ற என் நல்லாசிகள்!

ஜெய் ஹிந்த்!

[கோயமுத்தூர் பொதுக் கூட்டத்தில் பிரதமர் அவர்களின் உரை — 15—9—76]

தமிழரசு அச்சகம், அரசினர் தோட்டம், சென்னை-2-ல் அச்சிடப்பட்டது.

# தமிழரசு

இலவச
இணைப்பு